

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

செலவுத் தலைப்பு இலக்கம் - 118

கமத்தொழில் அமைச்சு

இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜ்மல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல

தொலைபேசி	011-2034300
தொலைநகல்	011-2868910
மின்னஞ்சல் முகவரி	info@agrimin.gov.lk pmeagri@gmail.com
இணையத்தளம்	www.agrimin.gov.lk

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2021

(2021.12.31 வரை கமத்தொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்)

செலவுத் தலைப்பு இலக்கம் - 118

கமத்தொழில் அமைச்சு

கௌரவ அமைச்சர் – மஹிந்தானந்த அளுத்கமகே அவர்கள்

செயலாளர் - திரு. டீ.எம்.எல் பண்டாரநாயக்க

இராஜாங்க அமைச்சு

சேதன பசளை உற்பத்தி அபிவிருத்தி மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை அபிவிருத்தி, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425/426)

அமைச்சர் - கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ

செயலாளர் - திரு. எம்.என் ரணசிங்க

கால்நடை வளங்கள், பண்ணைகள் அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு

அமைச்சர் - கௌரவ டீ. பீ ஹேரத்

செயலாளர் – திரு. எம்.டப்.எஸ். சமரதிவாகர

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

அமைச்சர் - கௌரவ சதாசிவம் வியாழேந்திரன்

செயலாளர் – வைத்தியர் அமல் ஹர்ஷ த சில்வா

உள்ளடக்கம்

பொருளடக்கம்

கமத்தொழில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு	*i*
உள்ளடக்கம்	*ii*
குறுஞ்சொற்கள்	*iii*
பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் – சுருக்கம் *(கமத்தொழில் அமைச்சு, சேதன பசளை உற்பத்தி அபிவிருத்தி மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை அபிவிருத்தி, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425/426), கால்நடை வளங்கள், பண்ணைகள் அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு, பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு*	*iv-x*
அத்தியாயம் 01 - நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு	*01*
அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு	*05*
அத்தியாயம் 03 – வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை	*125*
அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டிகள்	*135*
அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை	*135*
அத்தியாயம் 06 - மனிதவள விபரம்	*138*
அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை	*141*
அறிக்கை தயாரிப்பதற்குப் பங்களித்தோர் விபரம் – பெயர்ப்பட்டியல்	*149*

சுருக்கங்கள் மற்றும் குறுஞ்சொற்கள்

MOA	கமத்தொழில் அமைச்சு
PPE	கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீட்டு அலகு - கமத்தொழில் அமைச்சு
DOA	விவசாயத் திணைக்களம்
HORDI	பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
NRMC	இயற்கை வள முகாமைத்துவ நிலையம்
FCRDI	களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
ETC	விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிறுவனம்
NPQS	தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை
RRDI	நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
NAICC	தேசிய விவசாய தகவல் மற்றும் தொலைத்தொடர்பு மையம்
DOAD	கமநல அபிவிருத்தித் திணைக்களம்
PDOA	மாகாண விவசாயத் திணைக்களம்
DS	மாவட்ட செயலகம்
AI	விவசாய ஆலோசகர்
ARPAS	விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்
AAIB	கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
PMB	நெல் சந்தைப்படுத்தும் சபை
CARP	இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை
NIPHM	தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம்
CFC	வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
CCF	வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி
HADABIMA	இலங்கை ஹதபிம அதிகார சபை
HARTI	ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்
NFS	தேசிய உரச் செயலகம்
ASMP	விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம்
CSIAP	காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்
FMT	விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம்
SAPP	சிறிய அளவிலான விவசாய வியாபார கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம்
CERC	அவசர நிலைமையில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் களஞ்சிய வசதிகளை உருவாக்குதல்
ICDP	இடைத் தொடர்பாற்றல் அபிவிருத்தி செயற்திட்டம்
4P	அரசு-தனியார்-உற்பத்தியாளர்-கூட்டாண்மை *(4P)*
GAP	சிறந்த விவசாய நடைமுறைகள்
EU	ஐரோப்பிய ஒன்றியம்
FAO	ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய அமைப்பு
SDF	தெற்கு அபிவிருத்தி நிதியம்
AARDO	ஆசிய ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி நிறுவனம்
JICA	ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்
KOICA	கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்
WFP	உலக உணவுத் திட்டம்
KOPIA	சர்வதேச விவசாயத்திற்கான கொரியச் செயற்திட்டம்
AFASI	ஆசிய உணவு விவசாய ஒத்துழைப்புக்கான முன்னெடுப்பு
WB	உலக வங்கி
UNDP	ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
NARP/NUS	பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் தேசிய விவசாயக் கொள்கைத் திட்டம் பற்றிய ஆராய்ச்சிகள்

பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் - சுருக்கம்

கமத்தொழில் அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் - சாராம்சம்

நிதி முன்னேற்றம்

தொ/இல	விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா	செலவு	
			(மில். ரூபா	(%)
1	மொத்த வரவுசெலவு	16,786,821,469	11,924,226,832	71%
1.1	மீண்டுவரும் செலவுகள்	4,959,377,000	4,874,063,428	98%
1.2	மூலதன செலவுகள்	11,827,444,469	7,050,163,404	60%

2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதி முன்னேற்றம்

தெ/இல	நிகழ்ச்சித் திட்டம்	நடைமுறைப்படுத்திய நிறுவனம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதி முன்னேற்றம் %	பொறுப்புகள் மற்றும் கடமைகள்
1	விவசாய இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	DOA	75.00	45.41	61%	1.18
உப கூட்டுத்தொகை - i			75.00	45.41	61%	1.18
1	காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் (CSIAP) - உலக வங்கிக் கடன்	MOA	3210.00	1388.66	43%	0.00
2	சிறிய அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) - விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்		2100.00	1637.93	78%	0.00
3	விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP) - கூறு 2 உலக வங்கிக் கடன்		2959.00	1146.07	39%	693.40
4	படல்கமவில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவுதல் - டென்மார்க் நிதியுதவி		313.00	62.98	20%	0.00
5	சிறிய அளவிலான பால் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்தல் - பிரான்ஸ்		1981.00	1710.91	86%	0.00
உப கூட்டுத்தொகை - ii			10,563.00	5,946.56	56%	693.40
1	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	DOA	269.50	215.09	80%	24.55
2	விவசாய விரிவாக்கம் மற்றும் பயிற்சி		363.00	235.02	65%	18.87
3	விதை சான்றுப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு		1024.80	825.29	81%	81.42
உப கூட்டுத்தொகை - iii			1,657.30	1,275.40	77%	124.84

தெ / இல	நிகழ்ச்சித் திட்டம்	நடைமுறைப்படுத்திய நிறுவனம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதி முன்னேற்றம் %	பொறுப்புகள் மற்றும் கடமைகள்
1	தாவர தனிமைப்படுத்தல் சேவைக்கு தேவையான உபகரணங்களை திருத்தியமைத்தல் மற்றும் கொள்வனவு செய்தல் (JICA)	DOA	40.00	0.34	1%	38.74
2	தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தின் பரிசோதனை வசதிகளை தரமுயர்த்தல்.		25.00	1.42	6%	0.00
உப கூட்டுத்தொகை - iv			65.00	1.76	3%	38.74
1	விவசாயிகளுக்கான பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல்	AAIB	1000.00	1000	100%	1950.00
2	விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை		40.00	20.00	50%	20.00
3	விவசாயிகள் மற்றும் மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்.		4000.00	4000.00	100%	0.00
உப கூட்டுத்தொகை - v			**5040.00**	**5020.00**	**100%**	**1970.00**
1	ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்	HARTI	35.00	8.70	25%	0.46
2	பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	CARP	40.00	26.05	65%	0.50
3	நெல் சந்தைப்படுத்தும் சபை	PMB	2671.00	2176.25	81%	
உப கூட்டுத்தொகை - vi			**2746.00**	**2211.00**	**81%**	**0.96**
மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii+iv+v+vi)			**20,146.30**	**14,500.14**	**72%**	**2,829.12**

2. சேதன பசளை உற்பத்தி அபிவிருத்தி மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை அபிவிருத்தி, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425/426)

2.1 நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை அபிவிருத்தி, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425)

நிதி முன்னேற்றம்

தொ/இ	விபரம்	ஒதுக்கப்பட்டதொகை (மில். ரூபா)	செலவுகள்	
			(மில். ரூபா)	(%)
1	மொத்த வரவுசெலவு	8720.56	5463.64	62.65
1.1	மீண்டுவரும் செலவுகள்	217.56	179.30	82.41
1.2	மூலதன செலவுகள்	8503.00	5264.34	62.14
1.3	13 பயிர் வகைகள்	51.259	21.903	42.7%

பயிர் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பு,

தொ/இல	பயிர் வகை	ஒதுக்கப்பட்டதொகை (மில். ரூபா.)	செலவு செய்த தொகை (மில். ரூபா.)
1	நெல்	94.209	57.683
2	மிளகாய்	596.695	305.989
3	உருளைக் கிழங்கு	307.453	107.667
4	பெரிய வெங்காயம்	292.162	247.903
5	சிறிய வெங்காயம்	231.39	233.248
6	சோளம்	244.254	180.030
7	உளுந்து	89.410	76.173
8	பாசிப்பயறு	211.444	170.880
9	கௌப்பி	53.835	39.066
10	சோயா போஞ்சி	31.564	22.280
11	எள்ளு	20.526	19.797
12	குரக்கன்	7.096	4.056
13	நிலக்கடலை	51.259	21.903

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (சாராம்சம்) - 2021/12/31 ஆம் திகதி வரை

தொ/இல	செலவுத் தலைப்பு	நிறுவனம்	வரவுசெலவு ஒதுக்கீடு (மில். ரூபா.) (1)	அங்கீரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீடு (மில். ரூபா.) (2)	திரளான செலவு (மில். ரூபா.) (3)	(3)/(2) (%)
1	425-2-03-004-2509	உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள்	4,630.00	4,119.46	2,502.65	61
	உப கூட்டுத்தொகை - i		**4,630.00**	**4,119.46**	**2,502.65**	**61**
2	425-2-03-002-2201	அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம் - மூலதன செலவுகள்	34.00	9.85	4.38	45
3	425-2-03-008-2506	பொருளாதார நிலையங்கள்	300.00	250.00	35.34	14
4	425-2-03-010-2202	சூழல் நட்பு சேதன பயிர்ச் செய்கை, மற்றும் சேதன உர வகைகளை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டம்	70.00	70.00	58.55	84
	உப கூட்டுத்தொகை - ii		**404.00**	**329.85**	**98.27**	**30**
5	செலவுத் தலைப்பு - 281	கமநல அபிவிருத்தி - மூலதன செலவுகள்	1,984.00	1,984.00	1535.73	77
	உப கூட்டுத்தொகை- iii		**1,984.00**	**1,984.00**	**1535.73**	**77**
	மொத்த கூட்டுத்தொகை- (i+ii+iii)		**7,018.00**	**6,433.31**	**4,136.65**	**64**

2. சேதன பசளை உற்பத்தி அபிவிருத்தி மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை அபிவிருத்தி, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425/426)

2.2 சேதன உரத் தயாரிப்பை ஊக்குவித்தல் மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை (செலவுத் தலைப்பு 426)

நிதி முன்னேற்றம்

தே/இ	விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா	செலவு	
			(மில். ரூபா	(%)
1	**மொத்த வரவுசெலவு**	*35,745.7*	*21,627.36*	*80.16*
1.1	**மீண்டுவரும் செலவுகள்**	*35,539.5*	*21,587.33*	*60.74*
1.2	**மூலதன செலவுகள்**	*206.2*	*40.033*	*19.41*

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் - செலவுத் தலைப்பு இலக்கம் 426

தே/இல	விபரம்	நடைமுறைப்படுத்தும் நிறுவனம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு		ஏனைய விடயங்கள்
				(மில். ரூபா)	(%)	
1	தேசிய உர முகாமைத்துவ தகவல் அமைப்பு *(National Fertilizer Management Information System)*	இராஜாங்க அமைச்சு / தேசிய உரச் செயலகம்	*30*	*0.132*	*0.44*	தகவல் அமைப்பை அபிவிருத்தி செய்யும் பணி பெறுகை நடவடிக்கைகளின் பின்னர் மொபிடெல் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
2	தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அலுவலகங்களை அபிவிருத்தி செய்தல்	இராஜாங்க அமைச்சு / தேசிய உரச் செயலகம்	*30*	*19.839*	*66.13*	மாவட்ட அலுவலகங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அனைத்து கணனிகள், தகவல் தொடர்புகள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளன.
3	இலங்கை உரக் கம்பனியின் உர பரிசோதனைக்கூடத்தை அபிவிருத்தி செய்தல்.	இராஜாங்க அமைச்சு / இலங்கை உரக் கம்பனி	*19*	*3.383*	*17.8*	உர ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.

3. கால்நடை வளங்கள், பண்ணைகள் அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு - 427)

நிதி முன்னேற்றம் - சாராம்சம்

தொ/ இல	விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா.)	செலவு செய்த தொகை (மில். ரூபா.)	%
1.	மீண்டுவரும் செலவுகள்	*334.15*	*306.799*	*91.815*
2.	மூலதன செலவுகள்	*1,068.939*	*778.684*	*72.846*

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் - சாராம்சம் செலவுத் தலைப்பு (427)

தொ/ இல	விபரம்	நடைமுறைப்படுத்தும் நிறுவனம்	ஒதுக்கப்பட்ட தொகை(மில். ரூபா.)	செலவு	
				(மில். ரூபா.)	%
1.	திரவ பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல்	கால்நடை வளங்கள், பண்ணைகள் அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு	*136.0*	*92.169*	*67.77*
2.	இனவிருத்திப் பண்ணைகளை நிறுவுதல்		*100.0*	*81.839*	*81.84*
3.	கால்நடை அபிவிருத்தி நடுத்தர கால செயற்திட்டம்		*46.0*	*27.180*	*59*
4.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப்பண்ணை அபிவிருத்தி		*45.0*	*44.532*	*98.96*
5.	பன்றி வளர்ப்புத் துறை அபிவிருத்தித் திட்டம்		*15.0*	*13.071*	*87.14*
6.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணை முகாமைத்துவம் மூலம் உற்பத்திதிறனை மேம்படுத்துதல்		*450.0*	*275.240*	*61.16*
7.	தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பொலன்னறுவை பண்ணையில் போசணைப் புல் வகைளின் பதன உற்பத்திச் செயற்திட்டம்		*250.0*	*222.587*	*89.03*
	மொத்தம்		***1,042.0***	***756.618***	***72.62***

வெளிநாட்டு நிதியுதவி மூலம் நடைமுறைப்படுத்தும் செயற்திட்டம் (கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீடு – செலவுத் தலைப்பு – 118)					
8.	படல்கமவில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவுதல் - இலங்கை/டென்மார்க்	கால்நடை வளங்கள், பண்ணைகள் அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு	*313.0*	*62.98*	*20.13*
9.	சிறிய அளவிலான பால் பதனிடும் நிலையங்களை நிறுவுதல் (இலங்கை/பிரான்ஸ்)		*1,981.00*	*1710.91*	*86*
	மொத்தம்		***2,294***	***1773.89***	***77***

4. பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

நிதி முன்னேற்றம் - சாராம்சம்

	விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா.)	செலவு செய்த தொகை (மில். ரூபா.)	%
1.	மீண்டுவரும் செலவுகள்	212,355,600.00	191,492,679.33	90.2
2.	மூலதன செலவுகள்	267,567,400.00	216,121,680.68	80.8

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் சாராம்சம் - செலவுத் தலைப்பு (407)

இல/ தொ	விபரம்	நடைமுறைப்படுத்தும் நிறுவனம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா.)	செலவு		ஏனைய விடயங்கள்
				(மில். ரூபா.)	(%)	
1.	**உளுந்து மற்றும் பாசிப்பயறு பயிர்செய்கை செயற்திட்டம்** (வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களில்)	மேற்பார்வை: மாவட்ட செயலகம் மூலம் நடைமுறைப்படுத்தப் படல்: விவசாய மாவட்ட பணிப்பாளர்	50.00	48.394	97	(ஒதுக்கீடு – செலவுத் தலைப்பு - 425)
2.	**ஆடு வளர்ப்புச் செயற்திட்டம்**	மேற்பார்வை: மாவட்ட செயலகம் மூலம் நடைமுறைப்படுத்தப் படல்: மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயம்	50.00	40.411	81	வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் BD/RE/118/407/05/2021 ஆம் இலக்க மற்றும் 2021.06.11 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கீடு.
3.	**உளுந்து, பாசிப்பயறு மற்றும் இஞ்சி பயிர்ச் செய்கை செயற்திட்டம்**	மேற்பார்வை: மாவட்ட செயலகம் மூலம் நடைமுறைப்படுத்தப் படல்: விவசாய மாவட்ட பணிப்பாளர்	100.00	87.813	87	வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் BD/RE/118/407/01/2020 ஆம் இலக்க மற்றும் 2021.03.29 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கீடு.
		மொத்தம்	200.00			
வெளிநாட்டு நிதியுதவி மூலம் நடைமுறைப்படுத்தும் செயற்திட்டம்						
1.	இந்திய அரச மானியத்தின் கீழ் 3,400 கழிப்பறை அலகுகளை நிர்மாணித்தல் (மட்டக்களப்பு மாவட்டம்) இந்தியாவின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் இந்த அமைச்சு	200.00 (உள்நாட்டு 100.00 வெளிநாட்டு 100.00)		இந்த அமைச்சு 06.10.2020 ஆம் திகதி இராஜாங்க அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இந்த செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டு அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப புரிந்துணர்வு ஒப்பந்தக் காலம் முடிவடைந்துள்ளமையால் இந்த ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டியுள்ளது.		

கமத்தொழில் அமைச்சு

01) அத்தியாயம் 01 - நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு

1.1 தொலைநோக்கு

- உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை

1.2 செயற்பணி

- இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோள ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்.

1.3 நோக்கங்கள்

- உள்நாட்டி உற்பத்தி செய்யக்கூடிய உணவு மற்றும் மேலதிக உணவு இருப்புகளை முறையாக முகாமை செய்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.

- உணவு உற்பத்தியில் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகள் மற்றும் நச்சுப்பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து, அகற்றப்படும் கழிவுப் பொருட்களை முறையாக முகாமை செய்வதன் ஊடாக நச்சுத்தன்மையற்ற, சூழல் நட்புமிக்க மற்றும் ஆரோக்கியமான விவசாய உற்பத்திகளை மக்களுக்கு வழங்குதல். இரசாயன உரங்களின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல்.

- இயந்திரமயமாக்கல், புதிய தொழில்நுட்பங்கள், வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவம், பயிர் பல்வகைப்படுத்தல், மண் காப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயிர்களின் உற்பத்திப் பயனுறுதி தன்மையை அதிகரித்தல் மற்றும் உற்பத்திச் செலவுகளை குறைத்தல்.

- உயர் தரத்தைக்கொண்ட சுய விதைகளை உற்பத்தி செய்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் முறைகளை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல், சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு தரத்தில் சிறந்த விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்களை வழிநடத்துதல்.

- சிதைவடைந்த குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்கள் அனைத்தையும் புனரமைத்தல், தரிசு நிலங்களில் விவசாயம் செய்து நெல் உற்பத்தியை அதிகரிக்க பங்களிப்பு செலுத்துதல்.

1.3 பிரதான பணிகள்

- விவசாயத் துறையுடன் தொடர்பான கொள்கை உருவாக்க நடவடிக்கைகள்.
- உரிய இராஜாங்க அமைச்சுகளுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்.
- தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் பணிகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் என்பவற்றை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

1.4 திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்


நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்

1. விவசாயத் திணைக்களம்	*2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைச் சட்டம்*
	1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைநாசினிகள் சட்டம்
	1951 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்புத் தொடர்பான சட்டம்
	1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மரங்களை வெட்டி வீழ்த்தல் (கட்டளைச்) சட்டம்
2. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை	*1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்*
3 ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை	*1972 ஆம் ஆண்டின் 11 இலக்க அரச விவசாய ஒத்துழைப்புச் சட்டம்*
1. வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி	*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிக் கட்டளைச் சட்டம்*
5. நெல் சந்தைப்படுத்தும் சபை	*1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்*
2. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்	*1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமநல நடவடிக்கைகள் தொடர்பான கட்டளைச் சட்டம்*
3. இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை	*விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை சபைச் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க)*
4. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	

வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றம்

2021.12.31 வரையிலான நிதி முன்னேற்றம் (மில். ரூபா.)					
தொ/இல	செயற்திட்டம்	மொத்த முதலீடு (மில். ரூபா.)		நிதி இலக்குகள் மற்றும் முன்னேற்றம்	
		ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	திருத்தியமைக்கப்பட்ட தொகை	2021 இற்கான ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	2021.12.31 வரையிலான திரளான செலவு (மில். ரூபா)
1	விவசாய பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம்	9374.37	ஐரோப்பிய ஒன்றியத்தின் மானியமாக கிடைத்த 28 மில்லியன் அமெரிக்க டொலர்	2959	1146.07 38% முன்னேற்றம்
2	காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம்	25,200	22,500	3,210	1388.66 43% முன்னேற்றம்
3.	சிறு அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம்	17,171	-	2100.	1,637.93 78% முன்னேற்றம்
4.	படல்கமவில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவுதல்	11,783	-	313.00	62.98 20% முன்னேற்றம்
5.	சிறிய அளவிலான பால் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்	4,086	-	1981	1710.10 86% முன்னேற்றம்
6.	தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் கொள்வனவு (JAICA)		-	40	0.34 1% முன்னேற்றம்
7.	தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையங்களின் ஆராய்ச்சி வசதிகளை விருத்தி செய்தல் (KOICA)		-		1.42 6% முன்னேற்றம்

1.6 நிறுவனக் கட்டமைப்பு



02) அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு , விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

பின்னணி மற்றும் அறிமுகம்

இலங்கை பொருளாதாரத்தின் மிக முக்கியமான அங்கமாக விவசாயத் துறை காணப்பட்ட போதிலும் கொவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காரணமாக விவசாய நடவடிக்கைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தும் தொகுதிகள் மீது முன்னெப்போதுமில்லாத அளவு தடைகள் ஏற்பட்டன. இலங்கையில் மொத்த வறிய மக்கள்தொகையில் 90% க்கும் அதிகமானோர் கிராமப்புற அல்லது தோட்டப் பகுதிகளில் வாழ்கின்றனர். இலங்கையில் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் விஷேட பங்களிப்பை விவசாயப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுகிறது.

தொற்றுப் பரவல் நிலை காணப்பட்ட போதிலும், கடந்த சில ஆண்டுகளாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு குறைவாகக் காணப்பட்டிருந்த போதிலும், இலங்கையின் அதிகளவு தொழிலாளர்களின் மிக முக்கியமான வேலைவாய்ப்பு ஆதாரமாக விவசாயத் துறையை அடையாளம் காண முடியும். 2020 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகையில் சுமார் 2,169,679 பேர் அல்லது மொத்த தொழில்புரிவோரில் 27.1% வீதமானோர் பயிர்ச் செய்கை மற்றும் மீன்பிடித் துறை உள்ளிட்ட விவசாயத் துறைகளில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் வேலைவாய்ப்பு கட்டமைப்பிற்கு விவசாயத் துறை 27.1% வீதமும், கைத்தொழிற் துறை 26.9% வீதமும், சேவைத் துறை 46.0% வீதமும் பங்களிப்பு செலுத்தியுள்ளன.

2020 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையும் (8.36%), கைத்தொழிற் துறையும், (26.25%) மற்றும் சேவைத் துறையும் (59.67%) பங்களிப்பு செலுத்துகின்றன. அதன்படி, தொழில்முனைவுகளை ஊக்குவிப்பதன் இளைஞர் யுவதிகளை தொழிலாளர் படையில் இணைவதற்கு ஊக்குவிக்க முடியும். பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய மக்கள்தொகை கட்டமைப்பின் மாற்றங்களின் விளைவுகளை குறைக்க முடியும். விவசயாத் துறையில் பெண்களால் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்புக்கு மிகப் பெரியதாகும்.

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தொழிலாளர் பிரிவு தொடர்பான கணக்கெடுப்பு அறிக்கையின்படி, விவசாயத் துறையின் வேலைவாய்ப்பு 27.1% ஆகவும் பாலின அடிப்படையில் தொழிலாளர் பங்களிப்பு 71.9% பெண்கள் மற்றும் 32.0% ஆண்களுமாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத் துறையில் முறையாக வேலைவாய்ப்பில் ஈடுபடுவோரின் சதவீதம் 41.9% ஆகக் காணப்படுவதுடன் விவசாயத் துறையில் முறைசாரா வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவோரின் சதவீதம் 58.1% ஆகவும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, இலங்கை தொழிலாளர்களின் முதன்மை தொழில்வழங்குநர் விவசாயத் துறையாகும். கிராமப்புறப் பிரிவில் அதன் பங்களிப்பு 51.3% ஆகும். அதன்படி, கிராமப்புற மக்கள் விவசாயத்தை நோக்கி நகர்வதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதுடன் நாட்டின் நாட்டின் உழைக்கும் மக்களில் 27.1% ஆனோர் விவசாயத் துறையில் வேலை செய்கின்றனர். இலங்கையில் 22 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்ட ஒரு நாடாகக் காணப்படுவதுடன் அதில் 74% ஆனோர் விவசாயத் துறையில் தொழில் செய்வதன் மூலம் தங்கள் வாழ்வாதாரங்களைத் தேடிக்கொள்கின்றனர். இதில் 30% நிலம் பொருந்தோட்டப் பயிர்களுக்கும் மில்லியன் காணிகள் - 1.45% சிறிய காணிகள் என்ற அடிப்படையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. விவசாயத் துறையின் அபிவிருத்தி விவசாயப் பிரிவின் அபிவிருத்திக்கு மாத்திரமல்லாது கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கும் பிரதானமாக தாக்கம் செலுத்துகின்றது. விவசாய உற்பத்திகளை மையமாகக்கொண்ட கைத்தொழில் துறையின் உற்பத்திகள் விரிவடைந்ததன் காரணமாக விவசாயத் துறைக்கு கைத்தொழில் துறைக்கு வழங்கும் பங்களிப்பு விரிவடைந்துள்ளது.

மேலும், பொருளாதார ரீதியாக செயல்பாட்டு நிலையில் பங்கேற்காத மக்கள் தொகை 2019 இல் 7,832 மில்லியனிலிருந்து 2020 இல் 8.273 மில்லியனாக அதிகரித்துள்ளது. கொவிட் 19 தொற்றுநோய்ப் பரவலானது பொருளாதார ரீதியாக செயல்பாட்டு நிலையில் இல்லாத மக்கள்தொகையின் அதிகரிப்பில் தொழில் வாய்ப்புகளை இழந்தவர்களுக்கு தொழிலில் ஈடுபடுவதற்கு உள்ள சந்தர்ப்பம் மற்றும் வேலை வாய்ப்புகளை தீவிரமாகத் தேடுவதற்கு உள்ள சந்தர்ப்பம் என்பன தற்காலிகமாக இல்லாமல் போயுள்ளதுடன், தொற்றுநோய் பரவிய விதம் காரணமாக செயல்பாட்டுடன் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் வாய்ப்பு மென்மேலும் மந்தமடைந்துள்ளது. அவ்வாறு மந்தகதியில் இருந்தபோதிலும் பிரதானமாக விவசாயத் துறையை செயல்படு நிலையில் வைத்திருப்பதற்கு, கொவிட் 19 அவசரநிலையின் கீழும் விவசாயத் துறையை செயல்படு நிலையில் வைத்திருப்பதற்கு அரச பொறிமுறையானது உயர் பங்களிப்பைச் செய்துள்ளது. (ஆதாரம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகள்)

அறிமுகம்

விவசாயத் துறை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித சமூகத்தின் பிரதான வாழ்வாதாரமாகவும், முழு உலகத்தின் பொருளாதார கலாச்சாரமாகவும் காணப்படுகிறது. . பூமியை நேசித்து இயற்கையோடு இயைந்து அன்புடன் செய்யப்படும் கலாச்சாரப் பகிர்வுதான் விவசாயம். ஆற்றுப் பள்ளத்தாக்கு நாகரீகத்துடன் தோன்றிய விவசாயம் இன்று பல பகுதிகளுக்கும் பரந்து வியாபித்துள்ளது. அது இலங்கையின் சனத்தொகையில் கணிசமான பகுதியினருக்கு, குறிப்பாக கிராமியப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் முகங்கொடுக்க வேண்டியுள்ள காலநிலை சவால்கள் மற்றும் குறைந்த வருமானம் என்பவற்றின் காரணமாக விவசாய சமூகம் தங்களின் வழமையான விவசாயத் துறை சார்ந்த தொழில்களைக் கைவிட்டு வேறு வாழ்வாதாரங்களை நோக்கி நகர்வதை அவதானிக்க முடியுமாக உள்ளது. இந்த காலநிலை சவால்களில் வறட்சி, அதிக மழை, பருவமல்லாத காலங்களில் பெய்யும் மழை, பருவநிலை மாற்றம் மற்றும் பீடைகளால் ஏற்படும் நோய்கள் மற்றும் தற்போது காணப்படும் கொவிட் போன்ற உலகளாவிய தொற்றுநோய்களின் கீழ் உணவு விநியோக வலையமைப்பில் ஏற்பட்டுள்ள சிதைவு என்பன அடங்கும்.

திட்டமிடப்பட்ட விவசாயம் - (தேசிய விவசாயக் கொள்கை),

மேற்கூறிய சவால்கள் காணப்பட்டபோதிலும், விவசாயத் துறையானது, கைத்தொழில் மற்றும் ஏனைய சேவைப் பிரிவுகளுக்குத் தேவையான அடித்தளத்தை உருவாக்கும் அதே வேளை சூழல் நட்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் இன்றியமையாததாகும். உலகின் பொருளாதார, தொழில் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் மிகவும் பலம்பொருந்திய நாடுகளான அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் காணப்பட்ட திட்டமிடப்பட்ட விவசாயம் அவற்றின் தேசிய அபிவிருத்திக்கு அடிப்படையாகக் காணப்படுகின்றது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மேற்குறித்த நாடுகளில் விவசாயக் கொள்கைக்கு வழங்கப்பட்ட விஷேட முக்கியத்துவம் காரணமாக வேலைவாய்ப்புகள் மற்றும் தேசிய வருமானத்தை அதிகரித்தல் என்பவற்றில் அது மாறாத பிரதானமான சக்திமிக்க ஆதாரமாக மாறியுள்ளது. மேலும் ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியைத் துரிதப்படுத்துவதற்கும், உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இலங்கையிலும் திட்டமிடப்பட்ட விவசாயம் மற்றும் அரசின் சுபீட்சத்தின் நோக்கின் ("Vistas of Prosperity and Splendor") குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் அதேவேளை மக்கள் மையப் பொருளாதாரத்திற்குமான (People Centric Economic Development) தேசிய விவசாயக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

(உலகளாவிய உதாரணங்கள் - இளைஞர் தொழில்முனைவு, (TEF- UNDP சஹேல் இளைஞர் தொழில்முனைவு தொடர்பாக),

மேலும், உலகளாவிய உதாரணங்களை அவதானிக்கையில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் டோனி எலுமேலு நிதியம் (TEF) (அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புகள்) ஆகியவை ஆபிரிக்காவில் உள்ள சஹேல் பிராந்தியத்திற்கான இளைஞர் தொழில்முனைவோர் நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன. உருவாக்கப்பட்ட கோட்பாடுகளை கவனத்தில்கொண்டு இந்தத் தொழில்முனைவோர் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 100,000 இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியளித்தல், வழிகாட்டுதல் மற்றும் நிதி உதவி வழங்கல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. ஆபிரிக்கா முழுவதும் குறைந்தது 10 மில்லியன் புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் 10 பில்லியன் டொலர் புதிய ஆண்டு வருமானத்தை உருவாக்குதல் எனும் ஒட்டுமொத்த இலக்குக்குப் பங்களிப்பு செலுத்துவதே இதன் குறிக்கோளாகும். இத்தகைய உதாரணங்கள் காணப்படுவது போன்றே, இலங்கையிலும் பல்வேறு தளங்களுக்கு ஊடாக இளைஞர் தொழில்முனைவு மற்றும் புத்தாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றதுடன், இலங்கையில் விவசாய அபிவிருத்தியில் பங்களிப்பு செலுத்த இளைஞர் சமூகத்தை ஈர்க்கும் அதேவளை இளைஞர் விவசாய தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் ஊக்குவிப்பதுடன் தேசிய விவசாயக் கொள்கையில் குறிப்பிட்டுள்ள பிரதான அபிவிருத்திக் கூறுகளும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

நிலை மாற்றல் : டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் சேவைகளை முன்னுரிமைப்படுத்திய அபிவிருத்தி (Shifting Gears: Digitization and Services-Led Development) மற்றும் வறுமை ,

மேலும், நிலை மாற்றல் : டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் சேவைகளை முன்னுரிமைப்படுத்திய அபிவிருத்தி (Shifting Gears: Digitization and Services-Led Development) என்று அழைக்கப்படும் புதிய தெற்காசிய பொருளாதாரக் கண்ணோட்டத்தின் மூலம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இப்பிராந்தியத்தின் பொருளாதாரம் 7.1% ஆல் வளர்ச்சியடையும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேலும் 2020-23 காலப்பகுதியில் தெற்காசியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 3.4% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது தொற்றுநோய்ப் பரவலுக்கு முந்தைய நான்கு ஆண்டுகளை விட 3% குறைவான பெறுமானமாகும். கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக பிராந்தியத்தின் பொருளாதாரத்தில் நீண்டகால பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நாளொன்றுக்கு 3.20 அமெரிக்க டொலர் என்ற வறுமைக் கோட்டைக் கணக்கில் கொண்டு அவதானிக்கையில், 2021 ஆம் ஆண்டில் இலங்கையின் வறுமை 10.9% என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 2019 இல் காணப்பட்ட 9.2% எனும் அளவை விட தெளிவான அதிகரிப்பாகும். ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி, உலக சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகள், உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகள் மற்றும் விநியோக நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகள் ஆகியவை உணவுப் பாதுகாப்பை மோசமாக பாதித்துள்ளன. நாடுகள் மீண்டு வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் தற்போதைய நிலையில், எமது நீண்டகால அபிவிருத்தி மாதிரிகள் தொடர்பாக மறுபரிசீலனை செய்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

புதிய டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, பாரம்பரிய உற்பத்தியை முன்னிறுத்திய பொருளாதார மூலோபாயங்களிருந்து மாறுபட்டு வழிமுறையைத் தெரிவு செய்து சேவைத் துறைகளை விருத்தி செய்வதற்கு தெற்காசியாவுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன்படி விவசாயத் துறையும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பல்வேறு சேவை வசதிகளை விருத்தி செய்வதன் ஊடாக சந்தைத் தொடர்புகளை வலுப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. கமத்தொழில் அமைச்சினால் உருவாக்கப்படுகின்ற "இலத்திரனியல் - விவசாயம்" மூலோபாயம், விவசாய தரவு முகாமைத்துவத் தொகுதி என்பன இந்த இலக்குகளை அடைவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுவதுடன், குறிப்பாக சந்தையை நிலைபேறான முறையில் நிர்வகிப்பதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும்.


காலநிலை மாற்றம், பட்டினி மற்றும் போசணைக் குறைபாடு,

மேலும், உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு உலக மக்கள்தொகையில் 8% அதாவது 690 மில்லியன் மக்கள் போசணைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிட்டுள்ளது. எனினும் துரதிர்ஷ்டவசமாக, தற்போது தீவிரமடைந்துள்ள காலநிலை மாற்றம் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் என்பன காரணமாக, இந்த எண்ணிக்கை மிகவும் விரைவாக அதிகரித்து வருகிறது. இலங்கையில், 1.7 மில்லியன் மக்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இது சனத்தொகையில் சராசரியாக 8% ஆகும். இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகளவில் காணப்படுவதுடன், உலகளாவிய ரீதியான ஊட்டச்சத்து குறைபாட்டுடன் ஒப்பிடுகையிலும் இலங்கை கூடிய விகிதத்தில் காணப்படுகிறது. உள்நாட்டில் தாய்மார்களுக்கு மத்தியிலும் போசணைக் குறைபாடு அதிகளவில் காணப்படுவதுடன் அது தோட்டப் பகுதிகளில் மிகவும் அதிகமாகும். போசாக்கின்மை நிலைக்கு இணையாக, விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளத் துறைகளால் உற்பத்தி செய்யப்படும் உணவுகளில் சுமார் 30% வினைத்திறனற்ற உற்பத்தி, நுகர்வோரால் விரையமாக்கப்படல் மற்றும் போக்குவரத்து மற்றும் விநியோக சிக்கல்களால் அழிவுக்குள்ளாகின்றது. காலநிலை மாற்றம் மற்றும் தற்போதைய கொவிட்-19 போன்ற ஏனைய நெருக்கடி நிலைகளைக் கருத்தில் கொண்டு, இலங்கை உணவு முறைமையின் செயற்பாடு மற்றும் அதன் விநியோகச் சங்கிலிகள் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு நாம் பிரயத்தனத்துடன் பணியாற்றியுள்ளோம்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு உணவுக்கான அணுகலை உறுதி செய்தல்,

காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை என்பன நேரடியாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ள பிரிவுகளாகும். காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய வெள்ளப் பெருக்கு, சூறாவளி, வறட்சி மற்றும் ஏனைய ஆபத்துகள் உணவுப் பாதுகாப்பை நலிவடையச் செய்யக்கூடிய அச்சுறுத்தல்களாகக் காணப்படுவதுடன் விவசாய நடவடிக்கைகளை இவை கடுமையாகப் பாதிக்கின்றன. இதன் விளைவாக, சந்தை அணுகல், வர்த்தகம், உணவு வழங்கல், உணவு விலை அதிகரித்தல், விவசாயிகளின் வருமான வீழ்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு இன்மை போன்ற இன்னோரன்ன துறைகள் மீது ஆழமான தாக்கங்களை ஏற்படுகின்றன. இந்த காலநிலை மாற்றம் மக்களை வறுமைக்கு இட்டுச் செல்வதுடன் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் போசாக்குக் குறைபாடு என்பன அதிகரிப்பதற்கும் வழிவகுக்கிறது. அதற்கமைவாக, இலங்கையில் பயிர்ச் செய்கைத் துறையில் காலநிலைத் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழும் விவசாயிகளின் காலநிலைக்கு தகவமைத்துக்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்கும் தெரிவு செய்யப்பட்ட அத்தகைய பிரதேசங்களில் நீர்ப்பாசனத்துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலைபேறான அபிவிருத்தி – உணவு முறைமைகளின் பாதுகாப்பு -"எமக்குத் தேவையான எதிர்காலத்திற்கான நகர்வை துரிதப்படுத்தல்)"



ரியோ 20+ உச்சிமாநாட்டின் விளைவாக அமைக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) ஆயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளின் அடுத்த கட்டமாகக் அமைகின்றது. இது 2015 முதல் 2030 ஆண்டு வரை நீடித்துக் காணப்படுவதுடன் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கியது.

இந்த இலக்கு பொருளாதார சமூக மற்றும் சூழல் என்ற அனைத்து பிரிவுகளிலும் நிலைபேறான தன்மையை ஏற்படுவதற்கு உருவாக்கப்பட்ட தெளிவான சர்வதேச வழிமுறையாகும். மேலும், இது மக்கள், கிரகம், கூட்டாண்மை, சமாதனம் மற்றும் செழிப்பு ஆகியவற்றை பராமரித்துப் பேணுவதில் எவரையும் கைவிடாது செல்லும் 2030 ஆண்டு வரை மேற்கொள்ளும் பயணமாக இந்த இலக்குகளை அடைதல் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் எண்ணக்கருக்களில் மனிதகுலத்தை வறுமையிலிருந்து விடுவித்தல், பசியை ஒழித்தல், பெண்களை வலுவூட்டல், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப

மாற்றியமைத்துக்கொள்ளும் தகவை வலுப்படுத்தல், சமாதனம், பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி போன்ற முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயத் துறை ஆகியவற்றில் தாக்கம் செலுத்தும் அடிப்படையான நிலைபேறான அபிவிருத்தி இரண்டாவது, பன்னிரண்டாவது, பதின்மூன்றாவது மற்றும் பதினைந்தாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாகும். அதாவது, இரண்டாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கான *(2. Zero Hunger)* என்பது பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பு மற்றும் உயர் போசாக்கு நிலையை அடைவது மற்றும் நிலைபேறான விவசாயத் துறையை ஊக்குவித்தல் என்பனவாகும். அதற்கு இணையாக பதின்மூன்றாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்காக *(13.Climatic Action)* காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளல் என்பதாகும். மேலும், *2030* ஆம் ஆண்டளவில் சிறு குழந்தைகள், நிராதரவான ஏழைகள் மற்றும் பெண்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் உணவுக்கான அணுகலை வழங்குவதும் அவர்களின் வறுமையைப் போக்குவதும் இதன் இரண்டாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் நோக்கங்களாகும். இதற்கு மேலதிகமாக, நிலம், உள்ளீடுகள், அறிவு, நிதிச் சேவைகள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் விவசாயத் துறைக்கான அணுகலுக்கான பாதுகாப்பான வழியை உருவாக்குவதன் மூலம் *2030* ஆம் ஆண்டளவில் விவசாய உற்பத்தியை இரட்டிப்பாக்குதல். இதன் பதின்மூன்றாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் மூலம் தேசிய கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல்களை மேற்கொள்ளும் போது காலநிலை மாற்றத்தைப் பாதிக்கும் காரணிகளை உள்ளடக்குவது தொடர்பாக விளக்கப்படுகிறது. மேலும், காலநிலை மற்றும் இயற்கை பேரழிவுகளுக்கு பொதுமக்களை தயார்படுத்துவது தொடர்பாக தேசிய கொள்கைகளில் உள்ளடக்க வேண்டியுள்ளது. அதேபோன்று, பதினைந்தாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கு *(15. Life on Land)* உயிரியல் தொகுதியின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை விளக்குவதுடன் அதற்கு அமைவாக எமது உயிரியற் பல்வகைமை மற்றும் உணவு முறைமைகளைப் பாதுகாக்கும் அதேவேளை சூழல் ரீதியான விவசாயத் துறையை பிரபல்யப்படுத்தல் தொடர்பாக விளக்கியுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி மற்றும் விவசாயத் துறையின் பங்களிப்பு,

இதற்கமைய, இலங்கையில் நிறுவப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி சபையின் ஆலோசனைகளுக்கு அமைவாக *2021* ஆம் ஆண்டு முதல் விவசாயப் பிரிவு பிரதானமாக இரண்டாவது நிலைபேறான இலக்கு மற்றும் பன்னிரண்டாவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கு, அதாவது நிலைபேறான நுகர்வு முறைகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் அந்த இலக்குகளை அடைதல் என்பவற்றில் கவனம் செலுத்துகிறது.

உணவு முறைமைகளின் பாதுகாப்பு,



கொவிட்-*19* தொற்றுநோய்ப் பரவலின் சவாலுக் மத்தியில் உலகளாவிய ரீதியில் உணவு உற்பத்தி மற்றும் விநியோக வலையமைப்பு தற்காலிகமாக சிதைவடைந்த போதிலும், *2030* ஆம் ஆண்டளவில், நிலையான உணவு உற்பத்தி முறைமைகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் உயிரியல் தொகுதிகளைப் பாதுகாப்பதற்கு உதவும் காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகளை செயல்படுத்த வேண்டும் என்று "நாம் விரும்பும் எதிர்காலத்திற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்" எனும் தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் *23.09.2021* ஆம் திகதி முதற் தடவையாக கலந்துரையாடப்பட்ட உலக உணவு முறைமைகளுக்கான உச்சிமாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலை இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவை தொடர்பாக கூடுதலான சர்வதேச தலையீட்டை வழங்கும் நோக்கில் மேற்படி உணவு முறைமைகளுக்கான உச்சிமாநாட்டுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் இந்த மாநாட்டின் ஊடாக 2030 ஆண்டளவில் அடையப்பட வேண்டிய 17 நிலைபேறான இலக்குகளில் உணவு முறைமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான விஷேட ஐந்து துறைகளை மீண்டுமொருமுறை சுருக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளது.



- விஷேட துறை 01 – அனைவருக்கும் பாதுகாப்பானதும் ஊட்டச்சத்து மிக்கதுமான உணவுக்கான அணுகலை உறுதி செய்தல். (Nutrition for all)
- விஷேட துறை 02 – நிலைபேறான நுகர்வுப் போக்கை நோக்கி நகர்தல்.
- விஷேட துறை 03- இயற்கையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளித்தல்
- விஷேட துறை 4 – அபாய நேர்வு, அதிர்ச்சிகள் மற்றும் அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மையை உருவாக்குதல்
- விஷேட துறை 5. – சமுதாயங்களை வலுவூட்டல், உயர் வாழ்க்கைத்தரம் என்பவற்றை வழங்கல் மற்றும் அனைவருக்கும் சம தொழில் வாய்ப்புகள்

இந்த செயல்முறைகள் மூலம் உலகெங்கிலும் உள்ள உணவு முறைமைகளில் காணப்படும் விஷேட தன்மைகளை இனங் காணப்படுவதுடன் மனித உரிமைகள், நிதிசார் கண்டுபிடிப்புகள் மற்றும் பெண்கள் மற்றும் இளைஞர் சமுதாயத்தை வலுவூட்டுதல் போன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றன. குறிப்பாக, இதில் குறிப்பிடப்படும் ஐந்தாவது செயல்பாடு, இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ள பிரதேசங்களில் நிலைபேறான உணவு முறைமைகளின் தொடர்ச்சியான செயற்பாட்டை உறுதிப்படுத்துவது தொடர்பாக ஆராய்கிறது. தற்போது காணப்படும் தொற்றுநோயின் தாக்கங்களிலிருந்து உணவு விநியோகத்தை பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றி மேற்படி ஐந்தாவது செயல்பாடு மேலும் விரிவாக ஆராய்கிறது. இந்த செயல்முறையின் அடிப்படை நோக்கமாக உணவு முறைமைகளில் தொடர்புபடும் அனைத்துத் தரப்பினருக்கும் உணவு தொடர்பான உறுதியற்ற தன்மைக்கு தயாராவதற்கும் அதனை எதிர்கொள்வதற்கான செயற்பாடுகளையும் உறுதி செய்வதாகும். அதற்கமைவாக, உணவு முறைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாங்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.



நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி மற்றும் விநியோகம்,

ரோம் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உணவு அமைப்புகள் தொடர்பான உச்சி மாநாட்டில் (UN Food Systems Summit) மாநாட்டிற்கு முந்தைய அமர்வில் (Pre-summit) இலங்கை நச்சுத்தன்மையற்ற உணவு உட்கொள்ளலை அறிமுகப்படுத்தியுள்ளது. செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் இறக்குமதிக்கு தடை விதித்ததன் மூலம், மனிதன் உட்பட சூழல் தொகுதிக்கு உகந்த விதத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



சிறு குழுக்களைக் கொண்ட விவசாய தொழில்முனைவோர்களை உருவாக்குதல், காலநிலைக்கு ஏற்ற விதைகளை உற்பத்தி செய்தல், விவசாய சூழலியல் வலயங்களுக்கு ஏற்ப பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அனைத்து நிலைமைகளிலும் வழங்கல் கட்டமைப்பை தொடர்ச்சியாகப் பேணும் பொருட்டு நாடளாவிய ரீதியில் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல், சேதனப் பயிர்ச் செய்கை மற்றும் சேதன உர வகைகளைப் பிரபல்யப்படுத்துதல், பசுமை விவசாயத்தைப் பாதுகாத்தல், வீட்டுத் தோட்டச் சமர், விவசாயப்

பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாத்தல், குறிப்பிட்ட கால வரையறைக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களுக்கான இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல், விதை மானியங்களை வழங்கல், காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் தன்மைகொண்ட விதை வகைகளை உற்பத்தி செய்தல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் விவசாயத்தை விட்டு தூரமாகும் கிராமிய இளைஞர் சமூகத்தை விவசாயத் துறையை நோக்கி ஈர்க்கும் பொருட்டு விவசாய இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பை அதிகரித்து பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன

அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விஷேட செயற்திட்டம்

கொவிட் 19 - அவசர நிலைமையில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் களஞ்சிய வசதிகளை உருவாக்குதல் (Contingent Emergency Response Component (CERC)

அறிமுகம்

உலக வங்கியின் (CERC) கடன் வசதியின் கீழ், 2021 ஆம் ஆண்டில் 1,036 மில். ரூபா செலவில் கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயத் துறையை கட்டியெழுப்பும் நோக்கில் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் விநியோகிப்பதற்கும், நாடு முழுவதும் 102 களஞ்சியங்களை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. களஞ்சிய வசதிகள் 3 பிரதான பயிர் வகைகளுக்கு வழங்கப்படவுள்ளதுடன் அந்தக் களஞ்சியங்களில் 5 உருளைக்கிழங்கு களஞ்சியங்கள், 6 வெங்காயக் களஞ்சியங்கள் மற்றும் 91 மேலதிக களப் பயிர்களுக்கான களஞ்சியங்கள் என்பன அடங்கும். மேலும் உருளைக் கிழங்கிற்கான குளிரூட்டல் சேமிப்பு வசதிகளுடன் கூடிய களஞ்சியங்கள் அமைக்கப்படவுள்ளன. விவசாயத் துறைக்கு கொவிட்- 19 தொற்றுநோயின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்பைக் கருத்தில் கொண்டு, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் பயிர்களின் விளைச்சலுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுத்தல் எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு குறுகிய கால களஞ்சிய வசதிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

நோக்கம்

- அறுவடை இழப்பைக் குறைத்தல் மற்றும் அதிகளவான உற்பத்திப் பொருட்களை உரிய நேரத்தில் நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு விவசாய உற்பத்திகளைப் பாதுகாத்தல்.

துணைக் கூறு

- சிறிய அளவிலான விவசாயிகளுக்கு களஞ்சிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

வழிமுறை

- களஞ்சிய நிர்மாணம், உபகரண கொள்வனவு உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் உலக வங்கியின் வழிகாட்டுதலுக்கு அமைவாக மேற்கொள்ளுதல்.
- மாதாந்த முன்னேற்ற அறிக்கையை திட்டமிடல் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தல்
- நிர்மாணப் பணிகள் நிறைவுற்றதன் பின்னர் விவசாயிகளுடன் இணைந்து களஞ்சியங்களை முறையான விதத்தில் பயன்படுத்தல், பராமரித்தல் மற்றும் பேணிப் பாதுகாத்தல். இந்த நோக்கத்திற்காக விவசாய அமைப்புகளைத் தெரிவு செய்தல்.
- களஞ்சியங்களின் செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவினங்களை குறிப்பிட்ட விவசாய அமைப்புகள் அல்லது நிறுவனம் பொறுப்பேற்று மேற்கொள்வதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்.

செயற்திட்டக் காலப்பகுதி

- 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள **களஞ்சிய நிர்மாணப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)**

தொ/இல	செயற்பாடுகள்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	
		மில். அமெ. டொலர் (US$ Mn)	மில். ரூபா
1.	களஞ்சிய வசதிகளை பெற்றுக்கொடுத்தல்	5.60	1,036

களஞ்சிய வசதிகளை வழங்க 2021.12.31 வரை ஒதுக்கப்பட்ட தொகை

தொ/இல	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	மொத்தக் கூட்டுத்தொகை (மில். ரூபா)
1.	களஞ்சிய நிர்மாணப் பணிகளுக்கு - 1,021 மில். ரூபா	1,036
2.	களஞ்சியங்களுக்கான உதிரிப் பாகங்களுக்கு - 15 மில். ரூபா	

ஒவ்வொரு நிறுவனங்களுக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்ட களஞ்சிய நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம்

31.12.2021 வரை களஞ்சிய நிர்மாணப் பணிகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

தொ/இல	மாகாணம்	உப செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகளின் நிலை									
		நடைமுறைப்படுத்தும் நிறுவனம்								மொத்த செயற்திட்டம்	ஒதுக்கீடு (மில். ரூபா Vat வரி உட்பட)
		விவசாயத் திணைக்களம்		கமநல அபிவிருத்தி திணைக்களம்		மாகாண விவசாயத் திணைக்களம்		மாவட்ட செயலகம்			
		செயற்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட தொகை	செயற்திட்ட எண்ணி.	ஒதுக்கப்பட்ட தொகை	செயற்திட்ட எண்ணி.	ஒதுக்கப்பட்ட தொகை	செயற்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட தொகை		
1	மத்திய	3	34.93	2	14.03	0	0	1	12.13	6	61.09
2	கிழக்கு	4	19.77	0	0.00	6	62.23	1	10.63	11	92.63
3	வட மத்திய	3	13.68	4	47.01	0	0	5	65.78	12	126.47
4	வடக்கு	1	5.18	1	13.91	10	99.33	0	0.00	12	118.42
5	ஊவா	1	4.94	1	5.91	8	77.12	0	0.00	10	87.97
6	வட மேல்	1	4.75	3	15.73	7	58.36	0	0.00	11	78.84
7	தென்	1	4.54	0	0.00	4	27.42	3	32.03	8	63.99
8	மேல்	0	0.00	0	0.00	5	25.61	0	0.00	5	25.61
9	சப்ரகமுவ	0	0.00	1	11.88	0	0	0	0.00	1	11.88
	மொத்த கூட்டுத்தொகை	14	87.79	12	108.47	40	350.07	10	120.60	76	666.9

கள மேற்பார்வை

மேலதிக உணவுப் பயிர்களுக்கான 50 மெ. தொன் களஞ்சியங்களை நிர்மாணித்தல் –
(SP/01 /லபுதுவ – காலி) (NP/5 கிளிநொச்சி /வல்பிட்ட ; கம்பஹா WP/2 மற்றும் அம்பாறை EP/2))









2.1.2 2021 ஆண்டின் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

விவசாய இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
செலவுத் தலைப்பு 118-02-03-062-2509

அறிமுகம்

பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் வறுமையில் வாடும் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் மற்றும் வறுமைக் குறைப்பை மேற்கொள்ளல் ஆகியவற்றின் போது இலங்கை பெரும் முன்னேற்றம் கண்டிருந்த போதிலும், கொவிட்-19 நெருக்கடியானது வாழ்வாதார வழிகள் மற்றும் வருமான ஈட்டலில் வீழ்ச்சி என்பவற்றில் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது. மேலும் மேலே உள்ள குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, 2021 ஆம் ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தியில் பூகோள நோக்கங்களின் புதிய பரிமாணமான காலநிலை, உணவுத் தொகுதிகள் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல் என்பவற்றுக்கு இளைஞர்களின் பங்களிப்பை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தப்படுகிறது. பிரதேச ரீதியாக இளைஞர் தொழில்முனைவோர் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைத்துக்கொள்வதன் மூலம் மென்மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயப் பிரிவின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு விவசாய இளைஞர் தொழில்முனைவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நடைமுறைப்படுத்தும் கால எல்லை*:- 2021.01.01-2021.12.31*

பொறுப்பு மற்றும் நடைமுறைப்படுத்தும் நபர்/ நிறுவனங்கள் :-

- *கமத்தொழில் அமைச்சு*
- *மாவட்ட செயலகம் / மாவட்ட விவசாயப் பணிப்பாளர்*
- *விவசாயத் திணைக்களம்*

விவசாய இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சிகள்;

- *தேசிய விவசாய கொள்கையைத் தயாரித்தல்*
- *விவசாய முகாமைத்துவ தகவல்த் தொகுதியை நிறுவி அதனைச் செயற்படுத்தல்*
- *கமநல சேவை நிலையங்களுக்குத் தேவையான மண் பரிசோதனை வசதிகளை நிறுவுதல்*
- *விவசாய ஏற்றுமதி கிராமங்களை நிறுவுதல்*
- *இளம் தொழில்முனைவோருக்கான புதிய விவசாய தொழில்நுட்ப கண்டுபிடிப்பு முயற்சிகளுக்கு உதவி வழங்கல்*
- *அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்*
- *விவசாயத் துறையில் பணியாற்றும் கள அதிகாரிகளின் மனிதவள ஆற்றல்களை விருத்தி செய்தல்*

விவசாய இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சிகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு 75.00 மில். ரூ. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு செலவிடப்பட்ட தொகை 49.45 மில்.ரூபா ஆகும். நிதி முன்னேற்றம் 61% ஆவதுடன் முதலீட்டுடன் தொடர்பான பொறுப்புகள் 1.18 மில். ரூபா ஆகும். அதன் கீழ் பின்வரும் பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. தேசிய விவசாய கொள்கையைத் தயாரித்தல்

தேசிய விவசாய கொள்கை – விடயப் பரப்பு

சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கை பிரகடனத்தின் நோக்கங்களுக்கு இணங்க, தங்கியிருக்கும் பொருளாதாரத்திற்குப் பதிலாக உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு விவசாயத் துறையின் பங்களிப்பை அதிகரிக்கும் பொருட்டு தேசிய விவசாய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், உணவுத் தொகுதிகளை நிலைபேறான விதத்தில் பாதுகாத்தல், பசுமை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், பயிர்கள் மற்றும் விளைச்சலைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டில் தன்னிறைவடைந்து ஏற்றுமதியைப் பிரதானமாகக் கொண்ட விவசாய தொழில்முனைவோரை கட்டியெழுப்புவதற்காக இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் பல்வேறு துறைகளை நோக்கி ஈர்ப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திட்டமிட்ட விவசாயக் கொள்கையின் அடிப்படையில் விவசாய சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து பங்குதாரர்களின் புரிந்துணர்வுடன் மற்றும் அவதானங்களுக்கு ஊடாக நேரடியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியதாக தேசிய விவசாயக் கொள்கைக்கு பதின்மூன்று (13) இலக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தேசிய விவசாய கொள்கை மூலம் கவனம் செலுத்தும் பிரதான பிரிவுகள்,

தேசிய விவசாய கொள்கையின் கவனம் பிரதானமாக இரு பிரிவுகளில் செலுத்தப்பட்டுள்ளது. அவையாவன,

1. *உணவு மற்றும் விலங்கு உணவுப் பயிர்கள்*
2. *தரமான உணவுடன் கூடிய நிலைபேறான உணவுப் பாதுகாப்பு*

கவனம் செலுத்த வேண்டிய பிரதான துறைகள்,

தேசிய விவசாய கொள்கை வகுப்பின் போது மேற்கொள்ளப்பட்ட ஆழமான கலந்துரையாடல்களின் ஊடாக கொள்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பின்வரும் எட்டு (08) முக்கிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. *பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் விருத்தி*
2. *உணவு மற்றும் கால்நடை உணவுப் பயிர்களுக்கான அடிப்படைத் தேவைகள் தொடர்பாக சுயாதீனம் மற்றும் தன்னிறைவை அடைதல்*
3. *திட்டமிடப்பட்ட வளப் பயன்பாடு*
4. *சந்தைப் போட்டித் தன்மையை உருவாக்குதல்*
5. *காலநிலைக்கு ஈடுகொடுக்கும் தன்மைகொண்ட விவசாயத் துறை*
6. *அனைத்து வகையான இடர்நேர்வு மற்றும் நிச்சயமற்ற தன்மைகளைக் குறைத்தல்.*
7. *விவசாயத் துறைக்கு அதிக இளைஞர்களையும் பெண்களையும் உள்ளீர்த்தல்*
8. *மத்திய அரசு மற்றும் மாகாணங்களுக்கு இடையே சிறந்த தொடர்பைப் பேணுதல் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரினதும் ஒருமித்த கருத்துடன் தாயரிக்கப்பட்ட தேசிய விவசாய கொள்கையின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பன பின்வருமாறு;*

தொலைநோக்கு:

தேசிய சுபீட்சத்தை வெற்றிகொள்வதற்கு நிலைபேறான உணவுப் பாதுகாப்பு

செயற்பணி:

உலகளாவிய ரீதியாக போட்டியிடும் ஆற்றல்கொண்ட விவசாய உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தை பொறிமுறையின் மூலம் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரை திருப்திப்படுத்தும் வகையில் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய, நிலைபேறான மற்றும் சூழல் நட்பு உணவுத் தொகுதியை நிறுவுதல்

இலக்குகள்

- *2030 ஆம் ஆண்டளவில் அடைவதற்கு எதிர்பார்க்கும் தேசிய விவசாயக் கொள்கையின் இலக்குகள்*
- *நிலைபேறான மற்றும் சூழல் நட்பு விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வள உற்பத்தித்திறனை (2020 மதிப்பீடுகளின்படி) இரட்டிப்பாக்குதல்*
- *விவசாயிகள் / விவசாய உற்பத்தியாளர்களின் பொருளாதார இலாபத்தை இரட்டிப்பாக்குதல் (2020 மதிப்பீடுகளின்படி)*
- *தேசிய பொருளாதாரத்திற்கு விவசாய உணவுத் தொகுதியின் பங்களிப்பை 15% அதிகரித்தல்.*
- *விவசாய உணவு பெறுமதிச் சங்கிலிக்கு உள்நாட்டில் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல், தற்போதைய நிலையை விட குறைந்தபட்சம் 50% ஆல் அதிகரித்தல்.*
- *உயர் விளைச்சல் தரக்கூடிய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியின் அளவை தேசியத் தேவையில் 50% வரை அதிகரித்தல்.*
- *பயிர் உற்பத்தியில் சூழல் நட்பு உள்ளீடுகளின் பாவனைக்கான தேவையை 100% வரை அதிகரித்தல்.*
- *நாட்டில் தற்போதுள்ள உணவு மற்றும் கால்நடை உணவுகளுக்கான கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக பாதுகாப்பானதும் தரமானதுமான உணவு மற்றும் கால்நடை உணவுகளை வழங்குதல்.*
- *சான்றுப்படுத்தல், தரப்படுத்தல் மற்றும் ஏனைய விநியோகச் சங்கிலிகளுக்கு உதவி வழங்கும் அரச ஒழுங்குறுத்துகைகளுக்கு உட்பட்ட உணவு மற்றும் கால்நடை வளர்ப்பு முறையை நிறுவுதல்*
- *வினைத்திறன்மிக்க வர்த்தகப் பொறிமுறையுடன் கூடிய விவசாய தொழில் முனைவு ஆற்றலைக் கொண்ட விவசாய உற்பத்திக் குழுக்களை நிறுவுதல்.*
- *தீர்மானம் மேற்கொள்ளும் செயல்பாட்டில் விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தியாளர்களின் பங்களிப்பு மற்றும் கட்டாயப் பங்கேற்பை உறுதி செய்தல்.*
- *காலநிலை மற்றும் இதர அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் வகையிலான விவசாய உணவு முறைமையொன்றை இலங்கையில் நிறுவுதல்.*
- *தீர்மானம் மேற்கொள்வதற்கு வெளிப்படையான பொறுப்புணர்வு மற்றும் பொறுப்பான பங்கேற்பு நிர்வாக வழிமுறையொன்றை நிறுவுதல்*

கருப்பொருளுக்கு அமைவாக துறைகள்

- *பங்குதாரர்களின் அங்கீகாரம் பெறப்பட்ட பத்து (10) கருப்பொருள் துறைகள் மற்றும் அக்கருப்பொருள் துறைகளின் கீழ் இனங் காணப்பட்ட பதினைந்து (15) கொள்கைப் பிரகடனங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

(1). கருப்பொருள் துறை : பயிர் உற்பத்தி மற்றும் பயனுறுதித் தன்மை

1. *விவசாய சூழல் சாத்தியப்பாடுகளைப் பயன்படுத்தி மற்றும் உணவு உற்பத்தித் தொகுதிகளை பலப்படுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட உணவு உற்பத்தித் தொகுதியொன்றை நிறுவுவதன் ஊடாக உணவு / விலங்கு உணவு உற்பத்தி மற்றும் பயனுறுதித் தன்மை என்பவற்றை விருத்தி செய்தல்.*

(2). கருப்பொருள் துறை : உள்ளீட்டு முகாமைத்துவம்

2. பௌதீக உள்ளீடுகளை வழங்கல் மற்றும் வினைத்திறனாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் அந்த உள்ளீடுகளை முறையாக நுகர்வதற்கு வழியமைத்தல்.
3. விவசாய சமூகம் மற்றும் சூழல் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யும் அதே வேளையில் உள்ளீடுகளின் அதிகபட்ச பயன்பாடு மற்றும் சிறந்த முகாமைத்துவத்தின் ஊடாக விவசாய நிலங்களின் உற்பத்தித்திறன் மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றை மேம்படுத்துதல்.
4. நீர்ப்பாசன நீர் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு பங்கேற்பு முகாமைத்துவ அணுகுமுறை மூலம் பாசன நீரை முறையாகப் பயன்படுத்துதல்.

(3). கருப்பொருள் துறை : உயர் தொழில்நுட்ப முறைகள்

5. விவசாய உற்பத்தி செயல்முறையின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்காக அறுவடைக்கு முந்தைய / பிந்தைய முகாமைத்துவத்தில் பொருத்தமான நவீனமயப்படுத்தல்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் அவற்றை மேம்படுத்துவதை ஊக்குவித்தல்.

(4). கருப்பொருள் துறை : உணவு பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம்

6. மனித மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச தரத்தின் அடிப்படையிலான பாதுகாப்பான மற்றும் உயர்தர உணவு மற்றும் கால்நடை உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றலை மேம்படுத்துதல்.

(5). கருப்பொருள் துறை : சூழல் நட்பு செயல்பாடுகள்

7. சூழல் தொகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலம் விவசாய அபிவிருத்தியில் நிலைபேறான தன்மையை வலுப்படுத்துதல்.

(6). கருப்பொருள் துறை : விவசாய தொழில்முனைவு மற்றும் சந்தைப்படுத்தல்

8. மதிப்புச் சங்கிலிச் செயல்பாட்டில் மூலோபாய கூட்டாண்மை மூலம் குறிப்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை இலக்காகக்கொண்டு பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவித்தல்.
9. தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப பொருத்தமான விநியோக சேவைகளை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை அணுகலை மீட்டமைத்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

(7). கருப்பொருள் துறை : உற்பத்தியாளர்களை பலப்படுத்தல்

10. கிராமிய மற்றும் விவசாய சமூகத்தால் விவசாய நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்ளல், பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கு பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன்களை விருத்தி செய்வதற்கான பங்கேற்பு மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்துதல்.
11. விவசாய இயந்திரமயமாக்கலில் கவனம் செலுத்தக்கூடிய மற்றும் புதிய தொழில்நுட்பங்களுக்கான அணுகல்களை வழங்கவல்ல, உற்பத்தித்திறனை அடிப்படையாகக்கொண்ட ஊக்குவிக்கும் வழிமுறையொன்றின் ஊடாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர் சமூகத்தை வலுவூட்டல்.

(8). கருப்பொருள் துறை : காலநிலைக்கு ஈடுகொடுக்கும் திறன் மற்றும் இடர் முகாமைத்துவம்

12. உணவுப் பயிர்த் துறையின் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கு பொருத்தமான இயைபாக்கங்கள் மற்றும் தாக்கங்களை குறைக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவதை ஊக்குவித்தல்.
13. காலநிலை தாக்கங்கள் மற்றும் வேறு வகையான அனர்த்த நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நகர்ப் ற மற்றும் கிராமிய சமூகங்களை இணைத்து உணவு உற்பத்தி / விநியோகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்.

(9). கருப்பொருள் துறை : அறிவு முகாமைத்துவம் மற்றும் விவசாய செயற்திட்ட சேவைகள்

14. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் செயற்திட்ட சேவைகள் முகாமைத்துவம் மற்றும் விவசாயப் பிரிவுக்கு இணைத்துக்கொள்வது தொடர்பாக மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுடன் கூடிய தகவல் அபிவிருத்தி மற்றும் பரவலாக்கல் கட்டமைப்பு நிறுவுதல்.

(10). கருப்பொருள் துறை : நிருவாக மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம்

15. நிலைபேறான விவசாய அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு என்பவற்றை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொருட்டு தேசிய மற்றும் உள்ளூராட்சி ரீதியான பரந்த பங்குதாரர்களின் பங்களிப்புடன் கூடிய நிறுவன ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை வலுப்படுத்துதல்.

நிதி முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகள்	**பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்**	**செலவு செய்த தொகை**	**இலக்கு**
1. தேசிய விவசாய கொள்கையின் வரைவு தயாரிப்பது தொடர்பான ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள்	*0.80*	*1.33*	*01 அறிக்கை*
2. பங்குதாரர்களின் ஆலோசனை	*0.41*		*15 ஆலோசனைகள்*
3. விளம்பரங்கள்	*1.35*		
4. துண்டு பிரசுரங்கள் மற்றும் ஆவணங்களை தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகள்	*0.35*		*1 பத்திரிகை விளம்பரம்*
5. நிர்வாக செலவுகள்	*0.09*		*நிதி முன்னேற்றம் 44%*
மொத்தம்	*3.00*		

அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்

கௌரவ விவசாய அமைச்சரின் தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட தேசிய விவசாய கொள்கையின் வரைவு 10 பிரதான கருப்பொருள்களின் கீழ் 15 கொள்கைப் பிரகடனங்களின் ஊடாக 13 பிரதான இலக்குகளை பூர்த்தி செய்யும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுவினால் தேசிய விவசாயக் கொள்கை வரைவு தயாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மும்மொழிகளிலும் பத்திரிக்கை விளம்பரங்கள் மூலம் பொதுமக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், விவசாயிகள் அமைப்புகள், தனியார் துறையினர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோருக்கு இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு அவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டதுடன் அந்த யோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் அனைத்தும் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு இந்த தேசிய விவசாயக் கொள்கை அறிக்கை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தங்கியிருக்கும் விவசாயத் துறையிலிருந்து மீண்டு கேள்வியை அடிப்படையாக்கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதற்கு சூழல் நட்பு விவசாயத் தொகுதியொன்றை நிறுவுதல் மற்றும் அதன் மூலம் பொதுமக்களுக்கு நச்சுத்தன்மையற்ற உணவை வழங்குதல், இறக்குமதிப் பொருட்களுக்கான மாற்றீடுகள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த விவசாயத் தொழில்முனைவு ஆகியவற்றை உருவாக்குதல் மற்றும் அதன் மூலம் நாட்டின் இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் பல்வேறு துறைகளுக்கு ஈர்ப்பதற்கான விஷேட கவனம் செலுத்தப்பட்டு, மேற்குறிப்பிட்ட 13 கொள்கை நோக்கங்களை வெற்றி கொள்வதற்காக தேசிய விவசாயக் கொள்கையின் வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

2. விவசாய முகாமைத்துவ தகவல் அமைப்பை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல்

விவசாயத் துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் விவசாய தகவல் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த தகவல் அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் மூலம் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுபவர்களுக்கு தேவையான துல்லியமான இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். சந்தை விலை நிர்ணயம், பயிர் சேத மதிப்பீடு, உற்பத்தி திறன் அளவீடு மற்றும் பொருளாதார நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களை இந்த வலைத்தளத்தில் சேர்ப்பதன் மூலம் உபரியான உற்பத்திகள் தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்க முடியும்.

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**பூர்த்தி செய்ய வேண்டிய நிதி இலக்கு(மில். ரூபா)**	**செலவு செய்த தொகை (மில். ரூபா)**	**இலக்கு**	**அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்**
1. விழிப்புணர்வு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல்	*1.91*	*0.24*	*25 மாவட்டங்கள்*	*செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கான கேள்விக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட மாதிரி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*
2. தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல்	*1.00*		*02 கணனித் தொகுதிகள்*	*டெப் கணினிகளை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் 06 சிரேஷ்ட அதிகாரிகள் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தினர்.*
3. நிர்வாக செலவுகள்	*0.09*			
மொத்தம்	***3.00***		*அடைந்த நிதி முன்னேற்றம் 8%*	

3. கமநல சேவை நிலையங்கள் ரீதியாக மண் மாதிரிப் பரிசோதனை வசதிகளை உருவாக்குதல்

அறிமுகம்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் *(Zero Hunger -2) 2.1* பட்டினியை ஒழித்தல் *2.3,* விவசாய உற்பத்தித்திறனை இரட்டிப்பாக்கல், *2.4,* உணவு உற்பத்தித் தொகுதிகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் *(Life on Land -15) 15.9 2020* ஆண்டளவில் தேசிய மற்றும் பிராந்திய திட்டங்களுக்கு, அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு. வறுமை ஒழிப்பு மூலோபாயங்களுக்கு மற்றும் சூழல் தொகுதிகள் மற்றும் உயிரியல் பல்வகைத்தன்மைகளின் பெறுமானங்களை ஒன்றிணைத்தல் மற்றும் உயிரியல் பல்வகைத்தன்மைகளை மற்றும் சூழல் தொகுதிகளை பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான முறையில் பயன்படுத்தல் மற்றும் நிலைபேறான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல் *(15.a)* ஆகிய விடயங்களைக் கருத்திற்கொண்டு மண்ணின் பல்லுயிரியலைப் பாதுகாத்து உற்பத்தியைத் துரிதப்படுத்த தரமான உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இரசாயன உரப் பாவனையால் மண் மற்றும் மண் நீர் என்பவற்றின் மீதுள்ள பாதிப்புகளை மற்றும் மனிதர்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகள் என்பவற்றை குறைக்கும் வகையில் தற்போதைய அரசாங்கம் இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, சேதன உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

மண் பரிசோதனை

மேற்கூறிய விடயங்களைக் கருத்திற்கொண்டு, மண்ணைப் பரிசோதனை செய்து பயிரிடப்படும் பயிர் வகைக்கு ஏற்ப தேவையான தாவரப் போசணைப் பொருட்களை சிபாரிசு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றைக் கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் ஒவ்வொரு கமநல சேவை நிலையத்துக்கும் ஒன்று வீதம் *562* கமநல சேவை நிலையங்களுக்கு மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கமநல சேவை நிலையங்களில் மண் பரிசோதனை வசதிகளை ஏற்படுத்துதல். *(pH* அளவிடும் கருவி, *EC* அளவிடும் கருவி, இரசாயனப் பொருட்கள் என்பவற்றை வழங்கல், அதிகாரிகளுக்கான *20* பயிற்சி செயமர்வுகளை நடாத்துதல், *100,000* மண் பரிசோதனை அட்டைகள் மற்றும் *03* பதாகைகளை அமைத்தல் என்பனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை *26.68* மில். ரூபா ஆகும்.

பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)**	**செலவு செய்த தொகை (மில். ரூபா)**	**பௌதீக முன்னேற்றத்தின் இலக்கு**
562 கமநல சேவை நிலையங்களுக்கு மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கமநல சேவை நிலையங்களில் மண் பரிசோதனை வசதிகளை ஏற்படுத்துதல். *(pH* அளவிடும் கருவி, *EC* அளவிடும் கருவி, இரசாயனப் பொருட்கள் என்பவற்றை வழங்கல்*)*	***15.4***	*23.12*	*562* கமநல சேவை நிலையங்களுக்கு மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளை வழங்கல்
பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	***1.0***		*20* பயிற்சி நிகழ்ச்சிகளை வழங்கல்
மண் பரிசோதனை அட்டைகள் மற்றும் பதாகைகளை அச்சிடல்	***9.5***		*1,000,000* அட்டைகள் மற்றும் *3* பதாகைகள்
நிர்வாக செலவுகள்	***0.78***		

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக முன்னேற்றத்தின் இலக்கு
மொத்தம்	26.68		

நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

- *இந்த செயற்திட்டத்திற்கு 26.68 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 23.12 மில். ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் இதன் நிதி முன்னேற்றம் 87% ஆகும்.*

முன்னேற்றம் -பிரதான செயற்பாடுகளுக்கு அமைவாக

1. 562 கமநல சேவை நிலையங்களுக்கு நடமாடும் மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளை வழங்குதல்

- *உணவு மற்றும் விவசாய நிறுவனம் 100 மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளை வழங்யுள்ளது.*
- *கமத்தொழில் அமைச்சின் மூலம் 362 பரிசோதனை உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.*
- *காலநிலைக்கு சீரமைவான செயற்திட்டத்தின் ஊடாக 100 மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.*

2. விவசாய ஆலோசகர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் ஆகியோருக்கு மண் பரிசோதனை உபகரணத் தொகுதிகளைப் பயன்படுத்தி மண் மாதிரி பரிசோதனைகள் மேற்கொள்வது தொடர்பான பயிற்சி வழங்கல்

- *தற்போது கண்டி. மாத்தளை, திருகோணமலை, நுவரெலியா, பதுளை, மொனராகலை, மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.*
- *40 பயிற்சிச் செயலமர்வுகள் (435 AI /ARPAS) நடாத்தப்பட்டுள்ளன.*
- *கிழக்கு மாகாணத்தில் சுமார் 50% மண் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. 3,400 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன் 750,000 மண் பரிசோதனை அட்டைகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.*

4. இளைஞர் விவசாய தொழில்முனைவோரைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

அறிமுகம்

தொற்றுநோய் பரவல் நிலைமையின் போதும் இடர் முகாமைத்துவத்தை மேற்கொண்டு 2030 ஆண்டளவில் அடைந்துகொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2.3 இற்கு அமைவாக, சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்கள், குறிப்பாக பெண்கள், பழங்குடி மக்கள் (கிராமப்புற விவசாயிகள்) மற்றும் விவசாய குடும்பங்கள் ஆகியவற்றின் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் வருமானம் என்பவற்றை சமமாக அதிகரித்தல் ஏனைய உற்பத்தி வளங்கள் மற்றும் மானியங்கள், அறிவு, நிதிச் சேவைகள், சந்தை வாய்ப்புகள் மற்றும் பெறுமதி சேர்த்தல், பண்ணை மற்றும் பண்ணை அல்லாத வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் உற்பத்தியை இரட்டிப்பாக்க எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய விவசாய கொள்கையின் திட்டங்களுக்கு ஏற்ப மற்றும் தேவையுடைய சமுதாயத்தின் கிராமிய இளைஞர், யுவதிகளை இலக்காகக்கொண்டு அவர்களுக்கு தொடர்ச்சியாக வருமானம் ஈட்டுவதற்கு உதவி செய்வதற்கான ஒரு முயற்சியாக இளைஞர் விவசாய தொழில்முனைவோரைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தைக் குறிப்பிட முடியும்.

நடைமுறைப்படுத்தும் நிறுவனம்/ பிரிவு,

- *விவசாய உள்ளீட்டு முகாமைத்துவ பிரிவு / கமத்தொழில் அமைச்சு*
- *மாவட்ட விவசாய பணிப்பாளர் (மாத்தறை/காலி/ஹம்பாந்தோட்டை/களுத்தறை)*

நிதி முன்னேற்றம்

விபரம்	***ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)***	***செலவு செய்த தொகை (மில். ரூபா)***	***நிதி முன்னேற்றம் (%)***
விவசாய இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	***6.5***	***1.91***	***29% பொறுப்புகள் 0.15 (மில். ரூபா)***

மாவட்ட அடிப்படையில் அடைந்துள்ள முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

காலி மாவட்டம்

01) ***செயற்திட்டம் – எலுமிச்சை மற்றும் தோடம்பழச் செய்கையை பிரபல்யப்படுத்தல் – கரந்தெனிய***

அறிமுகம்

காலி மாவட்டத்தில் கரந்தெனிய பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பழ வகைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிப்புகளை மேற்கொள்ளும் விவசாய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதுடன், போசணைத் தன்மை அதிகமுள்ள ஆனால் அதிகளவில் பயன்படுத்தப்படாத கொடிதோடை போன்ற பழங்களை அடிப்படையாக்கொண்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதையும் இச்செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்செயற்திட்டத்திற்கு 0.128 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 0.128 மில். ரூபா செலவிடப்பட்டு 100% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள பெரும்பாலான பெண் தொழில்முனைவோர் இச்செயற்திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்தியுள்ளனர்.

கள அதிகாரிகள் மூலம் எலுமிச்சை மற்றும் கொடித்தோடைக் கன்றுகளை விநியோகித்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தல் என்பன கீழே உள்ள களப் புகைப்படங்கள் மூலம் காட்டப்படுகின்றன

கள மேற்பார்வை தினம் - 2021.12.13 - 14





இடம் : ஏ/ - ஹிபன்கந்த சமூக நிலையம்
பங்களிப்பு செய்த வளவாளர் - விவசாய ஆலோசகர் திரு. புத்திக மதுரங்க (உரகஸ்மன்ஹந்திய)
ஒருங்கிணைப்பு செய்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - அயோமா திலகரத்ன, நிலன்கா ஹேமந்தமாலா

பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	ஒதுக்கீடு (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தல்	0.0094625	60 பயிற்சியாளர்கள்	. ஆரம்ப சுற்றில் 90 விவசாயிகளுக்கு 1 பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
எலுமிச்சை நாற்றுகள் கொள்வனவு செய்தல்	0.065	300 கன்றுகள்	ஒவ்வொரு பயனாளிக்கும் 5 எலுமிச்சை செடிகள் வீதம் 450 எலுமிச்சை செடிகள் வழங்கப்பட்டன. செயல் திட்டத்தின் படி பௌதீக இலக்குகள் அடையப்படுகின்றன.
கொடித்தோடை நாற்றுகளை கொள்வனவு செய்தல்	0.053	600 கன்றுகள்	ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 10 கொடித்தோடை செடிகள் வீதம் 900 கொடித்தோடை செடிகள் வழங்கப்பட்டன.
நிர்வாக செலவுகள் (3%)	0.0012875	செயல் திட்டத்திற்கு அமைவாக பௌதீக இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.	
மொத்த தொகை	0.12875	0.128 மில். ரூபா செலவிடப்பட்டுள்ளது	

செயற்திட்டம் - 02) தேனீ வளர்ப்பு செயற்திட்டம் - கடவத்சத்தர

அறிமுகம்

காலி மாவட்டத்தில் உள்ள கடவத்சத்தர பிரதேச செயலாளர் பிரிவில் தேனீ வளர்ப்பில் ஆர்வமுள்ள 15 குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளை தெரிவு செய்து உள்நாட்டு தேன் உற்பத்தியை அதிகரித்து சந்தைக்கு தரமான தேனை வழங்கல் மற்றும் தேன் உற்பத்தி தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல் என்பனவே இச்செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். தேன் மெழுகு போன்ற துணை விளைபொருட்களை விருத்தி செய்தல் மற்றும் மருந்து உற்பத்திக்குத் தேனை வழங்குதல் ஆகியவை மூலம் கிராமிய தொழில்முனைவோரின் பொருளாதாரத்தை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தேனீ வளர்ப்புடன் பொருளாதார ரீதியாக இலாபகரமான மலர் வளர்ப்பையும் இத்துடன் ஊக்குவிக்க முடியும். பிரதேச ரீதியாக சிறு பண்ணை அலகுகளால் மேற்கொள்ளப்படும் தேன் உற்பத்தி அலகுகளை அதிகரிப்பதன் மூலம் அதிக பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இச்செயற்திட்டத்திற்கு 0.112 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் 0.112 மில்லியன் ரூபாய் செலவழிக்கப்பட்டு 100% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பயனாளிகளின் பயிற்சித் தேவைகள் பூர்த்தி செய்த விதம் மற்றும் தேவையான தொழில்நுட்ப உள்ளீடுகள் வழங்கப்பட்ட விதம் என்பவை பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.



களை கண்காணிப்பு நாள் - 2021.11.19
இடம் - விவசாயப் பயிற்சி நிலையம், போத்திவெல
பங்களிப்பு செய்த வளவாளர் - பண்ணை முகாமையாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் - என்.எம்.டபிள்யூ.சந்திரகாந்தி



பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	ஒதுக்கீடு (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
பயிற்சி நிகழ்ச்சிகள்	0.00965	15 பயனாளர்கள்	15 பயனாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இலக்கு வைக்கப்பட்ட 15 தேனீ பெட்டிகள், 15 குடித்தொகைகள், 15 முகக் கவசங்கள், மற்றும் 15 புகையடிக்கும் கருவிகள் தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளர்களுக்கு வழங்கப்பட்டன.
தேனீப் பெட்டிகளைக் கொள்வனவு செய்தல்	0.0275	15 தேனீ பெட்டிகள்	
தேனீக் குடித்தொகைகளை கொள்வனவு செய்தல்	0.03375	15 தேனீ குடித்தொகைகள்	
முகக் கவசங்களை கொள்வனவு செய்தல்	0.01125	15 முகக் கவசங்கள்	
புகையடிக்கும் கருவிகளை கொள்வனவு செய்தல்	0.03	15 புகையடிக்கும் கருவிகள்	
நிர்வாக செலவுகள்	0.00335	செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக இலக்குகளை 100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.	
மொத்த தொகை	0.1155		

03) செயற்திட்டம் - தும்பை பாகல் செய்கை செயற்திட்டம் - காலி

அறிமுகம்

இச்செயற்திட்டம் காலி மாவட்டத்தில் உள்ள கடவத் சத்தர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 50 தொழில் முனைவோருக்குச் சொந்தமான நிலத்தை வினைத்திறனாக பயன்படுத்தி, போசணைத் தன்மைகொண்ட பாரம்பரிய உணவான தும்பைப் பாகல் செய்கையை பிரபலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தும்பை பாகலுக்கு சந்தையில் அதிக விலை கிடைப்பதால், இச்செயற்திட்டத்தின் ஊடாக கிராமப்புற தும்பை செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். இச்செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு 0.04325 மில்லியன் ரூபா ஆவதுடன் இதற்காக செலவழிக்கப்பட்ட தொகை 0.04275 மில்லியன் ரூபா ஆகும். மேலும், 2022 ஆம் ஆண்டில் கடவத் சத்தர பிரதேச செயலகப் பிரிவில் தும்பை பாகல் செய்கை மேற்கொள்ள ஆர்வமுள்ளவர்களின் எண்ணிக்கையை 25% ஆல் அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கடவத் சத்தர பிரதேச செயலகப் பிரிவில் தும்பை பாகல் செய்கையாளர்களுக்கு நாற்றுகளை விநியோகம் செய்தல் மற்றும் அந்த நாற்றுகள் நடப்பட்டுள்ள விதம் என்பன பற்றிய அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.





2021.11.01
இடம் - பிரதேச செயலகம்
பங்களிப்பு செய்த வளவாளர் - விவசாய ஆலோசகர்
ஒருங்கிணைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் - கே.எச். மிஹிஷானி

பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	ஒதுக்கீடு (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தல்	0.01149	பயனாளர்கள் 50	50 பயனாளர்களுக்கான பயிற்சித் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு ரூபா 500.00 திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.
நடுகைப் பொருட்களைப் பெற்றுக் கொளளல்.	0.0305	400 நாற்றுகள்	ஒவ்வொரு பயனாளிக்கும் 8 செடிகள் வீதம் 400 நாற்றுகள் வழங்கப்பட்டன.
நிர்வாக செலவுகள்	0.00126	ரூ.500/= திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.	
மொத்த தொகை	0.04325		

04) செயற்திட்டம் - காளான் வளர்ப்பு - ஹபராதுவ 0.10815 மில்லியன் ரூபா

அறிமுகம்

மாமிசமல்லாத மற்றும் நச்சுப்பொருட்களற்ற உணவுப் பொருட்கள் மீதான பொதுமக்களின் ஆர்வம் அதிகரித்து வருவதால், சந்தையில் காளான் உற்பத்திகளுக்கு அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது. காளான் வளர்ப்புக்கு அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்ட காலி மாவட்டத்தின் ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவில் வணிக ரீதியான காளான் வளர்ப்பை பிரபல்யப்படுத்துவதன் மூலம் காளான் வளர்ப்பு உற்பத்திகளை ஊக்குவித்தல், போஷாக்கு தேவைகளை அதிகரித்தல், சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வீடுகளில் பெண் பெண் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல் என்பன இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறன. பூச்சிப் பீடைகளின் தாக்கங்களுக்கு உட்படாத காளான் உற்பத்திகள் மூலம் தரத்தில் சிறந்த உற்பத்திகளை கிராமிய சந்தைக்கு வழங்க முடியும். இந்த செயற்திட்டத்திற்கு 0.106 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு 0.95 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கள கண்காணிப்பு -2021.10.11
இடம் - பிரதேச செயலகம், ஹபராதுவ
பங்களிப்பு செய்த வளவாளர் - விவசாய ஆலோசகர்
ஒருங்கிணைப்பாளர் - கே.எஸ்.அமாலி (அபிவிருத்தி உத்தியோகத்தர்)





செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	ஒதுக்கீடு (மில். ரூபா.)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	0.005	1 நிகழ்ச்சி	பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
பூச்சி எதிர்ப்பு இஸ்ரேலிய வலைகளை வழங்குதல்	0.10185	21 பூச்சி எதிர்ப்பு இஸ்ரேலிய வலைகள்	17 பயனாளர்களுக்கு 18 இஸ்ரேலிய பூச்சி எதிர்ப்பு வலைகள் வழங்கப்பட்டன. 12,047 ரூபா திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.
நிர்வாக செலவுகள்	0.0013	0.012 மில். ரூபா திருப்பிச் செலுத்தப்பட்டது.	
மொத்த தொகை	0.10815		

05) செயற்திட்டம் - காளான் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக வளர்ப்பு இல்லங்களுக்கு தானியங்கி நீர் விசிறித் தொகுதிகளை வழங்குதல் - யக்கலமுல்ல

அறிமுகம்

காலி மாவட்டத்தின் யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவில் வெற்றிகரமாக காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 05 தொழில்முனைவோருக்கு காளான் வளர்ப்பின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு வளர்ப்பு இல்லங்களுக்கு தானியங்கி நீர் விசிறித் தொகுதிகளை வழங்குவதன் மூலம் ஆரம்ப நிலையில் உள்ள காளான் வளர்ப்பாளர்களை ஊக்குவித்தல், புதிய விவசாயத் தொழில் முனைவோரை ஊக்குவித்தல், காளான் வளர்ப்பில் காணப்படும் நோய்கள் மற்றும் பீடைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்த்த பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்முனைவோருக்கு மூலப்பொருட்களை வழங்குவதற்கு வாய்ப்பளித்தல் என்பன இச்செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த செயற்திட்டத்திற்கு 0.04 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு 0.04 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2021.10. 26

இடம் – வெலந்தாவ பிரிவு - திருமதி கே.ஏ. மானெல் ரேணுகா





பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	ஒதுக்கீடு (மில். ரூபா.)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
தானியங்கி நீர் விசிறித் தொகுதிகளை வழங்குதல் (50% பயனாளர் பங்களிப்பு)	0.0375	5 நீர் விசிறித் தொகுதிகள்	3 பயனாளர்களுக்கு தானியங்கி நீர் விசிறித் தொகுதிகளை வழங்கப்பட்டன.
நிர்வாக செலவுகள் (3%)	0.001125		
மொத்த தொகை	0.038625		

ஹம்பாந்தோட்டை மாவட்டம்

01) தெளிப்பான் நீர் பாசனத்தின் கீழ் மரக்கறிச் செய்கை - பந்தகிரிய - 0.9579 மில். ரூபா

அறிமுகம்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஹம்பாந்தோட்டை மற்றும் லுணுகம்வெஹெர பிரதேச செயலகங்களுக்குரிய பந்தகிரிய கமநல சேவைப் பிரிவின் பந்தகிரிய விவசாய ஆலோசகர் பிரிவில் வர்த்தக ரீதியாக மரக்கறிச் செய்கை மேற்கொள்ளும் 15 விவசாயிகளுக்கு நீர் பிரச்சனையைத் தீர்ப்பதன் மூலம் சிறந்த விவசாய நடைமுறைப் (GAP) பரிந்துரைகளை பின்பற்றச் செய்வதன் பயிர் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியின் அளவு மற்றும் தரம் என்பவற்றை அதிகரித்தல் மற்றும் தொடர்ச்சியாக காய்கறி உற்பத்தி செய்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் என்பவற்றை இந்த செயற்திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்கு 0.957900 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு 0.071140 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பந்தகிரிய விவசாய ஆலோசகரினால் மேற்கொள்ளப்பட்ட கள அவதானிப்புகள் தொடர்பான மற்றும் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் என்பவற்றை விளக்கும் புகைப்படங்களை கீழே காணலாம்.





பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	ஒதுக்கீடு (மில். ரூபா.)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
½ ஏக்கர் நீர் விசிறும் தொகுதிகளை கொள்வனவு செய்தல்	0.675	15 தெளிப்பான் நீர் விசிறும் தொகுதிகள்	டொலருக்கு நிகராக தெளிப்பான் நீர் விசிறும் தொகுதிகளின் விலை அதிகரித்தமை, பொருத்தமான வழங்குனர் ஒருவர் இல்லாமை, போதியளவு விவசாயிகளின் பங்களிப்பு காணப்படாமை போன்ற பிரச்சினைகளின் காரணமாக திட்டமிட்ட அடிப்படையில் இச்செயற்திட்டத்தின் இலக்குகளை அடைய முடியவில்லை.
டீசல் நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் (3 அங்குல 7 குதிரை வலு)	0.13	2 நீர் இறைக்கும் இயந்திரங்கள்	
டீசல் நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் (2 அங்குல 5 குதிரை வலு)	0.55	1 நீர் இறைக்கும் இயந்திரங்கள்	
நெப்ஸக் திரவ விசிறிகளைக் கொள்வனவு செய்தல் (16 லீட்டர்)	0.07	7 நெப்ஸக் திரவ விசிறிகள்	
பயனாளர்கள் எண்ணிக்கை		15	15 பந்தகிரிய
பயிற்சிச் செயலமர்வுகள்		1	பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டு கள மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன. பயிற்சி பட்டறை நடத்தப்பட்டு கள கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.
கள மேற்பார்வை எண்ணிக்கை		30	
நிர்வாக செலவுகள் (3%)	0.0279		
மொத்த தொகை	**0.9579**		

03) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உளுந்துச் செய்கையை அறிமுகம் செய்தல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல்

அறிமுகம்

ஹம்பாந்தோட்டை மாகாண இடை வலயப் பிரதேசங்களில் பெரலிஹெல, வீரவில, பந்தகிரிய, லூநம, அம்பலாந்தோட்டை மற்றும் மயூரபுர ஆகிய கமநல சேவைப் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 விவசாயிகளைப் பயன்படுத்தி 2021 சிறு போகத்தில் 100 ஹெக்டயர் நிலப்பரப்புக்கு தேவையான உளுந்து விதைகள் 3,000 கிலோ கிராம் உற்பத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 3.780000 மில். ரூபா ஆவதுடன் செலவு செய்யப்பட்ட தொகை 0.227868 மில்லியன் ரூபா ஆகும். பெரலிஹெல விவசாய ஆலோசகரினால் மேற்கொள்ளப்பட்ட கள அவதானிப்புகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.





கள மேற்பார்வை - பெரலிஹெல விவசாய ஆலோசகரினால் மேற்கொள்ளப்பட்ட கள அவதானிப்புகள்

பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	**பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்**
1. ½ ஏக்கருக்கான 25 தெளிப்பான் நீர் விசிறும் தொகுதிகளை கொள்வனவு செய்தல்	25	-
2. 125kg உளுந்து விதைகள்	125kg	125kg உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
3. 2000kg உளுந்து விதைகளை பயிரிட்ட விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்தல்	2000kg	-
4. பயிற்சிச் செயலமர்வுகள் 07	07	01
அபிவிருத்தி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்	பெரலிஹெல, வீரவில, பந்தகிரிய, லூநம, அம்பலாந்தோட்டை மற்றும் மயூரபுர	
பயனாளர்கள் எண்ணிக்கை	24	
நடாத்திய பயிற்சிச் செயலமர்வுகள்	01	
கள மேற்பார்வை எண்ணிக்கை	50	

02) விதை நெல் உற்பத்திக்கான இயந்திரமயமாக்கலை அறிமுகம் செய்தல், வீரவில விவசாய ஆலோசகர் பிரிவு -

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுணுகம்வெஹெர மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகங்களுக்குட்பட்ட வீரவில விவசாய ஆலோசகர் பிரிவில் நெற் செய்கைக்கான யாய 2

நிகழ்ச்சித் திட்டத்தின் தரமான விதை நெல் உற்பத்தி செய்வதற்கும் விதை நெல்லின் தூய்மையை அதிகரிப்பதற்கும் களைக் கட்டுப்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு புல் வெட்டும் இயந்திரங்களை வழங்குதல். ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 0.721000 மில்லியன் ரூபா செலவு செய்த தொகை 0.606530 மில்லியன் ரூபா ஆகும்.

கள மேற்பார்வை மற்றும் பௌதீக முன்னேற்றம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.
கள மேற்பார்வை- லூநம விவசாய ஆலோசகரால் நடத்தப்பட்டது.





பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா.)	பௌதீக இலக்குகள்	பௌதீக முன்னேற்றம்
விதை நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு புல் வெட்டும் இயந்திரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல்.	0.70	70 புல் வெட்டும் இயந்திரங்கள்	புல் வெட்டும் இயந்திரங்கள் 70 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
பயனாளர்கள்		70	70 பயனாளர் களுக்கு வழங்கப்பட்டன.
கள மேற்பார்வை		80	0.61 மில். ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் நிதி முன்னேற்றம் 84% ஆகும்.
நிர்வாக செலவுகள் 3%	0.021		
மொத்தம்	0.721		

மாத்தறை மாவட்டம்

01) செயற்திட்டம் – தேனீ வளர்ப்பை பிரபல்யப்படுத்தல் - மாலிம்பட

மாத்தறை மாவட்டத்தின் மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவில் வாழும் கிராமிய மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், தேனீ வளர்ப்பை விருத்தி செய்வதன் மூலம் தேன் உற்பத்தியை அதிகரித்தல், இப்பிரிவில் தேனீ வளர்ப்புக் கிராமத்தை நிறுவுதல், தேனீக் குடித்தொகையை விருத்தி செய்வது தொடர்பான நிபுணத்துவமுள்ள தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல், இளைஞர்களுக்கு வருமானம் ஈட்டுவதற்கு இளைஞர் விவசாய தொழில்முனைவு. நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கங்களாகக் கொண்டு இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட தொகை 173,824.50 மில்லியன் ஆகும். செலவு செய்த தொகை 173,824.50 மில்லியன் ஆகும்.





கள மேற்பார்வை

24.12.2021 ஆம் திகதி ஹொரகொட மேற்கு – ஹொரகொட பிரதேசத்தில் தேனீ வளர்ப்புச் செயற்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. பிமாலி உதயங்கிகா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா.)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	0.00626	2 நிகழ்ச்சிகள்	2 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.
தேனீ வளர்ப்புக்கான தேனீ வளர்ப்பு உபகரணங்கள், முகக் கவசங்கள் மற்றும் புகையடிக்கும் கருவிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் கொண்டு செல்லல்	0.1625	30 விவசாயிகளுக்கு	இலக்கு வைக்கப்பட்ட 30 பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்பு உபகரணங்கள், முகக் கவசங்கள் மற்றும் புகையடிக்கும் கருவிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்யப்பட்டு போக்குவரத்து செய்யப்பட்டது. இச்செயற்திட்டம் 70% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.
பயனாளர்கள் எண்ணிக்கை		30	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை		02 02	பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் கள மேற்பார்வை நிறைவடைந்துள்ளன.
நிர்வாக செலவுகள்	0.0065925		செலவு செய்த தொகை (0.17 மில். ரூபா) ஆகும். நிதி முன்னேற்றம் 100% ஆகும்.
மொத்த தொகை	0.1738228		

02) தேனீ வளர்ப்புச் செயற்திட்டம் - மாத்தறை (கொட்டபொல)

மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெலியத்த கும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 30 இளம் பயனாளிகளை விவசாய

தொழில்முனைவுக்காக தேனீ வளர்ப்பை விருத்தி செய்வதன மூலம் அந்தக் கிராமத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல், அப்பகுதியில் தேன் மற்றும் அதை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை அதிகரித்தல் (தேன், தேன் மெழுகு மற்றும் தேன் வதை) என்பவற்றின் மூலம் தேன் உற்பத்தியை மேற்கொள்ளும் சமூகத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

கள மேற்பார்வை - 03.12.2021 ஆம் திகதி பெலியத்த கும்புர - வதுராவ பிரதேசத்தில் தேனீக் கூட்டங்களை அமைத்துள்ள விதம் தொடர்பான கள அவதானிப்பு நடவடிக்கைகள்.

பி. ரசிகா குமாரி, டபிள்யூ. கே. நுவன் தர்ஷன மற்றும் சந்தன ஹெட்டியாராச்சி ஆகிய அதிகாரிகள் இந்த கள மேற்பார்வையை மேற்கொண்டுள்ளனர்.





பௌதீக முன்னேற்றம்

செயற்பாடுகள்	ஒதுக்கீடு (மில். ரூபா.)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	0.01066	1 நிகழ்ச்சி	பயிற்சி நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளன.
தேனீ வளர்ப்புப் பெட்டிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் கொண்டு செல்லல்.	0.1535	150 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் (ஒரு விவசாயிக்கு 5 பெட்டிகள் வீதம்)	32 பயனாளர்களுக்கான 170 தேனீ பெட்டிகளை வழங்குவதன் மூலம் தொழில்முனைவு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை		02 08	02 08
நிர்வாக செலவுகள் (3%)	0.0049248		செலவு செய்த தொகை (0.17 மில். ரூபா) ஆகும்.
மொத்த தொகை		**0.1690848**	

<u>களுத்தறை மாவட்டம்</u>

01) களுத்தறை மாவட்டத்தில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதன் ஊடாக சிறு விவசாய வியாபாரங்களை ஊக்குவித்தல்

பி.செ.பி மில்லனிய (கி.சே.பி - பல்லந்துடாவ, பரகஸ்தோட்டை, கெலஸ்கமுவ) இங்கிரிய (கி.சே.பி – கெகுலதொல) பிரதேச ரீதியாக உபரியாக உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாகப் பதப்படுத்துவதன் மூலம் சிறு வியாபாரங்களை ஊக்குவிப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை ஊக்குவித்தல், சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் சுகாதார முறைகளுக்கு அமைவாக தயாரிப்புகளைப் பாதுகாத்தல் என்பன. ஒதுக்கப்பட்ட தொகை 0.2678 மில். ரூபா செலவு செய்த தொகை 0.2678 மில். ரூபா ஆகும்.

கள மேற்பார்வை - 2021.11.17 / 2021.11.30 ஆகிய திகதிகளில் மில்லனிய - கெலஸ்கமுவ கள கண்காணிப்புக் குழு / விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரி மற்றும் பிரதேச செயலகத்தின் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் மேற்கொண்ட கள அவதானிப்புகளின் புகைப்படங்கள் கீழே உள்ளன.





30.11.2021 புழுங்கல் அரிசி உற்பத்திக்கான நீராவி இயந்திரம் (ஸ்டீமர்) மற்றும் புழுங்க வைக்கப்பட்ட அரிசி உற்பத்திக்கான நெல் -இங்கிரிய – கெக்குலதொல

பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்கு	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
பயனாளர்கள் தெரிவு செய்தல்	10 பயனாளர்கள்	பயனாளர்கள் 04
பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்	01 பயிற்சிச் செயலமர்வுகள்	பயிற்சிச் செயலமர்வுகள் 01
பயன்களை வழங்கல்	10 உற்பத்தி அலகுகள்	04 உற்பத்தி அலகுகள்
பயனாளர்கள் எண்ணிக்கை	04	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை	01 08 (பயனாளர்கள் தெரிவு செய்தல் -04, உரிய பலன்களை வழங்கியதன் பின்னர் - 04)	

02) விவசாய ஏற்றுமதி கிராமங்களை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் - மில். ரூபா. 25.0

அறிமுகம்

கிராமிய இளைஞர் சமூகம் உள்ளிட்ட விவசாய சமூகத்தை அணிதிரட்டி தேசிய மற்றும் சர்வதேச ஆகிய இரண்டு விதமான சந்தை வாய்ப்புகளையும் இலக்காகக்கொண்டு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை *10,238,400.00.* ரூபா ஆகும். இதுவரை செலவிடப்பட்ட தொகை *7,581,008.00* ரூபா ஆகும்..

நோக்கங்கள்

இளம் தொழில்முனைவோருக்கு புதிய விவசாய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை எளிதாக்குதல்

நடைமுறைப்படுத்தும் நிறுவனம்/பிரிவு,

- விவசாய உள்ளீட்டு முகாமைத்துவ பிரிவு / கமத்தொழில் அமைச்சு
- மாவட்ட விவசாய பணிப்பாளர் (மாத்தறை/காலி/ஹம்பாந்தோட்டை/களுத்தறை)

நுவரெலியா மாவட்டம்

01) செயற்திட்டம் - புதிய பயிர்ச் செய்கை தொழில்நுட்பம் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகளை பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் - ஹங்குரங்கெத்த

அறிமுகம்

மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன்கெத்த உதவி விவசாயப் பணிப்பாளர் பிரதேசத்தில் பாரம்பரிய மரக்கறி செய்கையாளர்களுக்கு புதிய விவசாய தொழில்நுட்ப முறைகள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் என்பவற்றை அறிமுகம் செய்வதன் மூலம் விவசாய உற்பத்திகளின் தரப் பண்புகளை பாதுகாத்தல், நீரை வினைத்திறனாகப் பயன்படுத்தல், புதிய தொழில்நுட்பங்களின் ஊடாக பயிர் உற்பத்திக்கான செலவைக் குறைத்தல், ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக்கொண்ட பயிர்களை செய்கை செய்வதன் மூலம் நாட்டுக்கு வெளிநாட்டு வருவாயைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் என்பன இச்செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை *4.8* மில். ரூபா ஆகும்; செலவு செய்த தொகை *4.4808075* மில். ரூபா ஆகும்.

கள மேற்பார்வை

ஹங்குரன்கெத்த உதவி விவசாய பணிப்பாளர் வலய திரு. ஜயலத் பண்டார - மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மற்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர் திரு. ஆர்.எஸ். சிறிச்சந்திர ஆகியோர் *27.01.2022* ஆம் திகதி கள ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஹங்குரன்கெத்த உதவி விவசாய பணிப்பாளர் வலயம் - கொள்வனவு செய்த சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் பொலித்தீன் விரிப்புகள் களத்தில் பயன்படுத்தியுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.





பௌதீக முன்னேற்றம் -

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்கு	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. பயனாளர்களைத் தெரிவு செய்தல்	பயனாளர்கள் 30	பயனாளர்கள் 30
2. மின்சார வேலிகளைக் கொள்வனவு செய்தல்	30 மின் வேலிகள்	30 மின் வேலிகள்
3. சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் பொலித்தீன் விரிப்புகளைக் கொள்வனவு செய்தல்	30 சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் 60 பொலித்தீன் விரிப்புக	30 சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் 60 பொலித்தீன் விரிப்புக
4. சேதன உரக் கொள்வனவு செய்தல்	7200 KG சேதன உர வகைகள்	7200 KG சேதன உர வகைகள்
5. பூச்சி எதிர்ப்பு வலைகளைக் கொள்வனவு செய்தல்	30 பூச்சி எதிர்ப்பு வலைகள்	30 பூச்சி எதிர்ப்பு வலைகள்
6. நிர்வாக செலவுகள்	180000 ரூபாய்.	-
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம சேவகர் பிரிவு)	நுவரெலியா மாவட்டம் - ஹங்குரன்கெத்த உதவி விவசாய பணிப்பாளர் வலயம்	
பயனாளர்கள் எண்ணிக்கை	30	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை	பயிற்சிச் செயலமர்வுகள் - 05 கள மேற்பார்வை - 20	

கண்டி மாவட்டம்

01) செயற்திட்டம் - 01) செயற்திட்டம் - உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கண்டி மாவட்டத்தில் காய்கறி விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துதல்

அறிமுகம்

உயர் தொழில்நுட்பம் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் மூலம் தரத்தில் சிறந்த காய்கறிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு நுகர்வோரைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த ஏற்றுமதி சந்தையை உருவாக்குதல், உயர் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதன் மூலம் கண்டி மாவட்டத்தில் காய்கறி விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துதல். ஒதுக்கீடு செய்த தொகை 4.635 மில். ரூபா செலவு செய்த தொகை 2.029 மில். ரூபா ஆகும்.

கள அவதானிப்புகள்

காலம் - 2021.12.30 பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் வலைகள் விநியோகம். திரு. எஸ். ஜி. ஜி.எஸ். ஜயசிங்க - அபிவிருத்தி உத்தியோகத்தர் (பூஜாபிட்டிய பிரதேச செயலகம்) மற்றும்

2021.12.30 பாத்தஹேவஹெட்ட பிரதேச செயலகப் பிரிவில் வலைகள் விநியோகம். சாகரிகா தில்ஹானி - பிரதேச செயலாளர், மிஹிர பண்டார மற்றும் திமுத்து ரத்நாயக்க (அபிவிருத்தி உத்தியோகத்தர்)






பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	ஒதுக்கப்பட்ட நிதி (மில். ரூபா)	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்கு	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. 14 தெளிப்பான் நீர்ப்பாசனத் தொகுதிகளை விநியோகம் செய்தல்	*4.2*	*14*	*4*
2. 10 பாதுகாக்கப்பட்ட இல்லங்களை நிறுவுதல்.		*10*	*-*
3. 555 விவசாய வேலிகளை (கம்பி வலைகள்) விநியோகம் செய்தல்		*555*	*555*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம சேவகர் பிரிவு)	*கண்டி மாவட்டம்* *மெததும்பர, பூஜாபிட்டிய, பாத்தஹேவஹெட்ட, கங்க இஹல கோரளை, பஸ்பாகே கோரளை மற்றும் ஹதரலியத்த ஆகிய 6 பிரதேச செயலகங்களுக்கு விவசாய வலைகள் வழங்கப்பட்டுள்ளன.* *மெததும்பர, உடபலாத்த, ஹாரிஸ்பத்துவ மற்றும் அக்குரண ஆகிய 4 பிரதேச செயலகங்களுக்கு தெளிப்பான் நீர் விநியோக தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.*		
பயனாளர்கள் எண்ணிக்கை		*108 + 4 = 112*	
பயிற்சி மற்றும் தகவல் வழங்கல்	*0.2*	*பயனாளர்கள் 40*	
பல்பொருள் அங்காடிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்	*0.1*	*04*	
நிர்வாக செலவுகள்	*0.135*		
	4.635		

ஹம்பாந்தோட்டை மாவட்டம்

01) மரக்கறி உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் - ஹம்பாந்தோட்டை

கள மேற்பார்வை – விவசாய ஆலோசகர், லுாநம





பௌதீக முன்னேற்றம்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்		**காய்கறி செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்**	
ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	*0.803400*	**செலவு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)**	*0.65131803*
நோக்கங்கள்	*காய்கறி செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரித்தல்.*		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		*பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்*	*அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்*
1. அல்கத்தீன் குழாய்கள் 2"&200' (60m) 50 வளையங்கள்		*50*	*50*
2. 2" அங்குல மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள் - 08		*08*	*08*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள்		*லுாநம*	
பயனாளர்கள் எண்ணிக்கை		*50*	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள்		*01*	
அபிவிருத்தி நிகழ்ச்சிகள்		*காய்கறி செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.*	
கள மேற்பார்வை எண்ணிக்கை		*70*	
கள மேற்பார்வை மேற்கொண்ட அதிகாரிகள் *02 களப் புகைப்படங்கள்*		*விவசாய ஆலோசகர், லுாநம*	

தொழில்முனைவு விவசாய ஏற்றுமதிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் – அளுத்கம, நாவலப்பிட்டி

ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	*9.34*	செலவு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	*7.9026*
நோக்கங்கள்			
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள் நிதி, பௌதீக	அடைந்துள்ள முன்னேற்றம் நிதி, பௌதீக
1. 60 சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள், 500 லீட்டர் மற்றும் 1500 லீட்டர் தாங்கிகள் – 60 70% அரச பங்களிப்பின் கீழ் வழங்குதல்.		*8.16 100%*	*7.0416 100%*
2. டிஜிட்டல் தராசுகளை இலவசமாக வழங்கல்.		*0.2 100%*	*0.167 100%*
3. உலர்த்தும் இயந்திரங்களை இலவசமாக வழங்கல்.		*0.5 100%*	*0.252 100%*
4. பயிற்சி நிகழ்ச்சிகள் / கள மேற்பார்வை நிகழ்வுகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள்.		*0.25 100%*	*0.25 100%*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/கிராம அதிகாரிப் பிரிவு)		*கண்டி மாவட்டம் அளுத்கம, நாவலப்பிட்டி*	
பயனாளர்கள் எண்ணிக்கை		*60 பயனாளர்கள், சுமார் 600 மறைமுகப் பயனாளர்கள்.*	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை		*08 பயிற்சிச் செயலமர்வுகள், 03 கள மேற்பார்வை திகழ்வுகள்*	

கமத்தொழில் அமைச்சுக் கட்டட வளாகத்தில் நில அலங்கரிப்புச் செயற்திட்டத்தின் நிறைவு செய்யப்படாத செயற்பாடுகளை நிறைவு செய்தல்.

ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	*1.09*		செலவு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	*1.0817*	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்			பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள் நிதி	பௌதீக	அடைந்துள்ள முன்னேற்றம் நிதி பௌதீக
1. பயிர்ச் செய்கைப் பராமரிப்புக்கான விவசாய இரசாயனங்கள், உரம் மற்றும் ஏனைய தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல்.			*0.16*	*100%*	*0.1597 100%*
2. ஹெல பொஜுன் நிலையம் மற்றும் சாரதிகள் ஓய்வு அறை என்பவற்றில் அலுமீனியம் கதிரைகள், இருக்கைகள் மற்றும் மேசைகள் பொறுத்துதல்.			*0.35*	*100%*	*0.349 100%*
3. தேவையான இடங்களில் படிக்கட்டுகள் மற்றும் நடைபாதைகளை நிர்மாணித்தல்.			*0.12*	*100%*	*0.116 100%*
4. இரண்டு சுவர் வடிவமைப்புகளை நிர்மாணித்தல்.			*0.20*	*100%*	*0.199 100%*
5. ஹெல பொஜுன் நிலையத்தில் நுழைவாயிலொன்றை நிர்மாணித்தல்.			*0.21*	*100%*	*0.208 100%*
6. ஏனைய தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல். (கம்பி, பொலித்தீன், இரும்பு ஆணிகள், நீர்க் குழாய்த் தொகுதிகளுக்குத் தேவையான பாகங்கள்)			*0.05*	*100%*	*0.05 100%*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/கிராம அதிகாரிப் பிரிவு)			*கமத்தொழில் அமைச்சுக் கட்டட வளாகம்*		
பயனாளர்கள் எண்ணிக்கை			*சுமார் 2000 பயனாளர்கள்*		

5. விவசாயப் பிரிவைச் சேர்ந்த கள அதிகாரிகளின் மனித வள ஆற்றல்களை மேம்படுத்தல்

மாவட்ட விவசாய பணிப்பாளர்களின் கீழ் விவசாயப் பிரிவின் கள அதிகாரிகளின் மனித வள ஆற்றல்களை மேம்படுத்தல் மற்றும் விவசாயத் தொழில்நுட்பங்களை கிராமிய மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா)	*12,000,000.00*	*செலவு செய்யப்பட்ட தொகை (ரூபா)*	*10,702,355.46*
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் - கள அதிகாரிகளின் மனித வள ஆற்றல்களை மேம்படுத்தல்		*பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள் 25*	*அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம் 22*
நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம உத்தியோகத்தர் பிரிவு)		*மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*	

6. இளைஞர் தொழில்முனைவோருக்கு புதிய விவசாய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கான உதவி வழங்கல்

செலவுத் தலைப்பு - 118-02-03-062-2509

பல்வேறு தரப்பினரின் உதவியுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றுவதற்கான செயற்திட்டம்

விவசாயத்தை புதிய கோணத்தில் பார்க்கும் ஒரு மைல் கல்லாக இந்தச் செயற்திட்டத்தை குறிப்பிடலாம். அதன்மூலம் விவசாயப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை விவசாயத் துறையிலிருந்தே தேடுவதற்குரிய மற்று வழிமுறையாக புதிய கண்டுபிடிப்புகள் அல்லது தற்போதுள்ள தொழில்நுட்பங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதன் மூலம் புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்தல் மற்றும் குறித்த ஆக்கங்களை தொழில்நுட்ப ரீதியாக மேலும் வலுவூட்டுவதன் மூலம் சந்தைப்படுத்தும் வழிகளை உருவாக்குவதற்கான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தரப்பினருடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டமாகும்.

இச்செயற்திட்டத்தின் மூலம் உதவி பெறும் பல்வேறு தரப்பினர்,

- *இலங்கை புதிய கண்டுபிடிப்பாளர் சபை*
- *இலங்கை பல்கலைக்கழகங்கள் – மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடங்கள், பேராதனை*
- *பண்ணை இயந்திர ஆராய்ச்சி நிலையம்.*
- *தேசிய அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம்*
- *கருவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகள் நிலையம்.*
- *இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம்.*
- *விவசாய திணைக்களம்*
- *தேசிய பொறியியல் ஆராய்ச்சி நிலையம்.*
- *கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்*

நோக்கம்

புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கும் உள்நாட்டு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி விவசாயத் துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை வழங்குவதன் மூலம் இரு தரப்பினருக்கும் அனுகூலமான நிலைமையை ஏற்படுத்தும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை உருவாக்குதல்.

நிதி முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை மில். ரூபா.	செலவு செய்த தொகை
செயற்திட்டம் பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக வலுவூட்டுவதற்கான செயற்திட்டம்	*9.00 மில். ரூபா.*	*1.673633 மில். ரூபா.*

பௌதிக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதிக முன்னேற்றம்
1. கண்டுபிடிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் ஆரம்ப மதிப்பீடு (I மற்றும் II)	*ஆரம்ப மதிப்பீடு1*	*100% முன்னேற்றம்* *220 விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்ப மதிப்பீடு மற்றும் அளவுகோல்களை உருவாக்கும் நடவடிக்கை நிறைவுற்றுள்ளது.*
2. குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி	*அனைத்து தரப்பினருக்குமான விழிப்புணர்வு நிகழ்ச்சி*	*100% முன்னேற்றம்* *குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.*
3. ஒவ்வொரு துறையிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பாளர்களின் விண்ணப்பங்கள் தொடர்பான நேர்காணல்கள்	*150 புதிய கண்டுபிடிப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல்*	*100% முன்னேற்றம்* *நேர்முகப் பரீட்சைகள் நிறைவுற்றுள்ளன.*
4. தனியார் நிறுவனங்களுக்கு கண்டுபிடிப்பாளர்களை அறிமுகப்படுத்துதல்.	*தெரிவு செய்யப்பட்ட 125 கண்டுபிடிப்பாளர்களுக்கு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் காலாண்டு ரீதியான 2 மன்றங்களை நடத்துதல்,*	*தெரிவு செய்யப்பட்ட 45 கண்டுபிடிப்பாளர்களுக்கான முதலீட்டாளர் மன்றம் கன்னோருவை தாவர மரபணு வள மையத்தில் நடைபெற்றது. அங்கு, அவர்களது கண்டுபிடிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டு கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*
5. தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பாளர்களை நிதி உதவிகளைப் பெறுவதற்காக தனியார் துறையை நோக்கி வழிநடத்தல்	*நிபுணர் குழுவின் பரிந்துரையின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்டுபிடிப்பாளர்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உரிய நிறுவனங்களை நோக்கி வழிநடத்தல்.*	*தெரிவு செய்யப்பட்ட 45 கண்டுபிடிப்பாளர்களுக்கான முதலீட்டாளர் மன்றம் கன்னோருவை தாவர மரபணு வள மையத்தில் நடைபெற்றது. அங்கு, அவர்களது கண்டுபிடிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டு கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
6. நிதி உதவிக்காக வெளிநாட்டு உதவி பெறும் செயற்திட்டங்களை நோக்கி தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பாளர்களை வழிநடத்தல்	வெற்றிகரமான 20 கண்டுபிடிப்பாளர்கள்	80% முன்னேற்றம் 7 கண்டுபிடிப்பாளர்களின் 11 கண்டுபிடிப்புகளை SAAPP நிறுவனத்தினூடாக நிதியுதவி வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
7. நிபுணர் குழு பரிந்துரைத்தபடி தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பாளர்களை விருத்தி செய்தல்.	வெவ்வேறு 5 துறைகளிலிமிருந்து சுமார் 20 வெற்றிகரமான கண்டுபிடிப்பாளர்கள்	100% முன்னேற்றம் 20 வெற்றிகரமான கண்டுபிடிப்பாளர்களின் தயாரிப்புகள் அபிவிருத்தி செய்யும் பணிகளுக்காக பின்வரும் நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. * பண்ணை இயந்திர ஆராய்ச்சி மையங்கள் - 18 * விவசாயத் திணைக்களம் - 03 இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம் - 01 * கால்நடை மற்றும் விலங்கியல் பீடம், பேராதனை - 01 * தேசிய அறுவடை பின் அறுவடை தொழில்நுட்ப நிறுவனம் - 05 * கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் - 01 * கண்டுபிடிப்பாளர்கள் ஆணையகம் - 02

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
8. கள செயல்விளக்கங்கள் மற்றும் பயிற்சி திட்டங்கள்	தெரிவு செய்யப்பட்ட 125 கண்டுபிடிப்பாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.	100% முன்னேற்றம் பயிற்சித் திட்டங்கள் - 22 கள செயல்விளக்கங்கள் - 16 (Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக நடாத்தப்பட்டது.) முன்னேற்றம்
9. தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளை உள்நாட்டு அரச முதலீட்டாளர்களுக்கு அறிமுகம் செய்வதற்கான ஊடக நிகழ்ச்சிகளை நடத்துதல்.	விவசாயத்துடன் தொடர்பான பிரச்சினைகளுக்காக 55 தொழில்முனைவோருடன் இணைந்து 125 படைப்புகளைக் கொண்ட விவசாய கண்காட்சி	100% முன்னேற்றம் பேராதனை, கண்டி, கம்பஹா, மட்டக்களப்பு, அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, மாலபை, களனி, கேகாலை, அம்பாறை, மாத்தளை, காலி, மாத்தறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31 கண்டுபிடிப்பாளர்களின் 42 கண்டுபிடிப்புகளுக்கான 04 ஊடக விளம்பர நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
10. நிபுணர் குழுவுடன் கண்டுபிடிப்பாளர்களின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்யவும்	ஒவ்வொரு துறைகளிலுமுள்ள நிபுணர் குழுக்களின் 3 பிரதிநிதிகளுடன் முன்னேற்ற மீளாய்வுகளை நடத்துதல்	100% முன்னேற்றம் வருடாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது.
11. குறித்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளுடன் கண்டுபிடிப்பாளர்களை பரீட்சித்தல்	குழுவினால் பரிந்துரைக்கும் சோதனைகளின் அளவு	50% முன்னேற்றம் 12 கண்டுபிடிப்பாளர்களின் 31 கண்டுபிடிப்புகள் பரிசோதனைக்காக ITI நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இரண்டு கண்டுபிடிப்புகள் ஆர்தர் சி. கிளார்க் நிறுவனத்திற்கும், மூன்று விவசாயத் திணைக்களத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதிக முன்னேற்றம்
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம அதிகாரி பிரிவு)	நாடளாவிய ரீதியில்	
பயனாளர்கள் எண்ணிக்கை	125	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை	பயிற்சிச் செயலமர்வுகள் - 22 கள செயல்விளக்கங்கள் - 16	

கள மேற்பார்வை – 1). பாசிப்பயறைக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்திகள்





பங்குபற்றிய அதிகாரிகள் - திரு. கே.ஏ.ஆர் தர்மசேன
(பணிப்பாளர், கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீடு)

மேற்பார்வை - பாசிப்பயறைக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்திகள்

பிரதேசம் - அத்திலிகொட, காலி / காலம் - 2021.08.04

7. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடு - செலவுத் தலைப்பு - 118-02-03-062-2509

குறிக்கோள் *- கமத்தொழில் அமைச்சினால் செயல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் மற்றும் குறித்த செயற்திட்டங்களை வினைத்திறனாக செயல்படுத்துவதன் மூலம் அதிக உற்பத்தித்திறனை அடைதல்.*

நிதி முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
விவசாய செயற்திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு	*4.00*	*1.18*

பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
அமைச்சின் அதிகாரிகளால் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கள மேற்பார்வை நடவடிக்கைகள்	50 களச் சுற்றுலாக்கள்	38% முன்னேற்றம் 19 களச் சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டன.
மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல்	முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்	கொவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக இந்த வருடத்தில் இந்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை.

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்கள்	25 மாதாந்த மாவட்ட விவசாய குழுக் கூட்டங்களை நடாத்தல்	37% முன்னேற்றம். 113 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கொவிட் 19 தோற்றுப் பரவல் காரணமாக பெரும்பாலான மாவட்டங்களில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்கள் Zoom தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.
மாவட்டங்களில் உள்ள விவசாய அபிவிருத்தி அதிகாரிகள் விவசாய அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தல்	மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்திட்டங்களும்	70% முன்னேற்றம் வெளிநாட்டு நிதியுதவி பெறும் செயற்திட்டங்களின் கீழ் சிறிய அளவிலான விவசாய வியாபார கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, குருநாகல், பதுளை, மாத்தறை, கம்பஹா, புத்தளம், வவுனியா, கண்டி, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் 30 செயற்திட்டங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளன.
நிலைபேறான விவசாயம் தொடர்பான நிபுணர் குழு கூட்டங்கள்	04 கூட்டங்கள்	75% முன்னேற்றம் 03 கூட்டங்களை நடாத்தப்பட்டன.
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம அதிகாரி பிரிவு)	நாடு முழுவதும்	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை	கள செயல்விளக்கங்கள் - 19	

வெளிநாட்டு கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் (ASMP)

அறிமுகம்

உலக வங்கியினால் 29 ஜூன் 2016 ஆம் திகதி அங்கீகரம் அளிக்கப்பட்ட இச்செயற்திட்டத்திற்கு சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம் (IDA) நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தச் செயற்திட்டம் பிரதானமாக பொருளாதாரத்தின் கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கு உதவுதல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் என்பவற்றின் மீது கவனம் செலுத்துகிறது. அதேவேளை,

(அ) கிராமிய மற்றும் நகர்ப்புறங்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி கட்டமைப்பு மாற்றத்தை எளிதாக்குவதற்கும் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்துதல்;

(ஆ) கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் விவசாயத் துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் மற்றும் பெறுமதி சங்கிலி என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் ஏழைகள் மற்றும் எளிதில் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய மக்களுக்கு சந்தை வாய்ப்புகள் என்பவற்றை ஏற்படுத்தி அவற்றின் மூலம் பின்தங்கிய கிராமப்புற பிரதேசங்களின் வருமான வழிகளை மற்றும் வாழ்வாதார பாதுகாப்பை மேம்படுத்துதல்; மற்றும்

(இ) காலநிலையால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நவீன விவசாய அணுகல்களை வழங்குவதன் மூலம் வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி போன்ற அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு பங்களித்தல், விவசாயத் துறையை பல்வகைப்படுத்தல், பெறுமதி சேர்த்தல், போட்டித்தன்மையை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கைக்கான விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் அபிவிருத்தி நோக்கங்களாவன, விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை அணுகலை மேம்படுத்துதல் மற்றும் செயற்திட்டப் பகுதிகளில் சிறு அளவிலான வியாபர உரிமையாளர்கள் மற்றும் விவசாய வியாபரங்களின் பெறுமதி சேர்த்தல் செயல்பாட்டுக்கு உதவுதல் என்பனவாகும்.

தொலைநோக்கு

நவீனமயப்படுத்தலின் ஊடாக உணவுப் பாதுகாப்பு, தேசிய சுபீட்சம் என்பவற்றுக்கான சக்திமிக்க, பலம் பொருந்திய மற்றும் உற்பத்தித் திறன்மிக்க விவசாயத் துறையொன்று.

செயற்பணி

செயற்திட்டப் பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களை நிலைபேறாக முகாமைத்துவம் செய்வதன் ஊடாக சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நவீன மற்றும் சந்தை வாய்ப்புகளை முன்னிறுத்திய நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உலகளாவிய ரீதியாக போட்டித்தன்மைமிக்க உற்பத்திகளை தயாரித்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தை தொழில்முனைவு வாய்ப்புகளை வெற்றி கொள்ளுதல்.

நோக்கங்கள்

1. நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி போட்டித் தன்மைமிக்க சந்தை வாய்ப்புகளை இலக்காகக்கொண்ட விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்தல் (உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்)
2. மிகவும் சிறந்த சந்தை வாய்ப்புகளுக்கு சிறந்தமுறையில் எதிர்வினையாற்றும் வகையில் அவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல் (உற்பத்தி மற்றும் விற்பனைப் பல்வகைப்படுத்தல்).
3. விவசாய வணிகமயமாக்கலை நோக்கி நகருதல் (விவசாயத் துறையை வியாபாரமாக)

செயற்திட்ட விபரம்

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த திகதி	*2017.07.24*
உத்தேச செயற்திறன் திகதி	*31 டிசம்பர் 2021*
செயற்பாடு ஆரம்பித்த திகதி	*22 மார்ச் 2017*
ஒழுங்குறுத்துகை ஆரம்பித்த திகதி	*ஜூலை 2017*
செயற்திட்ட நீட்சி	*2023 ஜூன் மாத இறுதி*
நிதி மூலம்	விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் *(சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம்) செயற்திட்ட இலக்கம்: 5873-LK)*

செயற்திட்ட விபரம்

கமத்தொழில் அமைச்சின் செலவு	*64.23 மில். அமெ. டொலர், 9374.37 மில். ரூபா (பண அலகு = இலங்கை ரூபா (LKR) 1 அமெ. டொலர் = 145.95 ரூபா)*
நடைமுறைத் துறை *(அடிப்படை)*	விவசாயத் துறை
பொறுப்பாகவுள்ள நிறுவனம்	கமத்தொழில் அமைச்சு
இலக்குவைக்கப்பட்ட பிரதேசங்கள்	மாகாண சபைகள் வடக்கு - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கிழக்கு - மட்டக்களப்பு வட மத்திய - அனுராதபுரம், பொலன்னறுவை மத்திய - மாத்தளை ஊவா - மொனராகலை
பயனாளர்கள்	விவசாய உற்பத்திச் சங்கங்கள், சிறிய அளவிலான விவசாயக் குடும்பங்கள் மற்றும் பண்ணைகளுடன் தொடர்பான விவசாயக் குடும்பங்கள், கமத்தொழில் அமைச்சு *(MOA)*, குறித்த 05 மாகாண விவசாய அமைச்சுகள் மறைமுக : வர்த்தக வங்கிகள்
செயற்திட்டக் கூறுகள்	**கூறுகளின் பெயர்கள்** — **செலவுகள் (அமெ. டொலர்)** 1. உற்பத்தித் திறன் விருத்தி மற்றும் பல்வகைப்படுத்தல் — 57.73 2. செயற்திட்ட முகாமைத்துவம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு — 6.5

இரண்டாவது கூறு கீழ்வரும் துணைக் கூறுகள் மற்றும் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

அ). 2.1: விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி - *(3.20 மில். அமெ. டொலர்)*

ஆ). 2.2: நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா - *(38.39 மில். அமெ. டொலர்)*

இ). 2.3: உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் - *(15.14 மில். அமெ. டொலர்)*

ஈ). 2.4: பகுப்பாய்வு மற்றும் கொள்கைகள் ஆலோசனை உதவி - *(1.00 மில். அமெ. டொலர்)*

துணைக் கூறுகள் அடிப்படையில் முன்னேற்றம்

துணைக் கூறு 2.1: விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி		
2021 இல் ஒதுக்கப்பட்ட நிதி: 21.53 மில்லியன் ரூபா	*செலவு 13.38 மில்லியன் ரூபா*	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதிக முன்னேற்றம்**
சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) முன்னோடி செயற்திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டம் திருத்தப்பட்டுள்ளது.	*ISP ஆல் உருவாக்கப்பட்ட முன்னோடி செயற்திட்டங்களுக்கான பாடத்திட்டம் திருத்தப்பட்டுள்ளது.*	*நிறைவு செய்யப்பட்டுள்ளது. முன்னோடி செயற்திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட FBS பாடத்திட்டத்தைப் பெறவும், முன்னோடி செயற்திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட வடிவமைக்கப்பட்ட முதல் மூன்று FPO பாடத்திட்டங்களை இந்தப் பிரிவில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.*
ICT தளம் பற்றிய பிரச்சாரம் - FBS பயிற்சி	*தனிப்பட்ட விவசாயிகளின் பயிற்சி தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கான ICT தளத்தை உருவாக்க ஒரு சேவை வழங்குநரை ஆட்சேர்ப்பு செய்தல்*	*ToR நிறைவு செய்யப்பட்டு உலக வங்கிக்கு (WB) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதிக முன்னேற்றம்**
புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களின் FBS பயிற்சி	*புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களின் FBS பயிற்சிகளை பூர்த்தி செய்தல்.*	*பயிற்சிகள்நடைபெற்று வருகின்றன. மேலும் பெப்ரவரி 2022 இல் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 853 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*
விவசாயிகளுக்கான கள அனுபவச் சுற்றுலா	*விவசாயிகளுக்கான கள அனுபவச் சுற்றுலா*	*கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக நிறுத்தப்பட்டது.*
புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களின் FPO பயிற்சி	*நிலைபேறான விவசாய அமைப்புக்கான FPO பயிற்சி*	*தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு சேவை வழங்குநரை ஆட்சேர்ப்பு செய்ய திட்டமிட்டுள்ளதுடன் ஒரு சேவை வழங்குநரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ToR ஒன்று தயார் செய்யப்பட்டு அது தொடர்பான கருத்துகளைப் பெறுவதற்கு உலக வங்கிக்கு (WB) அனுப்பப்பட்டுள்ளது.*
முன்னோடி செயற்திட்டங்களுக்கான FPOக்களை நிறுவுதல் மற்றும் பதிவு செய்தல்	*முன்னோடி செயற்திட்டங்களுக்கான 20 FPO கள்.*	*விவசாய சங்கங்களை உருவாக்க செயற்திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு சேவை வழங்குநரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ToR ஒன்று தயார் செய்யப்பட்டு அது தொடர்பான கருத்துகளைப் பெறுவதற்கு உலக வங்கிக்கு (WB) அனுப்பப்பட்டுள்ளது.*

துணைக் கூறு 2.2 : நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா		
2021 இல் ஒதுக்கப்பட்ட நிதி: 1,815.60 மில்லியன் ரூபா	செலவு 1,484.74 மில்லியன் ரூபா	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்**
ISP இனால் 09 கொத்தணி அபிவிருத்தி திட்டங் (CDP) களை சமர்ப்பித்தல் மற்றும் மற்றும் ஏற்றுக்கொள்ளல்.	09 கொத்தணி அபிவிருத்தி திட்டங்கள் (CDP) 13 முன்னோடித் திட்டங்கள், பயிற்சி மற்றும் விவசாயிகளின் வெளிப்பாடு சுற்றுப்பயணங்களை தொடர்ந்து செயல்படுத்துதல், கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, மற்றவை திட்டமிட்டபடி முடிக்கப்பட்டன.	ராஜாங்கனை CDP 09 இல் வாழை கொத்தணி CDP அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அனுராதபுர மிளகாய் கொத்தணியின் CDP மதிப்பாய்வு குழுவுக்குக் கிடைத்துள்ளது. ISP இனால் திருத்தப்பட்டுள்ளது. அனுராதபுர கொய்யா கொத்தணியின் CDP வரைவு PD யிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அது சம்பந்தப்பட்ட செயற்திட்ட ஊழியர்களால் மீளாய்வு செய்யப்படுகிறது. ஏனைய 06 CDPகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளன.
ISP யின் ஊடாக 7 செயற்திட்ட மாவட்டங்களில் 16 பயிர் கொத்தணிகளை நிறுவுதல்.	ISP 16 பயிர் கொத்தணிகளை நிறுவுதல்.	சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 16 கொத்தணிகளில் பயிர்களின் நடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளீடுகளின் பெறுகைகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. கொத்தணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
13 முன்னோடிச் செயற்திட்டங்களை தொடர்ச்சியாக செயல்படுத்தல்	பயிற்சியளித்தல் மற்றும் விவசாயிகளுக்கான கள விளக்க சுற்றுலாக்கள்	கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக சில நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், ஏனையவை திட்டமிட்டபடி நிறைவு செய்யப்பட்டன.

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்**
7 செயற்திட்ட மாவட்டங்களில் 12 புதிய மற்றும் விரிவாக்க செயற்திட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவு செய்தல்.	பயிற்சியளித்தல் மற்றும் விவசாயிகளுக்கான கள விளக்க சுற்றுலாக்கள். உள்ளீடுகளை விநியோகம் செய்தல்.	கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக சில நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், ஏனையவை திட்டமிட்டபடி நிறைவு செய்யப்பட்டன.
5 புதிய மாவட்டங்களில் 12 முன்னோடி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	12 முன்னோடி செயற்திட்டங்கள்	பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன.

சௌபாக்யா நிகழ்ச்சித் திட்டம்		
துணைக் கூறு 2.3 உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகள்		
2021 இல் ஒதுக்கப்பட்ட நிதி: 180.14 மில்லியன் ரூபா	செலவு 126.76 மில்லியன் ரூபா	

செயற்பாடுகள்	இலக்குகள்	பௌதீக அடைவுகள்
சிறிய அளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏற்கனவே காணப்படும் குளங்கள், தொட்டிகள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் / மேம்படுத்துதல், உற்பத்தி மற்றும் சந்தை நுழைவுப் பாதைகள் மற்றும் புதிய கள நுழைவுப் பாதைகளை உருவாக்குதல், உலர்த்தும் தளங்கள் மற்றும் கொட்டகைகள், பயிர் கழிவுகளை உரமாக்கும் வசதிகள், களஞ்சிய வசதிகள் மற்றும் ஏனையவற்றை உள்ளடக்கிய கிராம அளவிலான களஞ்சிய மற்றும் உற்பத்திகளை கையாளும் வசதிகள்.		வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான 114 செயற்பாடுகளில் 14 செயற்பாடுகள் நடைபெற்று வருவதுடன், ஏனைய 100 செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (2018 முதல் 2021 வரை)

துணைக் கூறு 2.4 பகுப்பாய்வு மற்றும் கொள்கைகள் ஆலோசனை உதவி		
2021 இல் ஒதுக்கப்பட்ட நிதி: 14.5 மில்லியன் ரூபா	செலவு: 11.50 மில்லியன் ரூபா	
செயற்பாடுகள்	**இலக்குகள்**	**பௌதீக அடைவுகள்**
தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் கொள்கை ஆராய்ச்சிகளுக்கான மானியங்கள் மற்றும் வசதிகளை வழங்கல்	2 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன.	9 கொள்கை ஆராய்ச்சிகளில் 8 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய ஆராய்ச்சி இறுத்திக் கட்டத்தை அடைந்துள்ளது.
கூறு 3. செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு		
2021 இல் ஒதுக்கப்பட்ட நிதி: 189.37 மில்லியன் ரூபா	செலவு - 180.96 மில்லியன் ரூபா	
மொத்த ஒதுக்கீடு 2021: 2221.14 மில்லியன் ரூபா	**மொத்த செலவு 2021: 1,817.35 ரூபா**	
செயற்திட்டம் பிரதேசங்கள் (மாவட்டங்கள்)	யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை	

முன்னோடி செயற்திட்டங்கள் (2018) விரிவுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள், (2019-2020) மேலும் விரிவுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள் (2021) என்பன நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்

மாகாணம்/ மாவட்டங்கள்	இல	பிரதேச செயலகப் பிரிவின் பெயர்	செயற்திட்டத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவின் பெயர்
மத்திய மாகாணம் மாத்தளை	*1*	*தம்புள்ள*	*மாம்பழம்*	*வேவல வெவ* *வெலங்கொல்ல* *நிகவட்டவன*
	2	*தம்புள்ள/ கிம்பிஸ்ஸ*	*வெங்காய விதை*	*திகம்பத* *சியம்பலங்காஸ்வெவ, நாகலவெவ* *ஆடங்காவ*
	3	*கலேவெல, நாஉல,* *மாத்தளை, தம்புள்ள*	*காய்கறி* *(கலப்பின* *மிளகாய் விதை)*	*பலாபத்வெல, நீல்குள,* *இப்பன்கடுவ, பம்பரகஸ்வெவ,* *மொரகொல்ல, தலகிரியாகம*
விரிவாக்க திட்டங்கள்	*4*	*தம்புள்ள*	*மாம்பழம் (TJC)*	*வேவல வெவ* *அரவ்ல, ஹும்பஸ்கமுவ,* *வெலங்கொல்ல*
	5	*கலேவெல*	*கொடித்தோடை*	*பம்பரகஸ்வெவ, பட்டிவெல,* *அலுத்வெவ, கொஸ்பித,* *தண்டுவகொல்ல, பெலிகமுவ*
மத்திய மாகாணம் - மாத்தளை விரிவாக்க திட்டங்கள் 2021	*6*	*தம்புள்ள/ கிம்பிஸ்ஸ*	*வெங்காய விதை*	*திகம்பத* *சியம்பலங்காஸ்வெவ, நாகலவெவ* *ஆடங்காவ*
	7	*கலேவெல, நாஉல,* *மாத்தளை, தம்புள்ள*	*காய்கறி* *(கலப்பின* *மிளகாய் விதை)*	*பலாபத்வெல, நீல்குள,* *இப்பன்கடுவ, பம்பரகஸ்வெவ,* *மொரகொல்ல, தலகிரியாகம*
வட மாகாணம் யாழ்ப்பாணம்	*8*	*சாவகச்சேரி*	*மாம்பழம்*	*மீசாளை, கெட்பெலி, மந்துவில்,* *கொடிகாமம், எழுதுமட்டுவான்*
	9	*சாவகச்சேரி*	*பச்சை மிளகாய்*	*கைதடி வடக்கு* *மிருசுயில், வளாலை சந்திரபுரம்*
முல்லைத்தீவு	*10*	*ஒட்டுசுட்டான்*	*நிலக்கடலை*	*முத்துவிநாயகபுரம்,* *முத்தையன்கட்டுக்குளம்,* *பாண்டாரவன்னி, பேராறு,* *தட்டயமலி, கணேசபுரம்,* *தண்டுரான், ஒட்டுசுட்டான்,* *கனகரத்தினபுரம்*
விரிவாக்க திட்டங்கள் *2019* *முல்லைத்தீவு*	*11*	*ஒட்டுசுட்டான்*	*நிலக்கடலை*	*முத்துவிநாயகபுரம்,* *முத்தையன்கட்டுக்குளம்,* *பாண்டாரவன்னி, தட்டயமலி,* *கணேசபுரம், தண்டுரான்,* *ஒட்டுசுட்டான்*
	12	*துணுக்காய் , மந்தை – கிழக்கு*	*கொடித்தோடை*	*தேரங்கண்டல் வளநகர், திருநகர்,* *மல்லாவி, அம்பலபுரம் (மாங்குளம்)* *தேரங்கண்டல், வளநகர், திருநகர்,* *மல்லாவி, அம்பலபுரம்,* *வன்னிவிளாங்குளம் (மாங்குளம்)*
புதிய செயற்திட்டங்கள் 2021 *முல்லைத்தீவு*			*செத்தல் மிளகாய்* *உற்பத்தி*	
			செத்தல் மிளகாய் *உற்பத்தி*	
ஊவா *மாகாணம்* *மொனராகலை*	*13*	*புத்தல*	*கொடித்தோடை*	*மகாசென்புர* *வகுருவெல* *பல்வத்தை* *ஹொரபொக்க, உதாரவ*
	14	*மெதகம*	*அன்னாசி*	*மெதகம* *கின்னரபோவ* *பிடதெனிய* *மல்லகம, அளுத்வெல,* *மொனரவன*

மாகாணம்/ மாவட்டங்கள்	இல	பிரதேச செயலகப் பிரிவின் பெயர்	செயற்திட்டத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவின் பெயர்
	15	சியம்பலாண்டுவ	மாம்பழம் (TJC)	மடுகம, கொடயான, நுகஹகிவெல, கரபகொட, குருஹெல, கிவ்லேயாய, மஹகளுகொல்ல
விரிவாக்க திட்டங்கள் மொனராகலை	16	புத்தல	கொடித்தோடை	வகுருவெல, ககுரமொல, ஹொரபொக்க, உதாரவ மகாசென்புர பெல்வத்த, மொரட்டுகமுவ, யட்டியல்லதொட்டை, பெட்டகம்வெல
	17	மெதகம	அன்னாசி	பந்தியாவ, யகுன்னவ, பொத்துபந்தன, கொடபோவ
	18	சியம்பலாண்டுவ	மாம்பழம்	மடுகம, கொடயன, சூரியதலாவ, களுஒப்ப
புதிய செயற்திட்டங்கள்	19	வெல்லவாய	முருங்கை	மஹா அரகம, புபுதுவெவ, சிறிபுரகம, அடவெலயாய வெஹரயாய
புதிய செயற்திட்டங்கள்	20	படல்கும்புர மெதகம	தேனீ வளர்ப்பு	ஹிங்குரக்கொட படல்கும்புற, சேனாபத்திய பொத்துபந்தன அய்வல\ பண்டியாவல கொட்டபோவ
புதிய செயற்திட்டங்கள் 2021			செத்தல் மிளகாய் உற்பத்தி	
கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு	21	வாகறை (கோறளைப்பற்று வடக்கு)	காய்கறி உற்பத்தி – **பச்சை வெள்ளரிக்காய்**	கதிரவெளி, வாகறை வடக்கு மற்றும் மத்தி, கீரிமிச்சி, மாங்கேணி தெற்கு மற்றும் மத்தி, பாலச்சேனை, அம்பந்தன்வெளி, உரியங்கட்டு
	22	கதிரவெளி	நிலக்கடலை	கதிரவெளி, புச்சக்கேணி
	23	களுதாவளை	பச்சை மிளகாய்	களுதாவளை 1,2,3,4 களுதாவளை – மத்தி மற்றும் தெற்கு - சாந்திபுரம்
2021		களுதாவளை	செத்தல் மிளகாய்	
வட மத்திய மாகாணம் அநுராதபுரம்	25	NPC NPE இராஜாங்கனை ஆர்-பி நொச்சியாகம தலாவ, நாச்சியாதீவு கலென்பிந்துனுவெவ	பாகற்காய்	துட்டுவெவ, ஹல்மில்லகுளம, குருந்தன்குளம, துருவெல, மடவெலகம, பாவக்குளம, அல்வெல, ஜனசிரிகம, யாய-06, ரந்துனுகம, ரங்கெத்கம, மஹகலதாவ, கீரிக்குளம, கவரகுளம, மிஹிரிபுர, மஹமங்கடவெல, நாபொடவெவ, பஹலதலாவ
	26	இப்பலோகம விலச்சி திறப்பனை தலாவ	கொய்யா	இப்பலோகம, கோனபத்திராவ, மானாவ, கடியங்கல்ல, சங்குதவெவ, சந்தமாலிய, துத்பிட்டிய, செலஸ்திமடுவ, மாவத்தவெவ, தல்லமடுவ7
	27	இப்பலோகம	காளான்	இப்பலோகம, குச்சிக்குளம, இஹலகம, மணவ, கந்திரியகம, குடமீகஸ்கம, கடியங்கல்ல
	28	NPC NPE இராஜாங்கனை ஆர்-பி விலச்சி நொச்சியாகம திறப்பனை	மிளகாய்	துட்டுவெவ, கடலாவ, கொக்காவெவ, துருவெல, ஹல்மிலன்குளம, ஓயாமடுவ, அல்வெல, ஜனசிரிகம, அலுத்துடுவெவ, கவரக்குளம, மஹகலதவெவ, யாய 6,7,

மாகாணம்/ மாவட்டங்கள்	இல	பிரதேச செயலகப் பிரிவின் பெயர்	செயற்திட்டத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவின் பெயர்
		தலாவ நாச்சியாதீவு		கிராலபிட்டிய, அத்ததகல்ல, ராந்துவ, மணரம்ஹந்திய, மஹாவிலச்சிய, சந்தமாலிகாம, எரங்கெத்கம, மிஹிரிபுர, உலுக்குளம, இலந்தகஹ வெவ, புளியங்குளம, குட்டிக்குளம, கடகெல, கரகஸ்வெவ, மாவெதவெவ, நபொடவெவ
	29	இராஜாங்கனை நாச்சியாதீவு	காளான்	ஹெடோகம, தியுல்வவ, துருவில, மஹானெல்பேவ யாய 3,4, களுஆரச்சிகம, அங்கமுவ
புதிய செயற்திட்டங்கள் அநுராதபுரம்	30	விலச்சி, NPC, நொச்சியாகம	கற்றாளை	ஓயாமடுவ, குகுல்கடுவ, அந்தரவெவ, மணிங்கமுவ
	31	விலச்சி, NPC, நொச்சியாகம	முருங்கை	பெமதுவ, ஓயாமடுவ, எலயபடுவ, அந்தரவெவ, அத்தத்கல்ல, உலுக்குளம, ஹெல்மடகஸ்வெவ
பொலன்னறுவை	32	எலஹர	பப்பாளி (பச்சை)	கிரிஓய எலஹர அதரகல்லவெவ தமனயாய பகமுன
	33	எலஹர மெதிரிகிரிய ஹிங்குராக்கொட தமன்கடுவ லங்காபுர	மிளகாய்	எலஹர, அத்தேரகல்லேவ, கொட்டபிட்டிய தெற்கு, தமனயாய, புபுல, நிகபிட்டிய, யடிகல்பொத்த, ரஜஎல, மஹாசென்கம, ரொட்டவெவ, மீகஸ்வெவ, தம்சோபுர, தலகொலவெவ, மஹஅம்பகஸ்வெவ, கலிங்கஎல, லக்ஸஉயன, தமன கமுனுபுர, கல்தம்பரவ, சேனநாயக்கபுர, சங்கபோதிகம, மஹிந்தகம
	34	தமன்கடுவ திம்புலாகல ஹிங்குராக்கொட மெதிரிகிரிய எலஹர	பாகற்காய்	தமனயய, கிரிஓய, நிகபிட்டிய, புபுல, சருபிம, கல்ஓய, ரொட்டுவெவ, மஹசென்புர, நகரபுர, விஜயபுர, பலுகஸ்தமன, லக்ஸஉயன, தமனகமுனுபுர, கலிங்கஅல
	35	திம்புலாகல	காளான்	வெஹரகம, சிங்கபுர, மனம்பிட்டிய, வெஹெரகம கிழக்கு, தலுகன்ன
புதிய செயற்திட்டங்கள் - பொலன்னறுவை	36	திம்புலாகல, வெலிகந்தை	கற்றாளை	மஹாவெவ, வெஹெரகம, நவமில்லன, போகஸ்வெவ, நவகஹஎல
விரிவாக்க திட்டங்கள் - பொலன்னறுவை	37	எலஹர	பப்பாளி (பச்சை)	கிரிஓய, எலஹர, அதரகல்லவெவ, தமனயாய, கொட்டபிட்டிய தெற்கு, கங்கயாய
மொத்தம்				

பயனாளர்கள் எண்ணிக்கை	6483 (ஆரம்பம் முதல் முன்னோடி செயற்திட்டங்கள் மற்றும் ISP கொத்தணிகள்)
பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கள மேற்பார்வை நிகழ்வுகளின் எண்ணிக்கை	395 பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டதுடன் அப்போது நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியிலும் கள மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறிய வாழை உற்பத்தி கொத்தணிக் கிராமம் (சிறிய அளவிலான செயற்திட்டங்கள்), அனுராதபுரம்

களக் கண்காணிப்பில் பங்குகொண்ட அதிகாரிகள்: செயற்திட்டப் பணிப்பாளர், உலக வங்கியின் வதிவிட முகாமையாளர் மற்றும் வதிவிடப் பணிப்பாளர், விவசாய விஞ்ஞானி - வட மத்திய மாகாணம்,











சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) நிறுவப்பட்ட உற்பத்தி கொத்தணிகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம்

மாவட்டம்	கொத்தணியின் பெயர்	பௌதீக முன்னேற்றம்
யாழ்ப்பாணம்	உருளைக்கிழங்கு மற்றும் சிறிய வெங்காய உற்பத்தி	ஆரம்பத்தில் 50 ஏக்கரில் 100 பயனாளிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன், உருளைக்கிழங்கு நடுகை 19 டிசம்பர் 2021 அன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.
	சிறிய வாழை உற்பத்திக் கொத்தணி	அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப தொகுதிகள் டிசம்பர் 1வது வாரத்தில் 50 விவசாயிகளுக்கு மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு விவசாயியுடன் புதிய பயிர்செய்கை நிறுவப்பட்டதுடன், அது 50 விவசாயிகளுடன் தொடரும். உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன.
முல்லைத்தீவு	மாதுளை உற்பத்திக் கொத்தணி - செத்தல் மிளகாயுடன் ஊடுபயிர்ச் செய்கை	50 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒரு செயல்விளக்க மாதிரிக் களம் 'பகவான்' எனும் புதிய வர்க்கத்தைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இது 50 விவசாயிகளுடன் தொடர்ச்சியாக நடைபெறும். இடுபொருட்கள் கொள்வனவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனுடன் ஊடுபயிராக மிளகாய் பயிர்செய்யும் திட்டம் 2022 ஜனவரியில் ஆரம்பிக்கப்படும்.
	கோலிக்குட்டு வாழை உற்பத்திக் கொத்தணி - செத்தல் மிளகாயுடன் ஊடுபயிர்ச் செய்கை	50 ஏக்கர் கொண்ட 100 விவசாயிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு விவசாயியுடன் புதிய பயிர்செய்கை நிறுவப்பட்டதுடன், அது 100 விவசாயிகளுடன் தொடரும். உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன
மொனராகலை	கவெண்டிஷ் வாழை உற்பத்திக் கொத்தணி - செத்தல் மிளகாயுடன் ஊடுபயிர்ச் செய்கை	500 விவசாயிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. ஒரு செயற்பட்டு மாதிரிக் களம் நிறுவப்பட்டுள்ளதுடன் உள்ளீடுகளின் கொள்வனவு நடைபெற்று வருகிறது.
	மாம்பழம் உற்பத்திக் கொத்தணி -செத்தல் மிளகாயுடன் ஊடுபயிர்ச் செய்கை	200 விவசாயிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. ஒரு செயற்பட்டு மாதிரிக் களம் நிறுவப்பட்டுள்ளதுடன் உள்ளீடுகளின் கொள்வனவு நடைபெற்று வருகிறது.
	MD2 அன்னாசி உற்பத்திக் கொத்தணி	1 ஹெக்டர் மாதிரி நடுகை நிலப்பரப்பு திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஜனவரி 2022 ஆரம்பத்தில் 1000 மாதிரி உறிஞ்சிகள் கிடைக்கப்பெறவுள்ளன.
மட்டக்களப்பு	மாதுளை உற்பத்திக் கொத்தணி - செத்தல் மிளகாயுடன் ஊடுபயிர்ச் செய்கை	பயனாளிகள் தேர்வு நிறைவடைந்துள்ளதுடன் நிலப் பண்படுத்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன. மேலும் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் நடுகை நிறைவடைந்துள்ளது.

மாவட்டம்	கொத்தணியின் பெயர்	பௌதீக முன்னேற்றம்
அனுராதபுரம்	சிறிய வாழை உற்பத்திக் கொத்தணி	உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளன. 948 ஏக்கர் செய்கையில் 147 ஏக்கர் பழங்களில் ஏற்றுமதிக்குத் தரமான பழங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அறுவடைக்கு முந்தைய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 41075 வாழை கொத்துகளின் உயர் தரத்தைப் பேணுவதற்காக பழப் பொதியிடல் மேற்கொள்ளப்பட்டது. பதனிடும் நிலயத்தின் ஊடாக 22,000 கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டது. 50 வாழை நாற்றுமேடைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. 1 கிலோ கிராம் - 2.01 அமெரிக்கா டொலர் வீதம் 11,068 கிலோ கிராம் ஏற்றுமதி செய்யப்பட்டது.
அனுராதபுரம்	செத்தல் மிளகாய் உற்பத்திக் கொத்தணி	உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளன. முதல் பயிர்செய்கை மே 2021 இல் 100 விவசாயிகளைக்கொண்டு பகுதி தொழில்நுட்பத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அறுவடை நடைபெற்று வருகிறது. 300 விவசாயிகளுடன் 150 ஏக்கரில் ஜனவரி 2022 யில் நடுகை ஆரம்பிக்கப்படும்.நிலப் பண்படுத்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன.
	கொய்யா உற்பத்திக் கொத்தணி	45 விவசாயிகளுக்கு 82,500 பழங்களை மூடும் பைகள் வழங்கப்பட்டன. 1,000 குப்பை சேகரிக்கும் பைகள் கொள்வனவு செய்யப்பட்டன. ½ ஏக்கர் செயல் விளக்க களம் ஆரம்பிக்கப்பட்டு அது 50 புதிய விவசாயிகளுடன் தொடர்ச்சியாக நடைபெறும். கொள்வனவு நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன.
பொலன்னறுவை	செத்தல் மிளகாய் உற்பத்திக் கொத்தணி	கொள்வனவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளன. முதல் பயிர்செய்கை மே 2021 இல் 87 விவசாயிகளைக்கொண்டு பகுதி தொழில்நுட்பத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அறுவடை நடைபெற்று வருகிறது. 300 விவசாயிகளுடன் 150 ஏக்கரில் ஜனவரி 2022 யில் நடுகை ஆரம்பிக்கப்படும்.நிலப் பண்படுத்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன.
மாத்தளை	பெரிய வெங்காய ஊடுபயிர்ச் செய்கையுடன் மாம்பழச் செய்கை	65 விவசாயிகளுக்கு 18,200 நாற்றுகள் வழங்கப்பட்டு நடுகை நடைபெற்று வருகிறது.
	கொய்யா உற்பத்திக் கொத்தணி	½ ஏக்கர் செயல் விளக்க களம் ஆரம்பிக்கப்பட்டு அது 50 புதிய விவசாயிகளுடன் தொடர்ச்சியாக நடைபெறும். விவசாயிகளைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன.
	MD2 அன்னாசி உற்பத்திக் கொத்தணி	1 ஹெக்டர் மாதிரி நடுகை நிலப்பரப்பு திட்டமிடப்பட்டுள்ளதுடன் ஜனவரி 2022 ஆரம்பத்தில் 1000 மாதிரி உறிஞ்சிகள் கிடைக்கப்பெறவுள்ளன.

சௌபாக்யா நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்

தொ/இல	பயிர் வகை	ஒதுக்கீடு மில். ரூபா	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
			(மில். ரூபா)	%	விபரம்	%
1.	மிளகாய்ச் செய்கை	1021.27	1021.27	100.00	மாத்தளை மாவட்டத்தில் முன்னோடித் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பத்து பல பொலித்தீன் இல்லங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2ஆம் செய்கையில் ஏற்கனவே கலப்பின விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 150 கிலோ விதை அறுவடை செய்யப்பட்டுள்ளது. 10 புதிய பொலித்தீன் இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டு விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. புதிய பொலித்தீன் இல்லங்களில் நடும் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது. 3500 பயனாளிகளுடன் 1600 ஏக்கர் மிளகாய் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் 117 ஏக்கரில் (234 பயனாளிகள்) பயிர்ச் செய்கை நிறைவு செய்யப்பட்டு அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 810 ஏக்கரில் (1682 பயனாளிகள்) பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு நிலப்பண்படுத்தல் நடைபெற்று வருகிறது. புதிய மாவட்டங்களில் பயிரிடப்பட்ட 450 ஏக்கர் (900 பயனாளிகள்) பயிர் நிலங்களில் ஏப்ரல் 2022ல் அறுவடை மேற்கொள்ளக்கூடியாதாக இருக்கும். 200 ஏக்கரில் (918 பயனாளிகள்) பழப் பயிர்ச் செய்கையின் கீழ் மிளகாயை ஊடுபயிராக பயிரிடுவதற்கு நிலப்பண்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. செத்தல் மிளகாய் உற்பத்தி 12,800 மெட்ரிக் தொன் ஆகக் காணப்பட்டதுடன் சராசரி விளைச்சல் 8000 கிலோ கிராம் ஆகும். உற்பத்தியின் அளவு தேசிய தேவையில் 21.2% ஆகும். செயற்திட்டத்திற்கான மொத்தப் பங்களிப்பு 1021.27 மில்லியன் ரூபா ஆகும்.	100
2	சோள விதை உற்பத்திச் செய்கை	33.91	34.49	101.71	விவசாயத் திணைக்களத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தாய் விதைகளைப் விதைகளைப் பயன்படுத்தி 100 ஏக்கரில் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. 40,000 கிலோ விதைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அறுவடை முற்றுப் பெற்றது. விவசாயிகளிடம் இருந்து 28 மாதிரிகள் பெறப்பட்டதுடன், 3 மாதிரிகள் பொருத்தமானவை என கண்டறியப்பட்டது. மற்றைய மாதிரிகளில் ஈரப்பதன் அதிகமாகக் காணப்பட்டது. விவசாயிகளிடம் இருந்து தரமான மாதிரிகளைக் கொள்வனவு செய்வதற்கு விவசாயத் திணைக்களத்திடம் ஒப்பந்த முறையெதுவும் இல்லாததன் காரணமாக கொள்வனவு செய்வதற்கு தனியார் துறையினரை அறிமுகப்படுத்துவதற்கு உறுதியளிக்கப்படது.	100

3.	நிலக்கடலை உற்பத்தி	20.18	3.74	18.53	613 ஏக்கரில் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பயிர்களின் ஒரு பகுதி சேதமடைந்ததுடன் மீதமுள்ள பயிர் அறுவடை செய்யப்பட்டுள்ளது.	60
4	பெரிய வெங்காய உற்பத்தி	55.8	51.55	92.38	முன்னோடி செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 15 அலகுகளைப் பயன்படுத்தி மெய் விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 35 புதிய களஞ்சியங்கள் நிர்மாணித்து நிறைவு செய்யப்பட்டு, 26 விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. ஏனைய 09 களஞ்சியங்களுக்கான இறுதிக் கொடுப்பனவு ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கொண்ட பின்னர் ஒப்படைக்கப்படவுள்ளன. ஒரு களஞ்சியத்தில் 2500 கிலோ கிராம் வெங்காய குமிழ்களை சேமிக்க முடியும்.	95
5	சிறிய வெங்காய உற்பத்தி	0.75			யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக் கிழங்கு உற்பத்திக் கொத்தணியில் ஊடுபயிராக 2022 சிறு போகத்தில் ஆரம்பிக்க பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.	
6	உருளைக் கிழங்கு உற்பத்தி	105.13	38.8	36.91	பதுளை மாவட்டத்தில் முதற்கட்டமாக 40 பயனாளிகளை (30 ஏக்கர்) கொண்டு 288 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாம் கட்டத்தில், 20 பயனாளிகளை (11.5 ஏக்கர்) கொண்டு 47.2 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டது. மூன்றாம் கட்டமாக 120 பயனாளிகளுக்கு வழங்க உள்ளீடுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக 100 பயனாளிகளுக்கான (50 ஏக்கர்) உள்ளீடுகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. விதை விநியோகம் மற்றும் நடுகை நடவடிக்கைகள் 2021 டிசம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.	65
	மொத்தம்	**1237.04**	**1149.85**			92.952

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம்

அறிமுகம்

இலங்கையானது காலநிலை தொடர்பான இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகி வருவதால், அதன் பாதகமான விளைவுகள் பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. நீண்ட காலமாக வெள்ளம், சூறாவளி அல்லது அதிக காற்று, வறட்சி மற்றும் மண்சரிவு காரணமாக வருடாந்தம் வீடுகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயத் துறை என்பவற்றுக்கு ஏற்படும் இழப்புகள் 50 பில்லியன் ரூபாய் (327 மில்லியன் அமெரிக்க டொலர்) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.4 சதவீதம் அல்லது இலங்கை அரசின் செலவில் 2.1 சதவீதத்திற்கு சமனான தொகையாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கையில் அதனுடன் அதிகரிக்கும் எதிர்பார்ப்புகளும் அதிகரிக்கின்றன. அதற்கேற்ற வகையில் அதிக காலநிலை வேறுபாடு நிலவும் பிரதேசங்களில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலையில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, காலநிலைக்கு சீரமைவான விவசாய நடவடிக்கைகளின் பயன்பாடு மற்றும் நீர் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் நீர் பயனுறுதித் தன்மையை அதிகரிக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், குடும்பப் பொருளாதாரத்தை பலம்மிக்கதாகவும் ஈடுகொடுக்கும் வகையில் பலப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, குள அடுக்கைத் தொகுதிகளில் மேம்படுத்தப்பட்ட நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு, காலநிலைக்கு சீரமைவான விவசாயத் தலையீடுகளின் ஊடாக காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மையை விருத்தி செய்வது நாட்டின் தற்போதைய தேவையாகக் காணப்படுகிறது.

அதன் காரணமாக, இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட காலநிலைத் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழும் விவசாய சமூகங்களின் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் ஆற்றல் மற்றும் நீர்ப்பாசன விவசாயத்தின் உற்பத்தித்திறன் என்பவற்றை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு கமத்தொழில் அமைச்சு உலக வங்கியுடன் இணைந்து காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் செயற்திட்டத்தை தயாரித்து 125 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

காலநிலைக்கு ஏற்ற விவசாய முறைகளின் பாவனை மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் ஊடாக, விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட சிறு விவசாய உற்பத்திச் சமூகங்களுக்கு சந்தைக்கான அணுகலை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்த நோக்கத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இச்செயற்திட்டம் இலங்கையின் வட மாகாணம் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை), வடமத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை), வடமேல் மாகாணம் (குருணாகல் மற்றும் புத்தளம்), தென் மாகாணம் (ஹம்பாந்தோட்டை) மற்றும் ஊவா மாகாணம் (மொனராகலை) ஆகிய 6 மாகாணங்களின் 11 நிருவாக மாவட்டங்களில் உள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கங்களினால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களைச் சேர்ந்த 470,000 இற்கும் அதிகமான சிறு விவசாயிகள் மற்றும் 57,838 விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில், சுமார் 375,000 ஹெக்டயர் பயிர்ச் செய்கை நிலப்பரப்பை உள்ளடக்கும் வண்ணம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் (WFP), சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (IWMI) மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD) ஆகியவை ஒன்றிணைந்து நடாத்திய கூட்டுப் பயிற்சியின் விளைவாகப் கிடைத்த மிகவும் நம்பகமான தரவுகளின் அடிப்படையிலான அணுகுமுறையின் மூலம் காலநிலை மாற்றங்களின் பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ளும் பிரதேசங்களின் அடிப்படையாகக்கொண்டு இம்மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தொலைநோக்கு: காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் மற்றும் வினைத்திறன்மிக்க நீர் உற்பத்தித்திறன் என்பவற்றின் மூலம் நம்பகமான நீர் வழங்களை உறுதி செய்வதன் மூலம் நீர் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

செயற்பணி: *காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் விவசாய உற்பத்தியில் அதிக காலநிலை வேறுபாட்டின் தாக்கத்தை குறைப்பதற்கு குள அடுக்கைத் தொகுதிகளை மறுசீரமைத்தல் மற்றும் காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் விவசாய உற்பத்திக்கான நீர்ப்பாசன நீர் வழங்கலை உறுதி செய்யதல்.*

குறிக்கோள்கள்: *காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் விவசாய சமூகத்தின் விவசாயத்தின் உற்பத்தித்திறன் மற்றும் காலநிலைக்கு ஈடுகொடுக்கும் தன்மை என்பவற்றை மேம்படுத்துதல்.*

செயற்திட்ட விபரம்

செயற்திட்ட விபரம்	
செயற்திட்டத்தை ஆரம்பித்த தினம்	*2019 ஜூன்*
எதிர்பார்க்கும் காலம எல்லை	*06 ஆண்டுகள் (2019 ஜூன் முதல் 2026 ஜூன் வரை)*
செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த தினம்	*2019 ஜூன்*
செயற்திட்ட நீட்சி	*இல்லை*
நிதி வழங்கல் மூலம்	*IBRD/IDA – உலக வங்கி* *இலங்கை அரசு மற்றும் பயனாளிகள்*
வங்கி நிதி வழங்கல், விவசாய அமைச்சுக்கு	*கொவிட் தொடர்பான CERC நடவடிக்கைகளுக்கு 15 மில். அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டது.*
சம்பத்தப்பட்ட துறை	*காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளுக்கு ஈடுகொடுக்கும் திறன் மற்றும் நீர் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.*
பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள்	*விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.* *மாகாண சபைகள் (மாகாண விவசாய திணைக்களம், மாகாண நீர்ப்பாசன திணைக்களம், மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்), 11 மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களினால் அமுலாக்கம் செய்யப்படுகிறது.*

கூறுகள்	
பிரதான கூறுகள் *1. விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்* *2. விவசாயத்துக்கான நீர்* *3. செயற்திட்ட முகாமைத்துவம்* *4. எதிர்பாராத/ அவசர எதிர்வினையாற்றல்*	*கூறுகளுக்கு ஏற்ப செலவுகள் (திருத்திய)* *மில். அமெரிக்க டொலர் 31.3* *மில். அமெரிக்க டொலர் 73 கி* *மில். அமெரிக்க டொலர் 5.7* *மில். அமெரிக்க டொலர் 15*

பிரதான கூறுகளுக்கு அமைவாக முன்னேற்றம்

கூறு-1: விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்			
ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	*1144*	*செலவு (மில். ரூபா)*	*551 (48.2%)*
நோக்கங்கள்: *காலநிலைக்கு சீரமைவான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் பண்ணை நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலமும் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் பல்வகைப்படுத்தல்*			
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		*அடைய வேண்டிய இலக்குகள்*	*அடைந்த பௌதீக முன்னேற்றம்*
1. விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்			
1.1 காலநிலைக்கு சீரமைவான விவசாய தொழில்நுட்பப் பாவனை மற்றும் நீர்த் தொழில்நுட்பம்			
- *விவசாய ஆலோசகர்களுக்கான காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாயம் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.*		*1000 விவசாய ஆலோசகர்கள்*	
- *செயற்திட்ட பயனாளிகளுக்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாயம் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.*		*11335 விவசாயிகள்*	*14,064 விவசாயிகள்*
- *செயற்திட்ட பயனாளிகளுக்கு திறப்பனை பண்ணைப் பயிற்சிப் பாடசாலையில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாயம் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.*		*39 நிகழ்ச்சிகள்*	*பாடசாலையில் நிர்மாணப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.*
- *பயனாளிகளுக்கான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சுற்றுலா.*		*49 நிகழ்ச்சிகள்*	*6 நிகழ்ச்சிகள்.*
- *மாதிரிக் கிராமங்கள் மற்றும் செயற்பாட்டு மாதிரிகளை நிறுவுதல்*		*94 செயற்பாட்டு மாதிரிகள்*	*15 செயற்பாட்டு மாதிரிகள்.*
- கொத்தணிக் கிராமங்களை நிறுவுதல்		*33 கிராமங்கள் 264 ஹெக்.*	*ஹெக். 321*
- காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பயன்படுத்தி சிறு போக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்		*1857 ஹெக்.*	*ஹெக். 1194*
-காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பயன்படுத்தி இடைப் போக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.		*ஹெக். 1695*	*721 ஹெக்.*
- காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பயன்படுத்தி பெரும் போக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.		*1298 ஹெக். நெற் செய்கை* *ஏனைய களப் பயிர்கள்*	*5519 ஹெக். இல் நெல் மற்றும் ஏனைய களப் பயிர்கள் செய்கை செய்யப்பட்டுள்ளன.*

- வீட்டுத் தோட்ட அபிவிருத்தி - கூட்டுப்பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம். 1.2 உற்பத்தியாளர் குழுக்களை (PG) நிறுவுவதன் மூலம் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகளின் பயன்பாட்டை அதிகரித்தல். 1.2.1. உற்பத்தியாளர் கழகங்களை நிறுவுதல் 1.2.2. உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவுதல்	3113 விவசாயிகள் 153.5 ஹெக். 19392 விவசாயிகள் 297 47	535 இனங் காணப்பட்டுள்ளன. 34.5 மெ. தொன் தின்ம உரம் மற்றும் 24787 லீட்டர் திரவ உரம் என்பன உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 120 நிறுவப்பட்டு 65 பதிவு செய்யப்பட்டுள்ளன. 262 விவசாயிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
1.3 கமநல சேவை நிலையங்களை பல் சேவை வழங்கும் நிலையங்களாக அபிவிருத்தி செய்தல்		
1.3.1 தற்போதுள்ள கமநல சேவை நிலைய கட்டிடங்களை அபிவிருத்தி செய்தல்.	33	37 பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கட்டிட அபிவிருத்தி முடிந்தது. 9 செயல்பாட்டில் உள்ளன. ஒரு ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டியுள்ளது.
1.3.2 47 கமநல சேவை நிலையங்களுக்கு பண்ணை இயந்திரங்களை வழங்கல்.	568 அலகுகள்	95 விதை நடுகை இயந்திரங்கள் 47 கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
1.3.3 கமநல சேவை நிலையங்களுக்கு மண் பரிசோதனைத் தொகுதிகளை வழங்கல்.	100 தொகுதிகள்	விவசாய ஆலோசகர்களுக்கு 100 தொகுதிகள் வழங்கப்பட்டன.
.3.4 விவசாயப் பாதைகளை புனரமைத்தல். ப்பு 46 வழித்தடங்களில் 82 வழித்தடங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 20 வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 14 சாலைகள் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது.	46 கி.மீ	82 பாதைகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. 20 பாதைகளுக்கு ஒப்பந்தம் அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 14 பாதைகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன .
1.3.5 சிறிய அளவிலான தானியக் களஞ்சியங்களை நிர்மாணித்தல்	93	130 அடையாளம் காணப்பட்டுள்ளன. 22க்கான மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 3 வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
1.3.6 நடுத்தர அளவிலான தானியக் களஞ்சிங்களை நிர்மாணித்தல்	2	வட மத்திய மாகாணத்தில் ஒரு களஞ்சியசாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 40% வேலைகள் நிறைவடைந்துள்ளன.
1.3.7 ஏற்கனவே காணப்படும் விவசாயக் கிணறுகளை மறுசீரமைத்தல்.	184	430 அடையாளம் காணப்பட்டுள்ளன. 336 இல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 124 இல் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கூறு - 2 : விவசாயத்துக்கான நீர்			
ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	1767.5	செலவு (மில். ரூபா)	553 (31.3%)
நோக்கங்கள்: • காலநிலை ஏற்ற நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுவதற்கு உதவுதல். • திட்டமிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிக்க உதவுதல். • மத்திய மற்றும் மாகாண அரசுகளுடன் இணைந்து நிர்மாணிக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை பிரதேச மக்களுடன் இணைந்து கூட்டாகப் பராமரிப்பதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கும் உதவுதல்.			
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
2.1 நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல்			
2.1.1 காலநிலை உணர்திறன்மிக்க பகுதிகளில் விவசாய அபிவிருத்தி திட்டங்களில் (HSAADP) மீதமுள்ள பணிகளை நிறைவு செய்தல்.		47 திட்டங்கள்	100% பணிகள் நிறைவடைந்துள்ளன.
2. 1.2 நீரியல் ஆய்வுகள் (கட்டம் 1 மற்றும் ii)		8 குளப் படுக்கைகள்	100% பணிகள் நிறைவடைந்துள்ளன.
2.1.3 பொறியியல் ஆய்வுக் கட்டம் i		182குளங்கள்	100% பணிகள்
2.1.4 பொறியியல் ஆய்வுக் கட்டம் ii		677 குளங்கள்	நிறைவடைந்துள்ளன.
2.2 குளங்களை புதுப்பித்தல்		268 குளங்கள்	779 குளங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 619 குளங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளன. (74% நிறைவடைந்து.)
2.2.1 திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல்		268 குளங்கள்	
2.2.2 கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல்		268 குளங்கள்	241 குளங்களுக்கான திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 232 குளங்களுக்கான மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
2.2.3 விலைமனுக் கோரல்		268 குளங்கள்	
2.2.4 வழங்குதல்		268 குளங்கள்	
2.2.5 குளங்கள் புனரமைத்தல் - நிர்மாண வேலைகள்		268 குளங்கள்	96 குளங்களுக்கு கேள்விப் பத்திரங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. 96 குளங்களுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.
2.2 நீர்ப்பாசனத் தொகுதிகளை செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல்			48 குளங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 48 குளங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 24 குளங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
2.2.1 சமூக கணக்காய்வுக் குழுக்களை நிறுவுதல் மற்றும் திறன் அபிவிருத்தி		166	728 உறுப்பினர்களுடன் 102 குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.
2.2.2. குளக் கொத்தணித் தொகுதிகளை முகாமைத்துவம் செய்யும் குழுக்களை நிறுவுதல் மற்றும் அவற்றைப் பயிற்றுவித்தல்		27	88 பேர்களைக் கொண்டதாக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கூறு - 3 : செயற்திட்ட முகாமைத்துவம்			
ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா.)	298.5	செலவு (மில். ரூபா.)	சம்பளச் செலவுகள், இயக்கச் செலவுகள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு, வாகன வாடகை மற்றும் கட்டிட வாடகைப் பெறுகைபோன்ற செலவுகளுக்கு
நோக்கங்கள்:			
3.1 தகவல் கல்வி தொலைத்தொடர்பு (IEC) நிகழ்ச்சிகளை நடத்துதல்		300 நிகழ்ச்சிகள்	355 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன்அவற்றில் 12,654 பேர் பங்கேற்றனர்.
3.2 மாகாண மற்றும் தேசிய வருடாந்த செயல் திட்டங்களை தயாரித்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல்		24	24 திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
3.3 குறைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளுக்கான பொறிமுறையை நிறுவுதல்		11	பொறிமுறை நிறுவப்பட்டு, கிடைக்கப்பெற்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.
3.4 நடுத்தர கால மீளாய்வு மற்றும் மதிப்பீடு		1	ஆலோசனை நிறுவனம் கண்டறியப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டு செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பின்பற்றி மஞ்சள் செய்கை - நெலுவாகலை - வெல்லவாய



காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பின்பற்றி மாம்பழச் செய்கை - புத்தள



கொத்தணிக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிலக்கடலை விதை உற்பத்தி - அக்கராயன், கிளிநொச்சி

சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

அறிமுகம் : விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் இலங்கை அரசு என்பன இணைந்து சிறிய அளவிலான விவசாய வியாபார கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்திற்கான (SAPP) நிதியுதவியை வழங்குகின்றன. தங்களது திறன்களை மேம்படுத்தவும், உத்தரவாதப்படுத்தப்பட்ட சந்தைக்கான வர்த்தக ரீதியான கூட்டாண்மை மற்றும் சந்தைத் தொடர்புகளை ஏற்படுத்தவும் பங்குதாரர்களுக்கு (தனியார் நிறுவனங்கள், விவசாய அமைப்புகள், மற்றும் சிறிய அளவிலான விவசாயிகள்) மானிய அடிப்படையிலும் வட்டி வீதமொன்றுக் அமைவாக மானியங்கள் மற்றும் கடன்களை வழங்கும் அரச தனியார் உற்பத்தியாளர் கூட்டாண்மை (Public Private Producer Partnership) எனும் 4P அணுகலின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட விவசாயப் பொருட்களின் பெறுமதி சங்கிலியை பலப்படுத்துவதற்கான உதவிகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

தொடர்ந்து, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் பயனுள்ள கொள்கை ரீதியான சூழலை உருவாக்க உதவுதல் ஆகியன மூலம் விவசாய பாதைகள் மற்றும் அணைக்கட்டுகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் தத்தமது விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு SAPP செயற்திட்டமானது சிறிய அளவிலான விவசாயிகளுக்கு உதவி வழங்குகிறது.

நோக்கம்: சிறிய அளவிலான விவசாயிகளின் வறுமையை இல்லாதொழிக்கவும் போட்டித்தன்மையை அதிகரிக்கவும் பங்களிப்பு செலுத்துதல்.

குறிக்கோள்: வர்த்தக ரீதியாக உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான விவசாயிகளின் (57,000 குடும்ப அலகுகள்) வருமானத்தை (20% -30% வீதத்தால்) மற்றும் உண்ணும் உணவின் தரத்தை நிலைபேறான விதத்தில் அதிகரித்தல்.

இலக்குகள்:

1. தனியார் துறையுடன் இணைந்து சிறிய அளவிலான விவசாயிகள் மற்றும் அவர்களது நிறுவனங்களுக்கான சந்தை வாய்ப்புகளை அணுகும் திறனை அதிகரித்தல்.
2. SAPP இன் கீழ் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு நிலைபேறான விதத்தில் மற்றும் ஈடுகொடுக்கக்கூடிய பெறுமானத்தில் கிராமப்புற நிதிச் சேவைகள் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல்.
3. சிறிய விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட சமமான மற்றும் நிலைபேறான விவசாய வியாபார அபிவிருத்திக்கான கொள்கை சூழலை மேம்படுத்துதல்.

செயற்திட்ட விபரம்

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கும் தினம்	2017 ஜூன் 26	
உத்தேச செயற்திட்ட காலஎல்லை	06 வருடங்கள்	
செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தினம்	2017 ஜூன் 26	
செயற்திட்ட காலஎல்லை நீட்சி	-	
நிதி வழங்கல் மூலம் (வெளிநாட்டு நிதி)	விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) – 54.4 மில்லியன் அமெரிக்க டொலர்	
நிதி வழங்கல் மூலம் (சமவலு நிதி)	திறைசேரி, இலங்கை அரசு (19.3 மில்லியன் அமெரிக்க டொலர்)	திரட்டு நிதி (வரி மற்றும் இரண்டாம் நிலை ஊழியர்களின் சம்பளத்திற்கு)
		சுழற்சி நிதி (கடன் வழங்க)
சம்பத்தப்பட்ட துறை	விவசாய அபிவிருத்தி	
பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள்	செயற்திட்ட முகாமைத்துவ அலகு - கமத்தொழில் அமைச்சின் கீழ் SAPP	

கூறுகள்

பிரதான கூறு	கூறுகளுக்கு அமையவாக செயற்திட்ட செலவு (மில்லியன் ரூபா)	கூறுகளுக்கு அமையவாக செயற்திட்ட செலவு (மில்லியன் ரூபா) - 2021
1. வர்த்தக கூட்டாண்மைகளுக்கான அணுகல்	*5,966*	*848.5*
2. கிராமிய நிதி வசதிகளுக்கான அணுகல்	*5,086*	*1,100.0*
3. நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கைக் கலந்துரையாடல்	*1,004*	*144.6*
மொத்த செலவு (IFAD + இலங்கை அரசு)	***12,056***	***2100.0***

பிரதான கூறுகளுக்கு அமைவாக முன்னேற்றம்

கூறு - 01. வர்த்தக கூட்டாண்மைகளுக்கான அணுகல்

கூறு	*01. வர்த்தக கூட்டாண்மைகளுக்கான அணுகல்* *இந்தக் கூறு மேலும் இரண்டு துணைக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது: (1.1) 4P களை நிறுவுதல் மற்றும் (1.2) நிறுவன வலுவூட்டல் மற்றும் உற்பத்திக் குழுக்களின் திறன் விருத்தி (சந்தையை இலக்காகக்கொண்ட மாதிரியொன்றுக்குள்).* *இந்த செயற்திட்டத்தின் முடிவில் நேரடியாக 4P திட்டத்தில் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்தல், 43,000 வீட்டு அலகுகள் எனும் இலக்கை அடைதல் என்பவற்றுக்கு பங்களிப்பு செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது. 4P மூலம் உருவாக்கப்படும் தயாரிப்புகள் அல்லது சேவைகளுக்கான கேள்விகளுக்கு எதிர்வினையாற்றும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கு மேலும் 2,500 இளைஞர் யுவதிகளுக்கு உதவி வழங்கப்படவுள்ளது.*

ஒதுக்கீடு (மில்லியன் இலங்கை ரூபா)	*848.5*	**செலவு (மில்லியன் இலங்கை ரூபா)**	*523.3*

குறிக்கோள்: *சிறு விவசாயிகள் மற்றும் அவர்களது நிறுவனங்களின் சந்தை அணுகலை தனியார் துறையுடன் கூட்டாக இணைந்து அதிகரித்தல்.*

செயற்பாடுகள்	அலகு	இலக்கு	அடைவு
பண்ணை அபிவிருத்திக்கான மானியம் மற்றும் தொடக்க நிதியை ஏற்பாடு செய்தல்	பயனாளர்கள் எண்ணிக்கை	***5,647***	***9,746***
1.1 தனியார் துறையால் செயற்படுத்தப்படும் தனிநபர்களால் நிதி வசதிகள் வழங்கப்படும் புதிய பொது-தனியார் உற்பத்தி கூட்டாண்மைகளுக்கு (4P) மானிய ஏற்பாடுகளை வழங்கல். SAPP ஆனது தனியார் துறையால் செயற்படுத்தப்படும் 15 4P களைக் கொண்டுள்ளது.		*2,926*	*2,086*
1.2 SAPP திட்டத்திற்கு முன்பு, IFAD நிதியுதவியுடன் தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக விரிவுபடுத்தப்பட்ட 4Pகளுக்கு மானிய ஏற்பாடுகளை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தனியார் துறை மூலம் செயற்படுத்தப்படும் 17 4P கள் நிறுவப்பட்டுள்ளன. SAPP மூலம் விரிவுபடுத்தலுக்காக அவ்வாறான நான்கு கூட்டாண்மைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலே குறிப்பிட்டுள்ளபடி, நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுடன் மீள்கொள்வனவுக்கான பிரத்தியேக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.		*350*	*287*

1.3 விவசாயிகள் அமைப்புகளுக்கு தொடக்க நிதியை வழங்குதல் *இந்தச் செயல்பாட்டின் கீழ், விவசாயிகள் அமைப்புகள் ஊக்குவிப்பாளர்களாகச் செயல்படுவதோடு, விவசாயிகளின் விளைச்சலைக் கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான செயற்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு முழுப் பொறுப்பையும் விவசாயிகள் அமைப்புகள் கொண்டுள்ளது.* *அதன் பின்னர், விவசாயிகள் அமைப்புகள் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அல்லது முழு அறுவடையையும் தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. உழவர் அமைப்புகளின் உறுப்பினர்கள், அதாவது பயனர்களுக்கு உழவர் அமைப்புகள் ஊடாக வருமானத்தை ஈட்டுவதற்கு சந்தர்ப்பமேற்படுவதுடன், உழவர் அமைப்புகளுக்கு தங்களது ஒருங்கிணைப்பு, செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பு உருவாகின்றது. தற்போது, SAPP மூலம் விவசாயிகள் அமைப்புகளுடன் இதுபோன்ற 15 கூட்டாண்மைகள் செயற்படுத்தப்படுகின்றன.*		*2,371*	*7,391*

செயற்பாடுகள்	அலகு	இலக்கு	அடைவுகள்
பண்ணையின் வெளிப்புற வசதிகளை அபிவிருத்தி செய்தல் *பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சிறிய அளவிலான விவசாயிகளுக்கு உதவுவதற்கு மேலதிகமாக, SAPP ஆனது பண்ணைக்கு வெளியேயுள்ள விவசாய பாதைகள், நெல் வயல்களில் கால்வாய்களை திருத்தியமைத்தல்/ நிர்மாணித்தல் மற்றும் கிராமப்புற விவசாயத்துடன் தொடர்பான ஏனைய செயல்பாடுகள் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுதல்.*	*செயற்திட்டம் எண்ணிக்கை*	*28*	*தற்போது நடைமுறைப்படுத்தப்படும் எண்ணிக்கை - 16*
விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு தொடக்க நிதி உதவி வழங்குதல்	*உதவி வழங்கப்பட்டுள்ள விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளின் எண்ணிக்கை*	*11*	*1*
இளைஞர்களுக்கு தொடக்க நிதி உதவி வழங்குதல் *இந்த செயற்பாட்டின் கீழ், தொழில்முனைவோராக மாறுவதற்கு SAPP மூலம் இளைஞர்களுக்கு மானியங்களை வழங்கல்.*	*பயனாளர்கள் எண்ணிக்கை*	*550*	*476*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ள பகுதிகள்	*நாடு முழுவதும் (மதிப்பீடு/ தெரிவு செய்யும் முறையொன்றின் ஊடாக குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விவசாய உற்பத்தித் திறன் அதிகமுள்ள மாவட்டங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்ட போதிலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.)*		
பயனாளர்கள் எண்ணிக்கை -	*10,222 (திரளாக 21,541)*		

பயனாளிகளின் எண்ணிக்கை செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கையைக் குறித்து நிற்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு வீட்டு அலகிலிருந்தும் ஒரு பயனாளி மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார். 40 வயதுக்குக் கீழுள்ள தனிநபர்கள் இளைஞர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்தச் செயற்திட்டத்தின் மூலம் 4P கூட்டாண்மையின் கீழ் 43,500 வீட்டு அலகுகள் மற்றும் 2,500 இளைஞர் பயனாளிகளுக்கு சேவை வழங்கப்பட்டுகிறது. தற்போது தங்கள் பண்ணை நடவடிக்கைகளை வலுப்படுத்த நிறுவப்பட்டுள்ள 34 4P செயற்திட்டங்களில் 39,212 சிறு விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். இதுவரை 47% ஒட்டுமொத்த முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் ஒட்டுமொத்த திரள் வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 21,541 ஆகும். இந்த ஆண்டில் 10,222 மொத்த வீட்டு அலகுகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.	
நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகள்/ கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	• வியாபார அபிவிருத்தி மற்றும் FOP / COOP இன் நிறுவன வலுவூட்டலுக்கான 02 தொழில்நுட்ப உதவி வழங்கல் • தொழில்நுட்ப பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளின் கீழ் 219 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. • நடைமுறை அனுபவத்தை வழங்குவதற்கான 16 சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. • பெறுமதி சங்கிலித் தகவல் சேகரிப்பாளர்கள் / செயற்திட்ட தகவல் சேகரிப்பாளர்களுக்கான 02 பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டன.

கள மேற்பார்வை

2021 ஒக்டோபர் 23 ஆம் திகதி ருவன்சிறி பால் உற்பத்தி செயற்திட்டங்களின் பயனாளர்களுக்கு பால் உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு 2021 ஒக்டோபர் 23 ஆம் திகதி நடைபெற்றது.

திரு. அனுரா (BD நிபுணர்), திரு. சஜித் (திட்ட அதிகாரி) மற்றும் திரு. அனில் (RPC) ஆகிய அதிகாரிகள் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.





கூறு - 02. கிராமிய நிதிச் சேவைகளுக்கான அணுகல்

கூறு	*02. கிராமிய நிதிச் சேவைகளுக்கான அணுகல்* *இந்த செயற்திட்டக் கூறு மேலும் இரண்டு துணைக் கூறுகளைக் கொண்டுள்ளது: (2.1) 4P இற்கு நிதி வசதிகள் வழங்கல்; மற்றும் (2.2) நிதிச் சேவைப் பிரிவுக்கான நிறுவன வலுவூட்டல். இந்த செயற்திட்டக் கூறு மூலம் கூறு 1 இன் கீழ் (4P மற்றும் இளம் தொழில்முனைவோருக்கான கடன் தேவைகளை நிவர்த்தி செய்தல்) புதிய மூலோபாயங்கள், தலையீட்டு வழிமுறைகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் என்பவற்றை பயன்படுத்துவதுடன், இயன்றவரை பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் ஊடாக நிலைபேறான விதத்தில் கிராமிய நிதிச் சேவைகளை அணுகும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உத்தேசிக்கப்படுகிறது.*		
ஒதுக்கீடு (மில்லியன் இலங்கை ரூபா)	*1,100*	**செலவு (மில்லியன் இலங்கை ரூபா)**	*1,018*

குறிக்கோள்: *2. SAPP இன் கீழ் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு நிலைபேறான விதத்தில் மற்றும் ஈடுகொடுக்கக்கூடிய பெறுமானத்தில் கிராமப்புற நிதிச் சேவைகள் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல்.*

செயற்பாடுகள்	**அலகு**	**இலக்கு**	**அடைவுகள்**
1. IFAD நிதியுடன் கடன் திட்டத்தைப் பயன்படுத்தி 4P வீட்டு உரிமையாளர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கு கடன் வழங்கல்.	*பயனாளர்கள் எண்ணிக்கை*	*2,415*	*2,284*
2. சுழற்சி நிதிகளுடன் கூடிய கடன் திட்டம்		*2,655*	*1,888*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள்	*நாடு முழுவதும் (பிரதானமாக விவசாய உற்பத்தித் திறன் அதிகமுள்ள குறைந்த வருமானம் பெரும் மாவட்டங்கள்)*		
பயனாளர்கள் எண்ணிக்கை	*4,172 (திரளாக 12,302)*		

பயனாளிகளின் எண்ணிக்கை செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கையைக் குறித்து நிற்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு வீட்டு அலகிலிருந்தும் ஒரு பயனாளி மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார். 40 வயதுக்குக் கீழுள்ள தனிநபர்கள் இளைஞர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்தச் செயற்திட்டக் கூறின் கீழ் 03 குழுக்களுக்கூடாக கடன் வழங்கப்படுகிறது. (அதாவது, 4P பயனாளிகள், இளைஞர்கள் மற்றும் வருமானத்தைப் பிறப்பிக்கும் கடன்கள்). இந்த கூறுக்கான மொத்த இலக்கு பயனாளிகள் எண்ணிக்கை 39,213 ஆகும். தற்போது 31% திரள் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. 9,535 4P கடன்களும், 1,048 வருமானம் ஈட்டும் கடன்களும் திரளாக வழங்கப்பட்டுள்ளது.)

நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகள்/ கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	• *CBSL/PFI மற்றும் பயனாளர்களை வலுவூட்டல் (தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியியல் அறிவு தொடர்பான பயிற்சிகள்) இன் கீழ் 2,500 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*

கள மேற்பார்வை





"குருலுவன கெமுனு சனச சங்கம்" மூலம் கடன் வழங்கல் 19 டிசம்பர் 2021 அன்று நடைபெற்றது. திரு. பண்டார (ஆலோசகர் MF) மற்றும் திரு. நிஷாந்த (RPC) ஆகியோர் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

செயற்திட்டக் கூறு - 03. நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கைகள் தொடர்பான கலந்துரையாடல்

செயற்திட்டக் கூறு	*03. நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கைகள் தொடர்பான கலந்துரையாடல்*		
ஒதுக்கீடு (மில். இலங்கை ரூபா)	*144.6*	**செலவு (மில். இலங்கை ரூபா)**	*96.8*

குறிக்கோள்: *சிறிய விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட சமமான மற்றும் நிலைபேறான விவசாய வியாபார அபிவிருத்திக்கான கொள்கை சூழலை மேம்படுத்துதல்.*

செயற்பாடுகள்	**அலகு**	**இலக்கு**	**அடைவுகள்**
1. புதிய தொடக்க நிலை வியாபாரங்கள், உணர்திறன் மற்றும் கல்விச் செயலமர்வுகளை நடத்துதல் (எண்ணிக்கை)	இல்லை	*1*	*1*
2. பங்குதாரர்களின் வருடாந்த திட்டமிடல் மற்றும் மீளாய்வுச் செயலமர்வு நடாத்தல் (எண்ணிக்கை)	இல்லை	*1*	*1*
3. வருடாந்த வர்த்தக மன்றங்கள் (எண்ணிக்கை)	இல்லை	*1*	
4. அடிப்படை, வருடாந்த விளைவு மற்றும் தாக்க ஆய்வுகள் / PCR களை நடாத்தல் (எண்ணிக்கை)	இல்லை		
4.1 அடிப்படை ஆய்வுகள்	இல்லை	*20*	*8*
4.2 இலக்கு ஆய்வுகள்	இல்லை	*10*	*10*
5. விவசாயத் துறைசார்ந்த தொழில்நுட்ப கற்கைகளை நடாத்தல்	இல்லை	*1*	
6. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொடர்பான பொருட்கள்	இல்லை	*7*	*7*
7. பயிற்சி கையேடுகள்	இல்லை	*3*	*1*
8. சூழல்/ காலநிலை மாற்றம் தொடர்பான கையேடுகளை உருவாக்குதல்	இல்லை	*1*	*1*
9. பங்குதாரர் கூட்டங்கள்	இல்லை	*2*	*3*
10. கொள்கைப் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சி கற்கைகள்	இல்லை	*2*	*-*

மேலும், இந்த செயற்திட்டக் கூறைப் பயன்படுத்தி ஊழியர்களின் சம்பளம், ஆலோசனை சேவைகளுக்கான செலவுகள், அலுவலக பராமரிப்பு மற்றும் செயல்பாட்டு செலவுகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகள்	**நாடு முழுவதும்**

நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகள்/ கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை

- *பெறுமதி சங்கிலித் தகவல் வழங்குநர்களுக்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீடு மற்றும் தரவு சேகரிப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள் - 02*
- *4P பயனாளிகளுக்கான போசணை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள் - 07*
- *4P பயனாளிகளுக்கான பாலினம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள் - 14*

கள மேற்பார்வை

பாலினம், போசணை மற்றும் சூழல் பாதுகாப்பு குறித்து அனுராதபுரத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி / 2021 அக்டோபர் 20 ஆம் திகதி பணியங்கடவல மிளகாய் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வளாகத்தில் திரு. முதலிகே (ஆலோசகர் - ஊட்டச்சத்து) மற்றும் திரு. ஃபிராங்க் (ஆலோசகர் - காலநிலை) ஆகியோரால் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.





செயற்திட்டத்தின் (திருத்தப்பட்ட) பயனாளர்களின் இலக்குகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் ஒட்டுமொத்த அடைவுகள்

பிரிவு	இலக்கு	ஒட்டுமொத்த அடைவுகள் (கடன்/ மானியம்)
தனியார் துறை வழிநடத்தும் 4P	*24,500*	*7,374*
அளவு உயர்த்தப்பட்ட தேசிய விவசாய வியாபர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	*5,500*	*/5,392*
4P மூலம் வழிநடத்தப்படும் FPOகள்	*13,000*	*9,548*
மொத்த 4P	***43,000***	***22,314***
இளைஞர்களுக்கான தொடக்க வியாபரங்கள்	*2,500*	*1,048*
முதலீட்டுக் கடன்கள்	*12,000*	*1,698*
மொத்த கூட்டுத்தொகை	***57,500***	***25,060***

இரண்டு முக்கிய கூறுகளின் அடிப்படையில் பயனாளிகள் பகிர்வு

செயற்திட்டக் கூறு	இலக்குகள்	ஒட்டுமொத்த அடைவுகள்
வர்த்தக ரீதியான கூட்டாண்மைக்கான அணுகல்	***45,500***	***21,541***
தனியார் நிறுவனங்கள் தலைமையிலான புதிய 4P கள் NADEP 4Ps/ வருமான உருவாக்கம் இளைஞர்கள்	*24,500*	*6,746*
அளவு உயர்த்தப்பட்ட தேசிய விவசாய வியாபர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட 4P கள்	*5,500*	*4,840*
4P மூலம் வழிநடத்தப்படும் FPOகள்	*13,000*	*9,426*
இளைஞர்களுக்கான தொடக்க வியாபரங்கள்	*2,500*	*529*
கிராமிய நிதிக்கான அணுகல்	***39,213***	***12,281***
4P	*24,713*	*9,535*
தேசிய விவசாய வியாபர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட 4P கள்/ வருமானம் பிறப்பித்தல்	*12,000*	*1,048*
இளைஞர்கள்	*2,500*	*1,698*

நிதிசார் அடைவுகள் - 2021

செயற்திட்டக் கூறு	செயற்திட்டக் கூறு	வருடாந்த திட்டமிடப்பட்ட இலக்கு (மில். ரூபா)	வருடாந்த கொடுப்பனவுகள் (மில். ரூபா)	முன்னேற்றம்
செயற்திட்டக் கூறு 1	*வர்த்தக ரீதியான கூட்டாண்மைக்கான அணுகல்*	*848.5*	*523.3*	*62%*
செயற்திட்டக் கூறு 2	*கிராமிய நிதிக்கான அணுகல்*	*1,107.0*	*1018.1*	*92%*

கூறு	செயற்திட்டக் கூறு	வருடாந்த திட்டமிடப்பட்ட இலக்கு	வருடாந்த கொடுப்பனவுகள் (மில். ரூபா)	முன்னேற்றம்
செயற்திட்டக் கூறு 3	நிகச்சித் திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை ரீதியான உதவி	144.5	97.0	67%
மொத்த மானியம்	மொத்தம்	2,100.0	1,638.4	78%

ஒட்டுமொத்த நிதி அடைவுகள்

கூறு	செயற்திட்டக் கூறு	திட்டமிடப்பட்ட இலக்கு (மில். ரூபா)	ஒட்டுமொத்த கொடுப்பனவுகள் (மில்லியன் ரூபா)	முன்னேற்றம்
செயற்திட்டக் கூறு 1	வர்த்தக ரீதியான கூட்டாண்மைக்கான அணுகல்	5,966.0	990.2	17%
செயற்திட்டக் கூறு 2	கிராமிய நிதிக்கான அணுகல்	5,086.0	2657.4	52%
செயற்திட்டக் கூறு 3	நிகச்சித் திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை ரீதியான உதவி	1,004.0	397.4	40%
மொத்த மானியம்		12,056.0	4,045.0	34%

சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

இலங்கையின் பால் உற்பத்தித் தொழிற்துறையை மேம்படுத்தும் நோக்குடன் பிரான்ஸ் அரசின் ஒத்துழைப்பின் கீழ் 06 சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை / விவசாய சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு மற்றும் பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு மேற்கொள்கின்றது. நிதி அமைச்சு பிரான்ஸ் குடியரசுடன் இச்செயற்திட்டத்திற்காக 13.9 மில்லியன் யூரோ கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நிதிப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Financial Protocol) 27/12/2017 ஆம் திகதியும், செயற்திட்டத்திற்கான நிதி ஒப்பந்தத்தில் (Financial Agreement) 28/09/2018 ஆம் திகதியும் கையெழுத்திட்டுள்ளது. மேலும், இச்செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்த/ வழங்கல் உடன்படிக்கை (Contract/ Supply Agreement) 27/02/2019 ஆம் திகதி கையெழுத்தானது. பிரெஞ்சு குடியரசின் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வதற்காக பின்வரும் ஆறு சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

01. அத்தனகல்ல பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்
02. சிறிய அளவிலான பால் பண்ணை அபிவிருத்தி சங்கம், வாரியபொல
03. வரையறுக்கப்பட்ட பொலன்னறுவை மாவட்ட பால் வழங்குநர்களின் கூட்டுறவுச் சங்கம்
04. சக்சீட் இண்டர்நஷனல் (தனி) நிறுவனம், வென்னப்புவ
05. வரையறுக்கப்பட்ட நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவு சங்கம், நாவலப்பிட்டி
06. ஹெரிடேஜ் ஹெல விவசாய அபிவிருத்தி சங்கம், கெப்பிட்டிப்பொல

செயற்திட்டத்தின் நோக்கங்கள்

இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாவன பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்திப் பொருட்களை அந்தந்தப் பகுதிகளிலே உற்பத்தி செய்து பால் உற்பத்திகளின் நுகர்வை அதிகரிப்பதன் மூலம் குழந்தைகள் மற்றும் வயது வந்தவர்களின் போசணை மட்டத்தை அதிகரித்தல் மற்றும் தேசிய பால் உற்பத்தித் துறையை மேம்படுத்தல் என்பனவாகும்.

செயற்திட்ட விபரம்	சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்
செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கும் தினம்	2019.02.17
எதிர்பார்க்கும் காலம்	02 ஆண்டுகள்
செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தினம்	2019.02.17
செயற்திட்ட நீட்சி	நீடிக்கப்படவில்லை.
நிதி வழங்கல் மூலம்	பிரான்ஸ் அரசு – இலங்கை அரசு
சம்பத்தப்பட்ட துறை	திரவ பால் உற்பத்தி
பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள்	கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு மற்றும் பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு பிரான்ஸின் BOCCARD SA நிறுவனம் மற்றும் Foresight Engineering (Pvt) Ltd நிறுவனம் என்பன.

செயற்திட்டக் கூறு (சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் நிலையங்களை நிறுவும் செயற்திட்டம்)	
பிரதான செயற்திட்டக் கூறு	**செயற்திட்டக் கூறுக்கு அமைவாக செலவு**
01. பால் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்தல். 02. உரிய இயந்திரங்களை நிறுவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.	ஒப்பந்தத்தில் இந்த செயற்திட்டக் கூறுகளுக்கு தனித் தனியாக செலவுகள் பிரிக்கப்படவில்லை. செயற்திட்டத்தின் மொத்த செலவு 13,899,998.00 யூரோ ஆகும். / 2,821,699,594.00 ரூபா ஆகும்.
பிரதான செயற்திட்டக் கூறு	**செயற்திட்டக் கூறுக்கு அமைவாக செலவு**
01. இயந்திரங்களை இறக்குமதி செய்வது தொடர்பான வரி செலுத்துதல்	இந்த கொடுப்பனவு நடவடிக்கைகள் செயற்திட்டத்தில் உள்நாட்டு ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், இலங்கை சுங்கத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீடுகளுக்கு அமைவாக எதிர்காலத்தில் வரி செலுத்த வேண்டியுள்ளது.

செயற்திட்டக் கூறு 01	பால் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்தல்.	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. வென்னப்புவ பால் பதப்படுத்தும் நிலையம் 2. வாரியப்பொல பால் பதப்படுத்தும் நிலையம் 3. அத்தனகல்ல பால் பதப்படுத்தும் நிலையம் 4. பொலன்னறுவை பால் பதப்படுத்தும் நிலையம் 5. நாவலப்பிட்டி பால் பதப்படுத்தும் நிலையம்	தேவையான இயந்திரங்களை நாட்டுக்கு இறக்குமதி செய்தல்.	இயந்திரங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
6. கெப்பிட்டிப்பொல பால் பதப்படுத்தும் நிலையம்		இயந்திரங்கள் 2022 ஜனவரி மாதம் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன.
செயற்திட்டக் கூறு 02	உரிய இயந்திரங்களை நிறுவும் பணியை மேற்கொள்ளல் மற்றும் உற்பத்திப் பணிகளை ஆரம்பித்தல்.	
நோக்கம்		

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. வென்னப்புவ பால் பதப்படுத்தும் நிலையம்	உரிய இயந்திரங்களை நிறுவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்தல் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்	95%
2. வாரியப்பொல பால் பதப்படுத்தும் நிலையம்		96%
3. அத்தனகல்ல பால் பதப்படுத்தும் நிலையம்		96%
4. பொலன்னறுவை பால் பதப்படுத்தும் நிலையம்		95%
5. நாவலப்பிட்டி பால் பதப்படுத்தும் நிலையம்		ஜனவரி 2022 இல் பொருத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
6. கெப்பிட்டிப்பொல பால் பதப்படுத்தும் நிலையம்		
அபிவிருத்தி நிகச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம அதிகாரி பிரிவு)	புத்தளம், குருநாகல், கம்பஹா, பொலன்னறுவை, கண்டி மற்றும் களுத்தறை மாவட்டம்ஸ்	

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
பயனாளர்கள் எண்ணிக்கை	10,000 பயனாளர் விவசாயக் குடும்பங்கள்	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் கள மேற்பார்வை எண்ணிக்கை	01	

07.04.2021 ஆம் திகதி மேற்கொண்ட கள மேற்பார்வை நடவடிக்கைகள் - வென்னப்புவ சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பான முன்னேற்றம் மற்றும் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பானது - பணிப்பாளர்/ செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம், நிதியமைச்சு, செயற்திட்டப் பணிப்பாளர்/ Foresight Engineering (Pvt) Ltd PEREZ Jean-Laurent/ site manager, BOCCARD, திரு. ஏ.ஏ.எஸ்.பி அதிகாரி, அபிவிருத்தி அதிகாரி, கால்நடை வள இராஜாங்க அமைச்சு.





படல்கமவில் புதிய பால் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவும் செயற்திட்டம்

மில்கோ (தனியார்) நிறுவனம் என்பது விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் அரசுக்கு முழுமையாக சொந்தமான ஒரு நிறுவனமாகும். நாரஹேன்பிட்ட, திகன, அம்பேவெல மற்றும் பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் நான்கு பால் பதப்படுத்தும் ஆலைகளுடன் செயற்படும் இந்த அரச வியாபார நிறுவனமானது தேசிய திரவ பால் பெறுகை, பதனிடல் மற்றும் 'ஹைலண்ட்' வியாபார நாமத்துடன் பல்வேறு பால் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலுடன் தொடர்புபட்டுள்ளதுடன் அது செயற்பட ஆரம்பித்த நாளிலிருந்து பால் பதப்படுத்தல் துறையில் இலங்கையின் முன்னணி வணிக அடையாளமாக மாறியுள்ளது.

மில்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான நான்கு பால் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் 40 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை என்பதுடன் அவை நீண்ட காலமாக உற்பத்திப் பயனுறுதித் தன்மையை பல்வேறு விதத்திலும் பாதித்துள்ளன. இப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கிலும் மில்கோ நிறுவனத்தின் நாரஹேன்பிட்டி தொழிற்சாலை அமைந்துள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக செயற்படும் நகர அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதன் காரணமாக படல்கமவில் அமைந்துள்ள தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான சிரிங்கபாத்த பண்ணையிலிருந்து பெற்றுக்கொண்ட காணியில் அதற்கான புதிய பால் பதனிடும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தின் நோக்கங்கள்

இந்த தொழிற்சாலையை நிர்மாணிப்பதன் மூலம் 200,000 லீட்டர் பசுமையான பாலைப் பயன்படுத்தி பாஸ்டராக்கம் செய்த பால் , உயர்வெப்ப சிகிச்சைக்குட்படுத்திய பால் (UHT), யோகட், கலவை யோகட், யோகட் பானம் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றை நாளாந்தம் உற்பத்தி செய்வதற்கு முடியும்.

செயற்திட்ட விபரம்	படல்கமவில் பால் பதனிடும் தொழிற்சாலையை நிறுவும் செயற்திட்டம்
செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கும் தினம்	2016.05.10
எதிர்பார்க்கும் காலம்	3 வருடங்களும் 06 மாதங்களும்
செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தினம்	2016.05.10
செயற்திட்ட நீட்சி	2019.11.10 – 2021.12.31
நிதி வழங்கல் மூலம்	டென்மார்க் அரசு, இலங்கை அரசு HSBC Bank (LONDON)
சம்பத்தப்பட்ட துறை	திரவ பால் உற்பத்தித் துறை
பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள்	கால்நடை வளங்கள், பண்ணைகள் அபிவிருத்தி, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு, மில்கோ (தனியார்) நிறுவனம், DESMI ஒப்பந்த A/S நிறுவனம்

கூறுகள் (படல்கம் செயற்திட்டம்)	
பிரதான கூறுகள்	**கூறுகளுக்கு ஏற்ப செலவுகள்**
02. தொழிற்சாலை கட்டிடம் மற்றும் ஏனைய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல்	38,719,945.00 யூரோ
03. செயற்திட்டத்துடன் தொடர்புடைய இயந்திரங்களை இறக்குமதி செய்தல்	25,215,692.00 யூரோ
04. இயந்திரங்கள் இறக்குமதி தொடர்பான வரிகளை செலுத்தல்	902,155,553.66 ரூபா.

கூறு - 01	தொழிற்சாலை கட்டிடம் மற்றும் ஏனைய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல்	
ஒதுக்கப்பட்ட தொகை - 38,719,945.00 யூரோ	செலவு செய்த தொகை - 37,635,232.00 யூரோ	
நோக்கம் (செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம்)	200,000 லீட்டர் பசுமையான பாலைப் பயன்படுத்தி பாஸ்டராக்கம் செய்த பால், உயர்வெப்ப சிகிச்சைக்குட்படுத்திய பால் (UHT), யோகட், கலவை யோகட், யோகட் பானம் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவற்றை நாளாந்தம் உற்பத்தி செய்தல்.	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்கு	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. தொழிற்சாலை கட்டிடத்தை நிர்மாணித்தல் 2. நிர்வாக கட்டிடத்தை நிர்மாணித்தல் 3. உத்தியோகபூர்வ இல்லங்கள், உணவகங்கள் உள்ளிட்ட வசதிகள் 4. தொழிற்சாலை வளாகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள்	100% 100% 100% 100%	98% 99% 98% 99%

கூறு - 02	செயற்திட்டத்துடன் தொடர்பான இயந்திரங்களை இறக்குமதி செய்தல்	
ஒதுக்கப்பட்ட தொகை - 25,215,692.00 யூரோ	செலவு செய்த தொகை - 22,902,987.00 யூரோ	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்கு	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. செயற்திட்டத்துடன் தொடர்பான இயந்திரங்களை இறக்குமதி செய்தல்	தேவையான அனைத்து இயந்திரங்களையும் இறக்குமதி செய்தல்	89%
2. இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களைப் பொருத்துதல்	இயந்திரங்களைப் பொருத்தும் பணிகளை நிறைவு செய்தல்	87%

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம அதிகாரிப் பிரிவு)	கம்பஹா மாவட்டத்தின் படல்கம பிரதேசம்
பயனாளர் எண்ணிக்கை	மில்கோ நிறுவனத்துடன் இணைந்த சுயாதீன பால் பண்ணையாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்கள் (மொத்த திரவ பால் உற்பத்தியாளர்கள்)
மேற்கொண்ட பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கள மேற்பார்வை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	02

களை மேற்பார்வை	திரு. பி.ஐ.ஓ. பெர்னாண்டோ - பொது முகாமையாளர் / மில்கோ நிறுவனம்
பங்குபற்றிய அதிகாரிகள்	திரு. எம். சரவணபவன் - சந்தைப்படுத்தல் முகாமையாளர் / மில்கோ நிறுவனம் திரு. பி. திருகேஸ்வரன் - முகாமையாளர் (கொள்வனவு) / மில்கோ நிறுவனம் திரு. துஷான் சந்திரசேகர - பொறியியலாளர் / மில்கோ நிறுவனம்





தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் (இலங்கையில் தாவர தனிமைப்படுத்தல் சேவையை நவீனமயமாக்கல்) (KOICA) பரிசோதனை வசதிகளை மேம்படுத்துதல்

ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	25	செலவு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	க. அமை. ஊடாக நேரடியாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளபடுகின்றன.
நோக்கங்கள்	தாவர தனிமைப்படுத்தல் திறனை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி போட்டித்தன்மையை விருத்தி செய்தல்		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள் நிதி, பௌதீக	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் கட்டிடத்தை நிர்மாணிக்க முன்னர் புவித் தொழில்நுட்ப ஆய்வுகள், துறைமுக (SEAPORT) புதிய கட்டடம்		புவித் தொழில்நுட்ப அறிக்கை	நிறைவு செய்யப்பட்டுள்ளது.
ஏற்கனவே உள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுதல்.		புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நிலம்	ஏற்கனவே காணப்படும் கட்டிடத்தை இடித்து அகற்றும் பணி நிறைவடைந்துள்ளதுடன் அதன் செலவு UNOPS வரவுசெலவில் சேர்க்கப்படும். இந்தக் கட்டணம் தேவையில்லை (பசுமை கட்டிட சான்றிதழுக்கான திட்டம் மற்றும் தொழில்நுட்ப ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது முதலாவது செயலாக்க கட்டணம் செலுத்தப்பட வேண்டும்).
நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துக்கான கட்டணம்		புதிய கட்டிட நிர்மாணத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெறல்	துறைமுக பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்திற்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. பசுமை சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது.
வடிவமைப்பு சேவையில் VAT வரி		புதிய கட்டிடத்தை வடிவமைத்தல்.	இந்த கட்டணம் செலுத்த வேண்டியதில்லை
உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான VAT வரி		தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் ஆய்வகங்களுக்கான புதிய உபகரணங்கள்	நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக உபகரணங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தாமதமாகின.
சுங்க அனுமதிக் கட்டணம்			உபகரணங்களை கொள்வனவு செய்யும் பணிகள் 2022 இல் தொடர்ச்சியாக நடைபெறும்.
நிர்மாணத்திற்கான VAT வரி		தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் துறைமுகத்திற்கான புதிய கட்டிடம்	2022 இல் நிர்மாணப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெறும்.
நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் (மாவட்டம்/கிராம அதிகாரிப் பிரிவு)		தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை, கட்டுநாயக்க	
பயனாளர்கள் எண்ணிக்கை		1500	

தேசிய தனிமைப்படுத்தல் சேவையின் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு (JICA)

ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	40	செலவு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	க. அமை. இனால் நேரடியாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளபடுகின்றன.
நோக்கங்கள்	தேசிய தனிமைப்படுத்தல் சேவையின் தொழில்நுட்பக் கொள்ளளவை அதிகரித்தல்.		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள் நிதி, பௌதீக	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
44 உபகரணங்களுக்கான செலவு மதிப்பீட்டைத் தயாரித்தல்.		44 உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	நிறைவு செய்யப்பட்டுள்ளது.
தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமனம் செய்தல்.			
விளம்பரங்களை பிரசுரித்தல்			
விலைமனுக் கோரும் ஆவணங்களைத் தயாரித்தல்			
விவரக்குறிப்புகள் தயாரித்தல்			
தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்கள்			
தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்விப்பத்திர ஆவணத்தினை அங்கீகரித்தல்.			
விளம்பரம் மற்றும் விலைக் கோரல்களைத் திறத்தல்			கட்டணப் பற்றுச்சீட்டு கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
விலைக் கோரல்களை மதிப்பீடு செய்தல்			நிறைவு செய்யப்பட்டுள்ளது.
கேள்விப்பத்திரங்களை வழங்கல்			
கட்டணங்களை செலுத்தல்			கட்டணப் பற்றுச்சீட்டு 2022 ஜனவரி 2 ஆவது வாரம் அனுப்பப்பட்டுள்ளது.
நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள் (மாவட்டம்/கிராம அதிகாரிப் பிரிவு)		தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை, கட்டுநாயக்க	
பயனாளர்கள் எண்ணிக்கை		நாடு முழுவதும் பரவி வாழும் அனைத்து தாவர மற்றும் தாவரப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள்	

ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் – விவசாய தொழில்நுட்ப உள்ளீடுகளுக்கான வரி சலுகைகளுக்கான சிபாரிசுகளை வழங்குதல் - (விவசாய தொழில்நுட்ப பிரிவு)

1. விவசாயத் தொழில்நுட்ப உள்ளீடுகளுடன் தொடர்பான சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள தீர்வை வரி, பெறுமதி சேர் வரி மற்றும் செஸ் சலுகை என்பவற்றுக்கு விண்ணப்பிக்கும் போது அவற்றுக்கான சிபாரிசுகளை வழங்கல்.

2021.12.31 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சிபாரிசுகளின் விபரம் பின்வருமாறு அமைகின்றன.

i.	*தீர்வை வரி சிபாரிசுகள்*	*- 264*
ii.	*சோளத்திற்கான சிபாரிசுகள்*	*- 20*
iii.	*செஸ் சிபாரிசுகள்*	*- 267*
iv.	*உரங்களுக்கான சிபாரிசுக் கடிதங்கள்*	*- 16*
v.	*பீடைநாசினிகளுக்கான சிபாரிசுக் கடிதங்கள்*	*- 04*

2. மரங்களை வெட்டி வீழ்த்தல் கட்டுப்பாட்டுச் சட்டத்துடன் தொடர்பான நடவடிக்கைகள்

1951 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க மரங்களை வெட்டி வீழ்த்தும் (கட்டளைச்) சட்டம்

உணவு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கனி தரும் பலா மரம், ஈரப்பலா மரம் மற்றும் பெண் பனைமரம் ஆகியவற்றை பாதுகாக்கும் பொருட்டு 2000 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க மரங்களை வெட்டி வீழ்த்தலைக் கட்டுப்படுத்தும் (திருத்திய) சட்டம் மற்றும் 1951 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க மரங்களை வெட்டி வீழ்த்தும் (கட்டளைச்) சட்டம் ஆகியவற்றின் கீழ் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு கீழ் குறிப்பிட்டுள்ள நிர்வாக வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மரங்களை வெட்டி வீழ்த்தல் கட்டுப்பாட்டுச் சட்டத்துடன் தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் கமத்தொழில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.

மரங்களை வெட்டி வீழ்த்தல் கட்டுப்பாட்டுச் சட்டத்துடன் தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் கமத்தொழில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்

தொ / இ ல	திகதி	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	விண்ணப்பிக்கும் காரணம்	சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
01.	*2021.04.05*	நுவரெலியா	அம்பகமுவ	பொல்பிட்டியவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை செல்லும் மெ. வோ 220 மின்கம்பிக்கு இடையூறாக காணப்படுகின்றமை.	*40 பலா மரங்களுக்கு விண்ணப்பித்ததுடன் அதில் 40 மரங்களையும் வெட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*
02.	*2021.11.22*	கேகாலை	அரநாயக்க	மொலகொடவிலிருந்து கெவிலிப்பிட்டி வரை செல்லும் மெ. வோ 33 மின்கம்பிக்கு இடையூறாக காணப்படுகின்றமை	*19 பலா மரங்களுக்கு விண்ணப்பித்துள்ளதுடன், அதற்கான விண்ணப்பங்கள் விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*
03.	*2021.11.22*	கண்டி	குண்டசாலை	காணி துண்டாக்கும் செயற்திட்டத்திற்கு இடையூறாக காணப்படுகின்றமை	*35 பலா மரங்களுக்கு விண்ணப்பித்துள்ளதுடன், அதற்கான விண்ணப்பங்கள் விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*

மரங்களை வெட்டி வீழ்த்துவதற்கான அனுமதியை விவசாய பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டும் என்பதால், பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் விவசாயத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

விவசாயத் திணைக்களம் (DOA)

தொலைநோக்கு

சிறந்த விவசாயத்தின் மூலம் தேசிய நல்லதிஷ்டத்தை அடைதல்.

செயற்பணி

புதிய மேம்படுத்திய விவசாய தொழில்நுட்பங்களை உருவாக்கி விரிவாக்கம் செய்வதனூடாக குறித்த சேவைகளை குறிப்பாக கூடிய முக்கியத்துவத்துடன் விவசாயிகளுக்கும் பொதுவாக அனைத்துப் பங்குதாரார்களுக்கும் பெற்றுக்கொடுப்பதன் மூலம் தேசிய உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக உகந்த மற்றும் நிலைபேறான விவசாய அபிவிருத்தியொன்றை அடைந்து கொள்ளல்

நோக்கங்கள்

- உணவுப் பயிர்ச் செய்கையில் உற்பத்திச் சாத்தியப்பாடுகளை அதிகரித்தல்
- நிலைபேறான விவசாயத்தைப் பாதுகாத்தல்.
- உழைப்பு மற்றும் நிலத்தின் செயல்திறனை மேம்படுத்துதல்.
- விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரையும் பலப்படுத்தல்
- விவசாயத் துறையில் மனித வளத் திறன்களை விருத்தி செய்தல்.
- பங்குதாரர்களுக்கு தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.
- நிலம் மற்றும் நீர் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தல்.
- திட்டமிடல், கொள்கை முடிவுகள் மற்றும் கொள்கை வழிகாட்டுதல் ஆகியவற்றை வழங்குதல்.
- விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் மற்றும் விவசாய உற்பத்திகளின் தர நிர்ணயங்களை பாதுகாத்தல்.
- தீங்கு விளைவிக்கும் வெளிநாட்டு இனங்களிலிருந்து உள்நாட்டு தாவர இனங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- விவசாய உற்பத்திகள் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்க ஆரோக்கியமான தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவி வழங்கல்.
- பீடைகொல்லிகளின் பாதகமான விளைவுகளிலிருந்து பொதுமக்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தாவர மரபியல் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை உறுதி செய்தல்.

பிரதான பணிகள்

- ஆராய்ச்சிகள் ஊடாக பொருத்தமான புதிய வர்க்கங்களை மற்றும் விவசாயத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- புதிய மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு மத்தியில் விரிவாக்கம் செய்தல்
- உயர் குணாதிசயங்களைக் கொண்ட விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகித்தல்
- தாவர மரபணு வளங்களைப் பாதுகாத்தல்
- விதைச் சட்டம், தாவரப் பாதுகாப்பு சட்டம், பீடைநாசினி காட்டுப்பாட்டு சட்டம் மற்றும் மண் பாதுகாப்பு சட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தல்
- விவசாயக் கல்வியின் மூலம் விவசாயம் தொடர்பான தேசிய தொழிற் தகைமை (NVQ) 5 மற்றும் 6 ஆம் தரங்களுக்கான டிப்ளோமா பாடநெறிகளை நடாத்தல், விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்குத் தேவையான திறன் விருத்திக்கான பயிற்சி நெறிகளை நடாத்தல்

விவசாய திணைக்களத்தின் நிதி முன்னேற்றம் மற்றும் கமத்தொழில் அமைச்சின் செலவுத் தலைப்பின் (தேசிய உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்) கீழ் 2021 ஆம் ஆண்டுக்கான விஷேட செயற்திட்டங்களின் முன்னேற்றம் என்பன தொடர்பான சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நிதி முன்னேற்றம்

அட்டவணை 1: *2021 ஆம் ஆண்டுக்கு விவசாயத் திணைக்களம் பெற்றுக்கொண்ட ஒதுக்கீடுகள் மற்றும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான செலவுகள்*

செயற்திட்டம்	மீண்டுவரும் செலவுகள்		மூலதன செலவுகள்	
	ஒதுக்கீடு (மில். ரூபா.)	செலவு (மில்லியன் ரூபா)	ஒதுக்கீடு (மில். ரூபா.)	செலவு (மில்லியன் ரூபா)
1. நிருவாகம் மற்றும் தாபன சேவைகள்	*507.15*	*492.79*	*59.35*	*48.54*
2. விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	*1,817*	*1,618.9*	*337.05*	*270.16*
3.விரிவாக்கம் மற்றும் பயிற்சி	*1,434.05*	*1,317.56*	*418.1*	*284.87*
4. விதை சான்றுறுதிப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு	*1,315.49*	*1,257.56*	*1,185.6*	*949.21*
மொத்தம்	***5,073.69***	***4,686.81***	***2,000.1***	***1,552.78***

விவசாய திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான சாராம்சம்

1. விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

- *2021 ஆண்டில் மூன்று புதிய நெல் வர்க்கங்கள் வெளியிடப்பட்டன. அவற்றில் இரண்டு (BG 313, BG 314) 3 மாத வயதுப் பிரிவுக்குரிய நாட்டரிசி வகையாகும், மற்றையது 3½ மாத வயதுப் பிரிவுக்குரிய சம்பா (Bg 375) வர்க்கமாகும்*
- *நெற்பயிர்களில் நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டும் சிலிக்கன் தயாரிப்பொன்றை நாற்று நட்டு இரண்டு வாரங்களுக்குள் பயன்படுத்துவதன் மூலம் நெல் நாற்றுகளைத் தாக்கும் நெல் அந்துப்பூச்சியின் பாதிப்பை கணிசமான ஆளவு குறைக்க முடியும் என அவதானிக்கப்பட்டுள்ளதுடன் பிந்தைய சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய கபில நிறத் தாவரத் தத்தியின் சேதம், தண்டு துளைப்பானின் தாக்கம், நெல் இலைச் சுருட்டியின் தாக்கம் மற்றும் நெல் மூட்டுப்பூச்சியின் தாக்கம் என்பவற்றை குறிப்பிடத்தக்க அளவு குறைக்க முடியும் எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.*
- *ஆசிய உணவு மற்றும் விவசாய ஒத்துழைப்பின் கீழ் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட உவர்தன்மைக்கு ஈடுகொடுக்கும் இனப்பெருக்கப் பரம்பரைத் தெரிவு நிகழ்ச்சியின் மூலம் 2021 ஆம் ஆண்டில் 7 ஆசிய நாடுகள் கலந்து கொண்ட நிகழவில், சிறந்த நாட்டிற்கான விருது நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் இனவிருத்திப் பிரிவின் திருமதி. ஆர்.எம்.என்.எச். சேனாநாயக்க அவர்களால் வெற்றிகொள்ளப்பட்டது.*
- *கௌப்பி மற்றும் பாசிப்பயறுச் செய்கையில் வைக்கோல் மூடுபடை இடப்பட்ட மற்றும் மூடுபடை இடப்படாத சந்தர்ப்பங்களுடன் ஒப்பிடுகையில், பொலித்தீன் மூடுபடையைப் பயன்படுத்துகையில் சிறந்த வளர்ச்சியும் அதிக விளைச்சல் செயல்திறனும் அவதானிக்கப்பட்டன.*
- *பாசிப்பயறு, கௌப்பி, நிலக்கடலை அல்லது உளுந்து போன்ற அவரையினப் பயிர் வகைகளில் எந்த ஒரு வகையும் இலங்கையின் உலர் வலயத்தில் குறிப்பாக முதல் போகத்தில் வாழையுடன் ஊடு பயிராக வெற்றிகரமாக பயிரிட முடியும் என்று ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.*

- *'அக்ரா' எனும் கோழிக்குட்டு வாழை வர்க்கத்தின் ஆண் பூக்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் செயற்கைச் சேர்க்கை முறை மூலம் மீளுருவாக்கம் செய்யப்பட்ட நாற்றுகளின் சிறப்பியல்புகள் (பழத்தில் கடினமான கட்டிகள் இல்லாமை மற்றும் சுவை என்பன) மாறாமல் காணப்பட்டன.*

- *பகுதியளவில் அழிவடைந்த நிலக்கடலையின் முளைப்புத் திறன், வீரியம் மற்றும் விளைச்சல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு ஹைட்ரோ-ப்ரைமிங் (Hydro - priming) தொழில்நுட்ப முறையானது பயனுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.*

- *ஆராய்ச்சி பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு சிறு போகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் விவசாயப் பயிர் நிலங்களுக்கு விவசாய திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட N, P மற்றும் K விகிதாசாரத்துடன் ஒப்பிடுகையில் விதை நுண்ணுயிரேற்றியுடன் அடிப்படை கனிம N உரம் (யூரியா) 1/3 எனும் விகிதாசாரத்திலும் விவசாய திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட P மற்றும் K உர விகிதாசாரம் என்பவற்றையும் வழங்கும் போது 13% முதல் 25% வரையிலான விளைச்சல் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது.*

- *குறைந்த உற்பத்தி செலவைக் கொண்ட கால்நடை உணவை உற்பத்தி செய்வதற்கு HY1 மற்றும் HY2 ஆகிய MI கலப்பின சோள வர்க்கங்கள் மற்றும் MI எனும் இனிப்புத் திணை வர்க்கம் என்பன பொருத்தமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.*

- *பலவீனமான வடிகால் நிலைமைகளின் கீழ், குறிப்பாக பெரும் போகத்தில், விதை முளைப்பின் போது ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு மீச்சேர்ம பூச்சிடப்பட்ட சோயா போஞ்சி விதைகள், பயனுறுதிமிக்கது எனக் கண்டறியப்பட்டுள்ளது.*

- *விளைச்சல் இழப்புகளின்றி படைப்புழுவைக் கட்டுப்படுத்த இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கும் விதை விதைப்பதற்கும் இரண்டு வரிசைகளுக்கு இடையே 90 செ.மீ ஆகும் வண்ணம் 45 செ.மீ x 30 செ.மீ அளவில் 4 வரிசைகளைக் கொண்ட நாற்றுப் படுக்கைகளில் சோளம் பயிரிடப்படுவதானது எளிதான பயிர் நடுகை இடைவெளியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.*

- *கூட்டுப்பசளை (10 தொன்/ ஹெக்.) அல்லது உயிரியல் கரி (10 தொன்/ ஹெக்.) யுடன் கூட்டுப்பசளை (10 தொன்/ ஹெக்.) எனும் வகையில் சேதனப் பொருட்களை பயன்படுத்துவதானது பெரிய வெங்காயச் செய்கையில் விளைச்சலை அதிகரிப்பதில் பயனுறுதிமிக்கது எனக் கண்டறியப்பட்டுள்ளது. பெரிய வெங்காய விளைச்சலை மேலும் அதிகரிக்க வைக்கோல் (5 தொன்/ ஹெக்.) அல்லது ஒளித்தெறிக்கச் செய்யும் பொலித்தீன் என்பவற்றை மூடாக்கிடும் மூலப் பொருட்களாகப் பயன்படுத்துவது மிகவும் பயனுறுதிமிக்கதாகும்.*

- *பொப்கோன் (Popcorn) செய்கையில் ஒரு துளையில் ஒரு நாற்று எனும் வீதத்தில் 45 செ.மீ x 30 செ.மீ இடைவெளியில் நாற்றுகளை நட்டு N-P-K உரக் கலவையை முறையே 150-46-30 கிலோ/ஹெக். என்ற விகிதத்தில் பயன்படுத்துவதானது பயனுறுதிமிக்க உழவியல் முகாமைத்துவப் பொதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.*

- *படைப்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அதிக அளவு நைட்ரஜன் உரத்தை (> 200 கிலோ / ஹெக்டேர்) ஒரு ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு அணுகுமுறையாகப் பயன்படுத்துவதன் மூலம் பயிர் சேதத்தை ஈடுசெய்ய முடியும் என்பது செலவு- பயன் பகுப்பாய்வு மற்றும் விளைச்சல் அதிகரிப்பு சதவீதப் பகுப்பாய்வு என்வற்றின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.*

- *திண்ம நிலை Trichoderma தயாரிப்பைப் பயன்படுத்தி வெங்காய கரும் பூஞ்சன நோயைக் கட்டுப்படுத்துவதற்கான கள பயன்பாட்டு நெறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.*

- மிளகாய்ப் பயிர்ச் செய்கையில் காணப்படும் அந்திராக்னோசு நோய்க்கு எதிராக அசோக்ஸிஸ்ட்ரோபின் *60 +* குளோரோதலோனில் *500* கிராம்/லி *SL* என்பது பயனுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.
- சல்பர் *80 WDG* ஆனது நிலக்கடலையைப் பாதிக்கும் துரு நோய்க்கு எதிராக செயல்படுவதாக மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது
- சோளச் செய்கையில் படைப் புழுவை கட்டுப்படுத்துவதில் *3G* கலவையை *10% (v/v)* என்ற விகிதத்தில் நீருடன் பயன்படுத்துவது பயனுள்ளதாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. கூட்டுப் புழு வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில் மாலை நேரங்களில் இதனை விசிறுவதன் மூலம் சிறந்த பலன் கிடைத்துள்ளது.
- காய்கள் உருவாக ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இலைகளுக்கு தெளிப்பாக *MLE 100 % (*முருங்கை இலைச் சாறு) ஐப் பயன்படுத்துவதானது மிளகாயில் உயர் தர காய்கள் உருவாக்கம் மற்றும் அதிக விளைச்சல் என்பவற்றுக்கு பயனுள்ள முறையாக கண்டறியப்பட்டுள்ளது.
- இலங்கையின் வட மாகாணத்தில் நிலக்கடலை *(Arachis hypogea)* தண்டு அழுகல் நோயுடன் தொடர்புடைய பூஞ்சன நோய்க்கிருமியாக *Sclerotium spp.* இன் அழிவுகரமான பதினெட்டு தனிமைப்படுத்தல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- மணிக்கு *30* கிலோ உள்ளீட்டுக் கொள்ளளவை கொண்ட மிளகாய் விதை பிரித்தெடுக்கும் கருவியின் மூல மாதிரியொன்று வெற்றிகரமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சராசரியாக *16 - 20* தொன்/ ஹெக். பச்சை மிளகாய் விளைச்சலைத் தரக்கூடிய வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கைக்கு உகந்த மூன்று வெளிநாட்டு மிளகாய் கலப்பினங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- வெளிநாட்டு பெரிய வெங்காய வர்க்கமான *ARES* ஆனது, பெரும் போகத்தில் மழைக்காலங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட *MIBO 1* மற்றும் தம்புள்ளை தேர்வு ஆகிய வர்க்கங்களுடன் ஒப்பிடக்கூடிய அளவு செயல்திறனைக் காட்டியது. இருப்பினும், பரிசோதனை செய்யப்பட்ட உள்நாட்டு வர்க்கங்களுடன் ஒப்பிடுகையில் அதன் களஞ்சியப்படுத்தல் திறன் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சாக்லேட் பந்து தாயாரிப்புத் துறைக்கு பொருத்தமான *ANKGN4* எனும் பெயரில் *2.5* தொன்/ஹெக். சராசரி விளைச்சலைக் கொண்ட ஒரு சிறிய விதை நிலக்கடலை வர்க்கமானது சாதாரண பயிர்ச் செய்கைக்கு வெளியிடப்பட்டது.
- ஹெக்டருக்கு *1* தொன் அளவு சராசரி விளைச்சல் தரக்கூடிய, தண்டு மற்றும் வேர் அழுகல் நோய்களுக்கு மிதமான அளவு தாங்குதிறன் கொண்ட, கரு நிற விதைகளைக் கொண்ட எள் வர்க்கம் *ANKSE3* என்ற பெயரில் சாதாரண பயிர்ச் செய்கைக்கு வெளியிடப்பட்டது.
- ஹெக்டருக்கு *20 - 22* தொன் சராசரி விளைச்சலைத் தரக்கூடிய கொத்தணி வெங்காயம் வர்க்கம் *ANKCLO1* என்ற பெயரில் சாதாரண பயிர்ச் செய்கைக்கு வெளியிடப்பட்டது.
- சிம்பள் சீக்குவன்ஸ் ரிபீட் *(SSR)* குறிப்பான்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நெறிமுறையை, க்ரோ அவுட் பரிசோதனையுடன் *(GOT)* ஒப்பிடும்போது மிகவும் நம்பகமானதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த வழிமுறையானது *MICH HY 1* மற்றும் *MICH HY 2* ஆகிய மிளகாய் கலப்பினங்களின் விதை சான்றளிக்கும் நடைமுறையில் பயனுள்ளதாக அமையும். மேலும், இந்த கண்டுபிடிப்புகள் *MICH HY 1* மற்றும் *MICH HY 2* ஆகிய மிளகாய் கலப்பின விதை இருப்புகளில் கலப்பினமற்ற வகையிலான கலவைகளை அடையாளம் காண இனவிருத்தி செயற்பாட்டில் ஈடுபடுவோருக்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.
- கரு நிற எள் வகையிலிருந்து எண்ணெயைப் பிரித்தெடுக்கும் செயற்பாட்டின் போது தரத்தில் சிறந்த, அதிகளவு எண்ணெயைப் பிரித்தெடுக்க *180^{0}C* வெப்பநிலையில் *15* நிமிடங்கள் வெப்பமேற்றுவதே பொருத்தமான வழிமுறையாக கண்டறியப்பட்டுள்ளது.

- சோயா போஞ்சி பிறப்புவழிகளான PM 13 மற்றும் PM 25 ஆகியவை சோயா பால் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.
- சேதன விவசாயத்தில் தாவர பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் தொழில்நுட்ப வழிமுறையாக *Trichoderma* பூஞ்சையைப் பயன்படுத்தி ஒரு உயிரியல் பூஞ்சைக் கொல்லி உருவாக்கப்பட்டுள்ளது.
- காய்கறிப் பயிர் மயிர்க்கொட்டிகள் மற்றும் படைப்புழுக்களின் கூட்டுப்புழுக்கள் என்பவற்றை கட்டுப்படுத்த, முட்டை ஒட்டுண்ணியான *Telenomus remus* பூச்சிகளை செயற்கை இனப்பெருக்கம் செய்து இலங்கையின் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் பிரதேசங்களில் விடுவிக்கப்பட்டன.
- காய்கறிப் பயிர் மயிர்க்கொட்டிகளைக் கட்டுப்படுத்த இரவில் விஷேட மஞ்சள் ஒளி விளக்குகளைப் பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- சேதன காய்கறி செய்கையில் போசணை முகாமைத்துவ வினைத்திறனை அதிகரிப்பதற்குப் பொருத்தமான மண் சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- குறைந்த சேதன பிரயோகங்களுக்கு ஏற்ற காய்கறி வர்க்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- குறுகிய காலத்தில் கூட்டுப்பசளைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படுகின்றன.
- ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட்டதன் மூலம், கடந்த ஆண்டுடன் (163 மாதிரிகள்) ஒப்பிடுகையில் இந்த ஆண்டு (655 மாதிரிகள்), நிறுவனத்தின் மண் மாதிரி பகுப்பாய்வு திறன் நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.
- பூத்தல் ஆரம்பிக்கும் கட்டத்தில் மரமொன்றுக்கு 15 kg என்ற விகிதத்தில் டொலமைட்டை மண்ணிற்கு இடுவதன் மூலம் மங்குஸ்டீனில் மஞ்சள் சாறு வடியும் கோளாறைக் குறைக்க முடியும் என இனங் காணப்பட்டுள்ளது.
- மேலதிக மதிப்பீட்டிற்காக ஆறு எதிர்பார்க்கை அன்னாசிக் கலப்பினங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- பரிசோதனைக் குழாய் முறையில் ' வெல் அனோதா' வகையின் ஓட்டுக்கட்டைகளுடன் முள் சீத்தாப்பழத்தினை (Sour sop) வெற்றிகரமாக ஒட்ட முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது
- வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கைக்கான ஒரு மாற்றீட்டு இனப்பெருக்க வழிமுறையாக இலைவழி மூலம் விசிறும் உர வகைகளுடன் அன்னாசிப்பழத்தின் கிரீடத்தைப் பயன்படுத்துவது வெற்றிகரமானது எனக் கண்டறியப்பட்டதுடன் பழத்தின் அளவில் அல்லது தரத்தின் மீது கிரீடத்தின் அளவு பாதிப்பு செலுத்தவில்லை எனவும் கண்டறியப்பட்டது. நடப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர் இரண்டு மாத காலம் வரை விவசாயத் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட இலைவழி உரங்கள் விசிறப்பட வேண்டும்.
- அன்னாசிச் செய்கையில் வரிசைகளுக்கு இடையில் காய்கறி, கௌப்பி என்பவற்றை நடுதல் மற்றும் முதல் அறுவடை மேற்கொண்டு 45 நாட்களுக்குப் பிறகு மண்ணில் கௌப்பி செடிகளைச் நடல் என்பன தரமான பழங்களைப் பெறுவதற்கான வெற்றிகரமான ஒருங்கிணைந்த தாவர போசணை முகாமைத்துவ நடைமுறைகளாகக் கண்டறியப்பட்டது.
- முற்சீத்தாப்பழத்தில் *Annona muricata (Sour sop)* கன்னிக் கனியமாதலைத் (விதை இல்லாத பழ உற்பத்தியை) தூண்டுவதற்கு ஜிபரெலிக் அமிலம் (GA3) மற்றும் நாப்தலீன் அசிட்டிக் அமிலம் (NAA) ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்த முடியும் என ஆராய்ச்சி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- விவசாய காலநிலை ஆலோசனையின் தரத்தை அதிகரிக்க திணைக்களத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளின் கருத்துக்களைப் பெறுவதற்கான செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- மகாவலி - வலவ வலயத்தில் தலா 10 ஏக்கர் வீதம் 5 பண்ணைகளுக்கான நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளை வடிவமைப்பதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

- மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் கீழுள்ள 60 விவசாயிகளுக்கு பொலித்தீன் இல்லங்கள் மற்றும் நுண் நீர்ப்பாசனத் தொகுதிகள் என்பவற்றை அமைப்பதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

- "மண் மற்றும் நீர் பாதுகாப்பு தொழில்நுட்பத் தொகுப்பு" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

- "எதிர்கால தலைமுறைக்கான நீர் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவோம்" என்ற தலைப்பில் நிலைபேறான நீர் முகாமைத்துவம் தொடர்பான கையேடு வெளியிடப்பட்டது.

- 2021 இல், 2020/21 பெரும் போக பயிர்ச் செய்கைச் செலவு தொடர்பான களத் தரவு சேகரிப்பு பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டதுடன் கொவிட் 19 பரவல் காரணமாக கள நிகழ்ச்சிகள் தாமதமாகின. 2021 ஆம் ஆண்டிற்கான சிறு போக முதன்மை தரவு சேகரிக்கும் செயற்பாடு திட்டமிடப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட உணவுப் பயிர்களின் 2021 ஆம் ஆண்டிற்கான பயிர்ச் செய்கைச் செலவுக்கான உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.

- 2020/21 பெரும் போக பிற்பகுதி, 2021 சிறு போகம் மற்றும் 2021/22 பெரும் போக ஆரம்பப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில், 2021 ஆம் ஆண்டில் பத்து பயிர் முன்னறிவிப்பு அறிக்கைகள் (ஒரு பருவத்திற்கு ஐந்து வீதம்) தயாரிக்கப்பட்டன.

- கள மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கான தரவுகளின் வினைத்திறனான பாய்ச்சலை உறுதிப்படுத்தும் விதமாக 'பயிர் முன்னறிவிப்புத் தகவல் அமைப்பு - croplook.net மென்பொருளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தரவு உள்ளிடும் ஊழியர்களை நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கான கட்டுப்பாட்டு முகப்பு வசதி ஒன்று உருவாக்கப்பட்டதுடன் வர்க்க ரீதியான மரக்கறிப் பயிர் உற்பத்தி தொடர்பான அறிக்கைகளைப் பிறப்பிக்கும் வசதியும் உருவாக்கப்பட்டது. மேலும், இதில் மேலதிக உணவுப் பயிர்களுக்கான மாவட்ட ரீதியான வர்க்க ரீதியான பரவல் அறிக்கை புதிய இணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டிற்கான தரவுகளைக் கொண்ட AgStat XVIII இதழின் தரவுத் தொகுப்பு அதன் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதுடன் விரைவில் அதனை நிகழ்நிலையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

- பயிர் நிறுவன வரவுசெலவு – 2020 எனும் நெல், உப உணவுப் பயிர்கள் மற்றும் காய்கறிகள் பற்றிய தரவுகளைக் கொண்ட ஒரு வெளியீடு அச்சிடப்பட்டு இணையவழியில் வெளியிடப்பட்டது.

2. விதை உற்பத்தி மற்றும் தரம் என்பவற்றை மேம்படுத்தல்

- விதைச் சட்டம் திருத்தப்பட்டு விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- ISO17065 தரநிலைகளுக்கு அமைவாக சிறந்த விவசாய நடைமுறைகளை (GAP) சான்றுப்படுத்துவதற்கான வழிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் 12,397 தொன் விதை நெல் மற்றும் 84 தொன் காய்கறி விதைகள் என்பன விதை சான்றளிப்பு சேவை தரநிலைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- 2,024 தொன் ஏனைய களப் பயிர் விதைகள் (சோளம், பாசிப்பயறு, நிலக்கடலை, எள், கௌப்பி, கேழ்வரகு, உளுந்து, கொள்ளு மற்றும் சோயா போஞ்சி) உற்பத்தி செய்யப்பட்டதுடன் அவற்றில் 87% வீதமான விதைகள் விதை சான்றளிப்பு சேவை தரநிலைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- 1,159 தொன் கிரானோலா வகை விதை உருளைக்கிழங்கு தரநிலைகளுக்கு அமைவாக சான்றளிப்பு செய்யப்பட்டது. பாதுகாக்கப்பட்ட இல்லங்களில் பயிரிடப்பட்ட 46 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு மற்றும் 3,278,051 அடிப்படை சிறிய முகில்கள் என்பன விதை சான்றளிப்பு சேவை தரநிலைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- ஒட்டுப் பழக் கன்றுகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான 1,212,320 முத்திரைகள் இடப்பட்டுள்ளன. மேலும் ஒட்டுப் பழக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக 674 தாய்த் தாவரங்கள் சான்றுப்படுத்தப்பட்டன.
- விதை சான்றளிப்பு சேவை தரநிலைகளுக்கு அமைவாக சான்றளிக்கப்பட்ட விதைகள், இறக்குமதி செய்யப்பட்ட விதைகள், விதை உருளைக்கிழங்கு மற்றும் சந்தையில் இருந்து எழுமாறாக பெறப்பட்ட 1,303 விதை மாதிரிகள் என்பற்றுக்கு பின் கட்டுப்பாட்டு களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் தரம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- புதிய வர்க்கங்கள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்களில் புதிய வர்க்கமாக உறுதி செய்வதற்கு மேற்கொள்ளும் வேறுபட்ட தன்மை, சீரான தன்மை மற்றும் நிலைத்த தன்மைக்கான (DUS) சோதனையானது 3 எதிர்பார்க்கை நெல் வர்க்கங்கள், 2 மரக்கறி வர்க்கங்கள், 8 ஏனைய களப் பயிர் வர்க்கங்கள் மற்றும் 65 பழ வர்க்கங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.
- 1,160 விதை கையாளுபவர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதை மற்றும் நடுகைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் 968 பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.
- GAP நடைமுறைகளுக்கு அமைவாக செயற்படுகின்றமையை உறுதி செய்வதற்கு 635 பண்ணைகள் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அவற்றில் 561 பண்ணைகளுக்கு GAP சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- நெற் செய்கை மேற்கொள்ள்ளப்படும் ஏழு பிரதான மாவட்டங்களில் பீடைக் கண்காணிப்புத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
    - விவசாயத் திணைக்களத்தினால் சோளப் பயிர்ச் செய்கையில் காணப்படும் படைப் புழுக்களுக்கு எதிராக ஒரு சூழல் நட்பு கட்டுப்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
    - தாவர தனிமைப்படுத்தல் வசதிகளை விரிவுபடுத்தி மேலும் வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அரச நிதி மூலம் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.
    - கொழும்பு துறைமுகத்தின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மிகவும் விரிவான முறையில் மேற்கொள்வதற்காக கொரிய அரசாங்கத்தின் உதவியுடன் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.
    - தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களை தபால் மூலம் பரிமாறிக்கொள்ளும் போது பீடைகள் உள்வரும் அபாய நேர்வைக் குறைப்பதற்காக கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் தாவர தனிமைப்படுத்தல் பிரிவொன்று நிறுவப்பட்டது.

- ஜோர்தானிய தாவர பாதுகாப்பு அமைப்பினால் மா மற்றும் அன்னாசிப் பயிர்கள் மீது விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் தடையை நீக்குவதற்கான இருதரப்பு தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவுற்றதுடன் மா மற்றும் அன்னாசிப் பழங்களை ஜோர்தான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதில் காணப்பட்ட வர்த்தகத் தடை நீக்கப்பட்டு சர்வதேச வியாபரத்துக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான தனிமைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நோய்க் கிருமியாக இனங் காணப்பட்டுள்ள *Xylella fastidiosa* எனும் விருந்து வழங்கித் தாவரத்தின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பான ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- சர்வதேச தாவர பாதுகாப்பு அமைப்பின் தலைமையில் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச தாவர சுகாதார மாநாடு – இலக்கம் 15 இன் கீழ் சல்பியுரையில் புளோரைட்டை *(Sulfuryl fluoride)* மரத்திலான உற்பத்திகளை பொதிசெய்யும் பொருட்களை தொற்றுநீக்கம் செய்வதற்கு பயன்படுத்துவது தொடர்பான தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினராக தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் மேலதிகப் பணிப்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- இலங்கையில் சேதன விவசாயத்திற்கு அத்தியாவசியமான தாவர போசணைப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தரநிலை தாவர தனிமைப்படுத்தல் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- தாவர இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயற்பாடுகளின் வினைத்திறன்மிக்கதும் வெளிப்படையானதுமான செயற்பாட்டிற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் *ASYCUDA* தொகுதியுடன் இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இலத்திரனியல் தாவர சுகாதார சான்றிதழ் மூலம் 9 நாடுகளுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் தென் கொரியா ஆகியவற்றுடன் மேற்கொண்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.
- *JICA* செயற்திட்டத்தின் கீழ், தாவர தனிமைப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கான 13 வகையான ஆய்வக உபகரணங்களுக்கான 78 உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன..
- உயிரியல் பாதுகாப்பு *(Biosafety)* செயற்திட்டத்தின் *(GMO* மற்றும் *LMO)* ஊடாக உயிரியல் தொழில்நுட்ப பகுப்பாய்விற்கான புதிய ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டன.
- கள ஆய்வுப் பணிகளுக்கு ஊடாக மொத்தம் 246 பயிர் மரபியல் பொருட்கள் மற்றும் அவற்றின் காட்டு வர்க்கங்களும் சேகரிக்கப்பட்டதுடன் ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து 82 பயிர் வர்க்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், 271 வெளிநாட்டு பயிர் மரபியல் பொருட்களும் கிடைக்கப்பெற்றன.
- 2021 ஆம் ஆண்டில் புதிதாகப் பெறப்பட்ட 244 சேர்க்கைகள் மரபணு வங்கியில் பாதுகாக்கப்பட்டன. மேலும், பெருக்கம் செய்யப்பட்ட 393 சேர்க்கைகளும் பாதுகாக்கப்பட்டன. தாவர மரபணு வள நிலையத்தின் விதை மரபணு வங்கியில் தற்போது மொத்தம் 16,497 பயிர் மரபியல் பொருட்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும் வற்றாளை, உருளைக்கிழங்கு, டையஸ்கோரியா *(Dioscorea)*, சிறுகிழங்கு *(இன்னல)* மற்றும் வாழை ஆகியவற்றின் 384 செயற்கைக் கல முறை மாதிரிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு பயிர் இனங்களின் 338 சேர்க்கைகள் மரபியல் பொருட்களைப் பயன்படுத்துவதற்காக விவசாயிகள், ஆராய்ச்சி நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் விநியோகிக்கப்பட்டன.
- 706 பயிர் மரபியல் பொருட்கள் பெருக்கம் செய்யப்பட்டு பாதுகாப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டன. 101 வெண்டி, 77 நீண்ட பயற்றங்காய் மற்றும் 33 வெள்ளரி

ஆகியவற்றின் பாதுகாக்கப்பட்ட சேர்க்கைகள் அவற்றின் உருவவியல் விளக்கங்களைப் பயன்படுத்தி வகைப்படுத்தப்பட்டன.

- தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சொந்தமான பயிர்க் களைகளின் மூலக்கூற்று வகைப்பாடு மற்றும் அடையாளம் காணப்படாத மரபியல் பொருட்களின் DNA குறியாக்கம் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. பரிந்துரைக்கப்பட்ட கலப்பின வர்க்கங்களின் மரபணுத் தூய்மையைப் பரிசோதிப்பதற்கு ஒரு நெறிமுறை உருவாக்கப்பட்டது. மேலும் பாரம்பரிய நெல் வகைகளான ஹீனட்டி மற்றும் மாவீ நெல் ஆகிய வர்க்கங்கள் மூலக்கூற்று ரீதியாகவும் உருவவியல் ரீதியாகவும் , 21 ஹொன்டரவாலு நெல் சேர்க்கைகள் உருவவியல் ரீதியாகவும் வகைப்படுத்தப்பட்டன. ஏனைய 29 பாரம்பரிய வர்க்கங்களின் கபில நிறத் தாவரத் தத்தியின் தாக்கத்திற்கு எதிர்ப்புத்தன்மையுள்ள சேர்க்கைகளை அடையாளம் காண்பதற்கு மூலக்கூற்று ரீதியாக வகைப்படுத்தப்பட்டன.
- தற்கொலைகளைத் தடுப்பதற்கான தேசியக் கொள்கை செயல் திட்டத்தின் 2021ஆம் ஆண்டுக்கான எதிர்காலக் கொள்கைக்கான விஷேட விருதை பூச்சிக்கொல்லிப் பதிவாளர் அலுவலகம் வென்றுள்ளது.
- சுமார் 150,013 புசல் பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டன.
- சுமார் 56,552 புசல் சான்றுப்படுத்தபட்ட விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டது.
- சுமார் 185,233 புசல் விதை நெல் விற்பனை செய்யப்பட்டது.
- ஏனைய களப் பயிர் விதைகளின் பல்வேறு விதைத் தொகுதிகளின் சுமார் 1,348 தொன் உற்பத்தி செய்யப்பட்டன.
- சுமார் 92,159 கிலோ கிராம் சோள விதைகள், 248,655 கிலோ கிராம் நிலக்கடலை விதைகள், 115,314 கிலோ கிராம் சோயா போஞ்சி விதைகள், 401,663 கிலோ கிராம் பாசிப்பயறு விதைகள், 234,615 கிலோ கிராம் உளுந்து விதைகள் மற்றும் 85,501 கிலோ கிராம் கௌப்பி விதைகள் என்பன உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.
- சுமார் 1,560 கிலோ கிராம் அடிப்படை மற்றும் 19,300 கிலோ கிராம் தரநிலை காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- சுமார் 1,079 தொன் அடிப்படை மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு மற்றும் 2,477,800 கிராணோலா வகை உருளைக்கிழங்கின் சிறிய கிழங்குகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- சுமார் 1,170,397 பழக் கன்றுகள் (592,687 ஒட்டப்பட்ட நாற்றுகள் உட்பட) உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

3. <u>விவசாய விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு</u>

- "சௌபாக்யா" பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,
    - நாடு முழுவதும் 328,332 ஹெக்டயர் நிலப்பரப்புக்குத் தேவையான ஏனைய களப் பயிர்களின் (OFCs) விதைப் பொருட்களுக்கான மானியம் வழங்கப்பட்டது.
    - 2020/21 பெரும் போகத்தில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விரிவாக்க முகாம்கள், ஊடகப் பிரச்சாரங்கள் மற்றும் பெரோமோன் பொறிகளைக் கொண்டு கண்காணிப்பு பொறிமுறையை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் சோளச் செய்கையில் காணப்படும் படைப்புழு தாக்கம் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது.
    - OFC களின், குறிப்பாக மிளகாய், உளுந்து, கௌப்பி, எள்ளு ஆகியவற்றின், தரமான உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக 3126 தார்ப்பாய்கள் வழங்கப்பட்டன.
    - விவசாயிகளின் களங்களில், முழுமையான இயந்திரமயமாக்கப்பட்ட பொலித்தீன் இல்லங்களில் மிளகாயின் MICH HY 1 வர்க்க கலப்பின விதை உற்பத்தி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

- *2021 ஆம் ஆண்டில் வட பகுதியில் கலப்பின சோள விதை உற்பத்தியும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.*
- *குறிப்பாக கௌப்பி மற்றும் உளுந்துப் பயிர்ச் செய்கையில் பண்ணைக் களங்களில் இருந்து வன விலங்குகளை விரட்டுவதற்கு சூரிய சக்தியைக்கொண்டு இயங்கும் மின் சாதனம் அறிமுகப்படுத்தப்பட்டது.*
- *மூன்றாம் பருவத்தில் பாசிப்பயறு பயிரிடும் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக அந்த ஆண்டின் நான்காம் காலாண்டில் பாசிப்பயறின் விலை குறைவடைந்தது.*

- *கொவிட் 19 தொற்றுப் பரவல் காணப்பட்ட நிலைமையிலும் 2021 சிறு போகம் மற்றும் 2020/2021 பெரும் போகம் ஆகியவற்றின் போது இரண்டு விவசாய உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.*
- *பாரம்பரிய விவசாயத் துறையில் இருந்து சேதன விவசாயத் துறையை நோக்கி நகர்வதற்கு மாகாண, மாகாண இடைப் பிரதேச, மகாவலி வலய அல்லது ஏனைய பங்குதார்களுக்கு மாகாணங்களுக்கு இடையில் சிறந்த ஒத்துழைப்பைப் பேணுவதற்கு 2021 சிறு போகத்தின் ஆரம்பிக்க முன்னர் நான்கு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. சேதன விவசாயம் தொடர்பாக மாகாண, மாகாண இடைப் பிரதேச, மகாவலி வலய அதிகாரிகளுக்கான 10 பயிற்றுவிப்போரைப் பயிற்றுவிக்கும் (TOT) நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.*
- *தாவர நாற்றுமேடை முகாமைத்துவம், காளான் வளர்ப்பு, தேன் உற்பத்தி மற்றும் உணவுப் பதப்படுத்தல் ஆகியவை தொடர்பாக சிறிய அளவிலான விவசாய-தொழில்முனைவோருக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.*
- *மாத்தளை அழுவிஹாரை மற்றும் அநுராதபுர ஜெயஸ்ரீ மஹா போதி ஆகிய மத வழிபாட்டுத் தலங்களில் நிர்மாணிக்கப்படும் இரண்டு ஹெல பொஜுன் விற்பனை நிலையங்களின் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.*
- *விவசாய உற்பத்தி தொழில்நுட்ப (NVQ-05) தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை அனுராதபுரம், பிபில, வாரியபொல, லபுதுவ, பரந்தன் மற்றும் பாலமுனை ஆகிய இடங்களில் உள்ள விவசாய பாடசாலைகளில் நடைபெற்றது.*
- *விவசாய உற்பத்தி தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (NVQ 5) பாடநெறிக்கு பயிலுனர்களை இணைத்துக்கொள்வதற்கான பரீட்சை அநுராதபுரம், பிபில, வாரியப்பொல, லபுதுவ, பரந்தன் மற்றும் பாலமுனை ஆகிய விவசாய கல்லூரிகளில் நடாத்தப்பட்டது.*
- *NVQ 6 ஆம் தரப் பாடசாலைகளில் உயர் தேசிய விவசாய உற்பத்தி தொழில்நுட்பப் பாடநெறியை 787 மாணவர்களும் NVQ மட்டம் 5 ஆம் தரப் பாடசாலைகளில் தேசிய விவசாய உற்பத்தி தொழில்நுட்பப் பாடநெறியை 258 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.*
- *2021 ஆம் ஆண்டில் 206 மாணவர்கள் விவசாய உற்பத்தி தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமாவையும் (NVQ 6), 114 மாணவர்கள் விவசாய உற்பத்தி தொழில்நுட்ப தேசிய டிப்ளோமாவையும் (NVQ 5) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.*
- *GAP நடைமுறைகள் குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் உள்ளிட்ட 80 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் இந்த வருடத்தில் 545 பண்ணைகளுக்கு SL-GAP சான்றுப்படுத்தல் வழங்கப்பட்டது.*

- *GAP கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உதவும் வகையில் AFACI-GAP செயற்திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன.*

- *SAARC அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடன் "பெறுமதி சங்கிலியை மையமாகக் கொண்ட சிறிய அளவிலான விவசாய வியாபாரத்தின் மூலம் SAARC பிராந்தியத்தில் உள்ள சிறிய அளவிலான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்" என்ற நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அனுராதபுரம் மற்றும் மொனராகலை பகுதிகளில் உள்நாட்டு உணவுப் பயிர்களை (பிரதேசம் சார்ந்த) பதப்படுத்துவதற்கான இரண்டு பதனிடும் நிலையங்கள் நிறுவப்பட்டன.*

- *விவசாய சமூகம் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுக்கு புதிய விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்பும் நோக்கில் இந்த ஆண்டில் 161 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், 277 விஷேட வீடியோ நிகழ்ச்சிகள் மற்றும் 25 வீடியோ குறுஞ்செய்திகள் ஒளிபரப்பப்பட்டதுடன் 256 Youtube வீடியோக்கள் பதிவேற்றப்பட்டன.*

- *இந்த ஆண்டில் விவசாயம் தொடர்பான விடயங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்த 1,676 வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் 480 குறுஞ்செய்திகள் பகிரப்பப்பட்டன.*

- *விவசாயம் தொடர்பான 70 புதிய புத்தகங்கள் (122,191 பிரதிகள்), 45 துண்டுப் பிரசுரங்கள் (1,826,128 பிரதிகள்) மற்றும் 51,430 பிரதிகள் கொண்ட சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.*

- *சமூக ஊடகங்களில் சுமார் 346 புதிய பக்கங்கள் பதிவேற்றப்பட்டன.*

- *விவசாயத் திணைக்களத்தின் பயனாளர்-நட்பு புதிய இணையத்தளம் நிர்மாணிக்கப்பட்டு அதன் 118 பக்கங்கள் இற்றைப்படுத்தப்பட்டன.*

- *கன்னோருவ மற்றும் பட்ட அத்த விவசாய பூங்காக்களுக்கு சுமார் 34,316 பேர் விஜயம் செய்துள்ளனர். இதன் மூலம் சுமார் 4.25 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது.*

- *விவசாய வெளியீடுகளின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் 2.21 மில்லியன் ரூபா ஆகும்.*

- *மண் பரிசோதனை அறிக்கை முகாமைத்துவ முறைமையின் முதலாம் கட்டம், பீடைகொல்லிகளைப் பதிவு செய்தல், விதைச் சந்தை கட்டமைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ தரவுத்தளம் என்பவற்றை உருவாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. நிதி தரவுத்தளம், தாவர மரபியல் வளங்களின் MIS - முதலாம் கட்டம், மண் பரிசோதனை அறிக்கை முகாமைத்துவ அமைப்பு - கட்டம் II மற்றும் பாடசாலை முகாமைத்துவ அமைப்புத் தரவுத்தளங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *விவசாயம் தொடர்பான கேட்கப்பட்ட சுமார் 73,718 கேள்விகளுக்குப் 1920 இலவச விவசாய ஆலோசனை சேவை மூலம் பதில் அளிக்கப்பட்டது.*

- *சேதன உற்பத்தி தொடர்பான ஒரு விஷேட ஊடகப் பிரச்சாரமானது 32 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், 5 தொலைக்காட்சி குறுஞ்செய்திகள், 1 விளம்பரம், LED சுற்றுகளைப் பயன்படுத்தி நாளாந்த குறுஞ்செய்திகள் என்பவற்றை வெளியிட்டும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 1,212,000 துண்டுப் பிரசுரங்கள் மற்றும் 28,350 சுவரொட்டிகள் என்பன மூலமும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இதன் கீழ் வாராந்தம் 35 வானொலி நிகழ்ச்சிகள், 34 க்ருஷி டி.வி. யூடியுப் வீடியோக்கள், கூட்டுப்பசளை தயாரிப்பு குறித்த புத்தகங்களின் 30,800 பிரதிகள், 46 Ag-tech செய்திமடல்கள் வெளியிடப்பட்டதுடன் இது தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் வண்ணம் 8 Zoom பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் 148 சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் வீடியோக்கள் என்பன பகிரப்பட்டன.*

விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

தொலைநோக்கு

உள்நாட்டு விவசாயத்துறையின் உன்னதமான பாதுகாவலனாக மாறுவதன் ஊடாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் கமத்தொழில் காப்புறுதி நிறுவனமாதல்

செயற்பணி

கமத்தொழில் காப்புறுதி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கான கூட்டு முயற்சிகள் மற்றும் ஏற்புடைய நிறுவனங்களின் இணைப்பாக்கத்தினூடாக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

நோக்கங்கள்

- உள்நாட்டு விவசாயத் துறை எதிர்நோக்கும் இடர்களைக் குறைப்பதற்கும் நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதற்கும் தற்போது செயற்பாட்டிலுள்ள காப்புறுதித் திட்டங்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- உள்நாட்டு விவசாயத் துறைக்கு ஸ்திரத்தன்மையை வழங்கும் பொருட்டு தற்போதுள்ள சமூக பாதுகாப்பு திட்டங்களை புதுப்பித்தல் மற்றும் புதிய காப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- நிறுவனத்திற்குத் தேவையான உள்நாட்டு மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல்.
- தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பைப் பேணுதல்..
- திருப்திகரமான வாடிக்கையாளர் தளத்தை பேணிவருதல் .
- நிறுவனத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிருவாகத்தை முறையாகவும் மற்றும் ஒழுங்காகவும் பேணிவருதல்.

அமைப்புச் சட்டத்தின் படி நிறுவனம்;-

விவசாயப் பொருளாதாரமொன்றுக்கு உரிமைகோரும் இலங்கையில், அவசர அனர்த்த நிலைமைகளில் உள்நாட்டு விவசாயத் துறை மற்றும் விவசாய சமூகம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் எனும் அரசின் மீதுள்ள கடமையை நிறைவேற்றும் நோக்கில் *1973* ஆம் ஆண்டின் *27* ஆம் இலக்க கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் கமத்தொழில் காப்புறுதிக்காகக் காணப்பட்ட ஒரே அரச காப்புறுதி நிறுவனமாக கமத்தொழில் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டது. *1999* ஆம் ஆண்டின் *20* ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினால் கமத்தொழில் காப்புறுதிச் சபை, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை எனும் பெயரில் மீள நிறுவப்பட்டது.

பணிகள்

1. விவசாய அனர்த்த முகாமைத்துவம்

அனர்த்த முகாமைத்துவ வழிமுறையொன்றாக இலங்கை விவசாயத் துறையில் பயிர், கால்நடை மற்றும் பொதுக் காப்பீட்டு திட்டங்களின் கீழ் விவசாயக் காப்புறுதித் திட்டங்களை அறிமுகம் செய்வதன் மூலம் விவசாய அனர்த்த முகாமைத்துவத்துக்குப் பங்களிப்புச் செலுத்துதல், திடீர் அனர்த்தமொன்றின் போது விவசாயத் துறையில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் பொருளாதார வீழ்ச்சியை குறைப்பதற்கு உதவுதல் மற்றும் விவசாயக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவற்றின் நிதி ஸ்திரத்தன்மையை மேம்படுத்த உதவுதல்.

திட்டங்கள்

- *பயிர் காப்புறுதித் திட்டங்கள் (நெல் மற்றும் ஏனைய களப் பயிர்கள்)*
- *கால்நடை வளக் காப்புறுதித் திட்டங்கள்*
- *ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்*
- *சுவசெத சுகாதார காப்புறுதித் திட்டம்*
- *அவசர விபத்துக் காப்புறுதித் திட்டம்*
- *விவசாய உபகரணங்களுக்கான காப்புறுதித் திட்டம்*
- *களஞ்சியக் காப்புறுதித் திட்டம்*
- *துவிச்சக்கர, நாற்சக்கர இழுவை வண்டிகள் மற்றும் ஏனைய மூன்றாம் தரப்பு காப்புறுதித் திட்டங்கள்*

2. சமூக நலன்புரித் திட்டம்

சமூக பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் விவசாயத் துறையுடன் தொடர்புடைய விவசாயிகளின் ஓய்வுநிலை வாழ்க்கையை பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செலுத்துதல்.

- *விவசாயிகளுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டம்*
- *மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டம்*

2021.12.31 வரை

விபரம்	***ஒதுக்கப்பட்ட நிதி (மில். ரூபா)***	***செலவு செய்த தொகை (மில். ரூபா)****
மீண்டுவரும் செலவுகள்	*4,000*	*4,000**
மூலதன செலவுகள்	*1,040*	*1,020*

2021-12-31 வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

2021.12.31 வரையிலான நிதி முன்னேற்றம்

காப்புறுதித் திட்டங்களின் தவணைக் கட்டண வருமானம் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் - 2021 டிசம்பர் 31 வரை

காப்புறுதித் திட்டங்கள்	***2021 டிசம்பர் 31 வரை***	
	தவணைக் கட்டண வருமானம் (மில்.ரூபா)	***இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் (மில்.ரூபா)***
கட்டாயப் பயிர்க் காப்புறுதித் திட்ட தவணைக் கட்டண வருமானம்	*57.8*	*1,086.5*

விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டம் - தவணைக் கட்டண வருமானம் மற்றும் ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகள் - 2021 டிசம்பர் 31 வரை

திட்டம் *118-02-03-049-1509*	பங்காளிப்பு பெற்றுக்கொள் வோரின் எண்ணிக்கை	வருமானம் *(மில். ரூபா)*	ஓய்வூதியம் பெற்றுக்கொ ள்வோரின் எண்ணிக்கை	ஓய்வூதியம் கொடுப்பனவு கள் *(மில்.ரூபா)*
விவசாயிகளுக்கான ஓய்வூதியம்	*959,254*	*18.9*	*167,626*	*3,755.7*
மீனவர்களுக்கான ஓய்வூதியம்	*69,049*	*0.3*	*5,354*	*77.5*

[#] *அரச பங்களிப்பு - (விவசாயிகள் மற்றும் மீனவர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செயற்பாட்டு மற்றும் நிருவாக செலவு 247 மில். ரூபா நிதி உட்பட)*

- ***2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தியுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்***

1. சுட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யும் செயற்திட்டம்

- *இந்தச் செயற்திட்டம் தற்போது வவுனியா, கிளிநொச்சி, அநுராதபுரம், அம்பாறை, ஹம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. சேதங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளின் போது தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் செயற்கைக்கோள் மூலம் பெற்றுக்கொண்ட புகைப்படங்கள் மற்றும் ஆளில்லா விமான (ட்ரோன்) தொழில்நுட்பம் என்பன பயன்படுத்தப்படுகின்றன.*
- *இச்செயற்திட்டத்தின் கீழ், 2021 சிறு போகத்திற்கு அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, வவுனியா, கம்பஹா, கிளிநொச்சி, அம்பாறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு இந்தத்திட்டத்தின் கீழ் இழப்பீடுகளைக் கணிப்பீடு செய்தல், கள மேற்பார்வை, மற்றும் பயிர் இழப்புகளை அறிக்கையிடல் மற்றும் அதனைத் தொடர்ந்து பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன நடைபெற்று வருகின்றன.*
- *2021/2022 பெரும் போகத்தின் போதும் இப்புதிய வழிமுறையைப் பிரயோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

2. விவசாய தகவல் முகாமைத்துவ தொகுதி (AIMS) உள்ளடக்கிய கணணி மென்பொருளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்

- *கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் மூலம், சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன், முதல் கட்ட இணைய மற்றும் கையடக்க மென்பொருளை உருவாக்கும் நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளது.*
- *ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள வயல் நிலங்களை வரைபடமாக்கும் நடவடிக்கைகள் வயல்வெளி மட்டம் வரை நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், கம்பஹா மாவட்டத்தில் உள்ள வயல் நிலங்களின் ஒரு பகுதியும், பதுளை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்படும் தோட்டங்களும் வரைபடமாக்கப்பட்டுள்ளன. மேலும் 800,000 க்கும் மேற்பட்ட விவசாயிகளின் அடிப்படைத் தகவல்கள் இந்தத் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வனைத்துத் தரவுகளும் இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) தரவு சேமிக்கும் சேமிப்பகத்தில் (Lanka Government Cloud) களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.*

- இதனை எதிர்காலத்தில் வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கும், இச்செயற்திட்டதிற்கு மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைப்பதற்கும் இதனை கமத்தொழில் அமைச்சு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு என்பன இணைந்து, ஒன்றிணைந்த கூட்டுச் செயற்திட்டமொன்றாக நடைமுறைப்படுத்துவதன் தேசிய முக்கியத்துவம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டம் தற்போது கௌரவ விவசாய அமைச்சரின் நேரடி தலையீடு மற்றும் கமத்தொழில் அமைச்சின் வழிநடாத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச அனுபவமிக்க இலங்கை மென்பொருள் பொறியியளர்களின் ஆலோசனையின் கீழ் மிகவும் துரிதமாக செயல்படுத்தப்படுகின்றது. இந்த மென்பொருளை அடுத்த சில மாதங்களில் கள அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு கள மட்டத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இதற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களின் அதிகாரிகளை பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளின் ஆரம்ப கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.இந்தப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு கமநல சேவைத் திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

திகதி	விபரம்	பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்ட இடம்	பங்குபற்றிய அதிகாரிகளின் எண்ணிக்கை
03/11/2021	கமநல சேவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலக அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி	*Water's Edge, Battaramulla.*	*61*
11/11/2021	கமநல சேவைத் திணைக்களத்தின் மாவட்ட ஆணையாளர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி	*Hotel Grand Monarch, Thalawathugoda.*	*75*
01/12/2021	கொழும்பு மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி	*Hotel Sapphire, Colombo 05.*	*50*
01/12/2021	கம்பஹா மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி	*Senuri Reception Hall, Diyulapitiya.*	*140*
01/12/2021	களுத்தறை மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி	*Hotel Panorama, Kalutara*	*125*
02/12/2021	புத்தள மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக	*Hotel Far Inn Beach, Chilaw*	*110*
03/12/2021	குருநாகல் மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி	*Hotel Green Serenity, Kurunagala*	*350*
10/12/2021	ஹம்பாந்தோட்டை மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி	*Hotel Rain Tree, Hambantota*	*125*

திகதி	விபரம்	பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்ட இடம்	பங்குபற்றிய அதிகாரிகளின் எண்ணிக்கை
14/12/2021	*காலி மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி*	*Hotel Grand Palace, Galle*	*200*
14/12/2021	*மாத்தறை மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி*	*Hotel Balagala Tea Garden, Akuressa*	*150*
24/12/2021	*இரத்தினபுரி மாவட்ட கமநல சேவைத் திணைக்கள கமநல அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு ஆரம்ப நிகழ்ச்சி*	*Hotel Kethumatee and Banquet, Rathnapura*	*170*

2021.09.31 வரையிலான இடைக்கால கணக்கின் மீதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய நிதிசார் இலக்குகள் மற்றும் முன்னேற்றம் - மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் என்பன அடங்கிய செலவு அறிக்கையின் பொழிப்பு.

தொ/இல	செயற்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்	*2021* ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி	டிசம்பர் *31* வரையிலான நிதி முன்னேற்றம்		டிசம்பர் *31* வரையில் கிடைத்த வரவுசெலவு ஒதுக்கீடுகள் *(மில். ரூபா)*
			செலவு	%	
மொத்த வரவுசெலவு		*5,040.0*	*5,020.0*	*99.6*	*4,020.0*
	மீண்டுவரும் செலவுகள்	*4,000.0*	*4,000.0*	*100*	*4,000.0*
	மூலதன செலவுகள்	*1,040.0*	*1,020.0*	*98.1*	*-*
01.	விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியங்களை வழங்க *(118-02-03-049-1509)*	*4,000.0*	*4,000.0*	*100*	*4,000.0*
	மீண்டுவரும் செலவுகள்	*4,000.0*	*4,000.0*	*100*	*4,000.0*
02.	மூலதன செலவுகள் செலவு *(118-02-03-049-2201)*	*40.0*	*20.0*	*50.0*	*20*
	மூலதன செலவுகள்	*40.0*	*20.0*	*50.0*	*20*

தொ/இல	செயற்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்	*2021* ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி	டிசம்பர் *31* வரையிலான நிதி முன்னேற்றம்		டிசம்பர் *31* வரையிலான நிதி முன்னேற்றம்
			செலவு	செலவு	
03.	கட்டாயக் காப்புறுதி *118-02-03-43-2202*	*1,000.0*	*1,000.0*	*100.0*	*-*
	மூலதன செலவுகள்	*1,000.0*	*1,000.0*	*100.0*	*-*

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரையான வரவுசெலவு ஒதுக்கீடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள்

செலவுத் தலைப்பு (vote)	***2021 வருடத்திற்கான இலக்குகள் (மில். ரூபா)***	***2021 டிசம்பர் வரை பெறப்பட்ட வரவுசெலவு ஒதுக்கீட்டுத் தொகை (மில்.ரூபா)***	***2021 டிசம்பர் வரை செலவு செய்த தொகை (மில்.ரூபா)***
விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியங்களை வழங்குவதற்காக (118-02-03-049-1509)	*4,000.0*	*4,000.0*	*4,000.0*
மூலதன செலவுகள்செலவு (118-02-03-049-2201)	*40.0*	*20.0*	*20.0*
*கட்டாயக் காப்புறுதி (118-02-03-43-2202)**	*1,000.0*	*-*	*1,000.0*

** 2020 ஆம் ஆண்டுக்கு கட்டாயப் பயிர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 1,950 மில். ரூபா நிதி கோரப்பட்டுள்ளது. அதற்காக 2021 ஆம் ஆண்டில் சுமார் 1000 மில். ரூபா வருடாந்த வரவுசெலவு ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு சுமார் 1900 மில். ரூபா நிதி அவசியமாகின்றது. அந்த வகையில், 2021 ஆம் ஆண்டிற்கு மேலதிக நிதி ஒதுக்கீடாக 2850 மில். ரூபா நிதி தேவைப்படுகின்றது.*

<u>'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக அமைச்சு/ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள்</u>

சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கை	***கொள்கை ரீதியான தீர்மானங்கள்***
விவசாய ஓய்வூதியத்தை மீள நிறுவுதல்	*ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைத்து தற்போதைய சூழ்நிலைக்குத் தேவையான மாற்றங்களைச் செய்வது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் புதிய ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் அதனை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தல் மற்றும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல் தொடர்பான ஆரம்பகட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் காலம் தீர்மானிக்கப்படவுள்ளது.*
பயிர்ச் செய்கை மீதான அபாய நேர்வைக் கொண்டு விவசாயி நம்பிக்கையிழந்து விடுவதன் காரணமாக அதிக நன்மைகளைக் கொண்ட பயிர் காப்பீட்டுத் திட்டமொன்று அறிமுகம் செய்யப்படும்.	*திறைசேரியின் பூரண காப்புறுதித் தவணைக் கட்டணப் பங்களிப்புடன் கூடியதாக நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய் மற்றும் சோயா போஞ்சி ஆகிய 6 பயிர் வகைகளுக்கான கட்டாயப் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துதல்* *2021 சிறு போகத்தில், விவசாயிகளுக்கான முழுமையான பயிர்க் காப்பீட்டுத் திட்டமொன்றை உருவாக்கும் நிமித்தம், குறைந்தபட்ச தவணைக் கட்டணத்திற்கு பயிர்க் காப்புறுதித் திட்டங்களை வழங்குவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கை	கொள்கை ரீதியான தீர்மானங்கள்
கடந்த காலங்களில் விவசாயிகள் முகங் கொடுத்த பயிர் சேதங்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகைகளை ஆறு மாதங்களுக்குள் செலுத்தி முடித்தல்.	பயிர் சேதங்களுக்கான விண்ணப்பங்கள் கிடைத்து 90 நாட்களுக்குள் பயிர் இழப்பை மதிப்பீடு செய்து இழப்பீட்டை கணித்து செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக குறித்த இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தகவல் முகாமைத்துவ தொகுதியைத் தயாரித்ததன் பின்னர் இந்த இழப்பீடு வழங்கும் பணியை வினைத்திறனோடு மேற்கொள்ள முடிவதுடன் திறைசேரியிலிருந்து நிதி கிடைப்பதற்குத் தாமதம் ஏற்படாதவிடத்து துரிதமாக மேற்படி கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.
அனைத்து விவசாயினதும் விவசாயப் பயிர் வகைகளையும் காப்புறுதி செய்யும் ஒரு எளிதான வழிமுறை மற்றும் தாமதமின்றி இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு புதிய திட்டத்தை அறிமுகம் செய்தல்.	விவசாய தகவல் முகாமைத்துவத் தொகுதி (AIMS) மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டம் ஆகியன உருவாக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் விவசாயிகளுக்கு புதிய காப்புறுதித் திட்டமொன்றும் வினைத்திறன்மிக்க காப்புறுதி செயல்முறையும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
மீனவ சமூகத்திற்குப் பயனுள்ள ஓய்வூதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.	மீனவ சமூகத்திற்கு பயனுள்ள ஓய்வூதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மீன்பிடித் துறை அமைச்சுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு, தற்போது அது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. மீன்பிடித் துறை அமைச்சு மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதும் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை (JEDB)

தொலைநோக்கு

பிராந்திய மட்டத்தில் சிறந்த மத்திய நாட்டு பாரம்பரிய தேயிலை உற்பத்தியாளராக மாறுவதன் மூலம் அதிகூடிய நிகர விற்பனை விலையைப் பெறுவதன் மூலம் இலாபமீட்டும் மற்றும் பலம்மிக்க அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றாக மாறுதல்.

செயற்பணி

உச்ச அர்ப்பணிப்புடன் கிடைக்கும் வளங்களை பயன்படுத்தி தனிநபர் திறன்களை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தி ஓரணியாக செயற்படும் மனப்பாங்கை அடிப்படையாகக் கொண்டு நிறுவன இலக்குகளை நோக்கி நகர்வதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சியின் பிரதிபலன்களை முழு நாட்டுக்கும் பெற்றுக் கொடுத்தல்.

நிதிசார் முன்னேற்றம் - 2021

விபரம்	மதிப்பீட்டுத் தொகை (மில். ரூபா)	மெய்த் தொகை (மில். ரூபா)
மூலதன செலவுகள்	599.27	132.65
மீண்டுவரும் செலவுகள்	1797.58	1614.26 (2021 நவம்பர் வரை)

அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்:

சாராம்சம்

விவசாயத் துறையின் பயனுறுதித் தன்மைக்குப் பங்களிப்புச் செலுத்துவதை அடிப்படையாகக்கொண்டு இந்த ஆண்டு அதிக மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தேயிலை மீள் நடுகை, பராமரிப்பு, இறந்த கன்றுகளை பிரதியீடு செய்தல், தேயிலை நாற்றுமேடைகளை நிறுவுதல் மற்றும் சேதன உர உற்பத்தி போன்ற நடவடிக்கைகள் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் சுமார் ஒரு மில்லியன் கிலோ கிராம் பசுந்தேயிலை கொழுந்துகள் மேலதிகமாக பறிக்கப்பட்டமை இந்த நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் :

செயற்திட்டம்	நிதி முன்னேற்றம் (மில். ரூபா)		பௌதீக முன்னேற்றம்	
	மதிப்பீட்டுத் தொகை	உண்மையான செலவு	மதிப்பீடப்பட்டவை	உண்மையான செலவு
மீள் நடுகை - தேயிலை - இறப்பர்	125.16 47.03	28.06	58.00 55.79	14.51 Ha
பராமரிப்பு/ நிலப் பண்படுத்தல் - தேயிலை - இறப்பர்	47.16 49.40	11.75 33.98	24.00 149.75	10.50 ha 147.75 ha
இறந்த கன்றுகளை பிரதியீடு செய்தல்	57.47	9.58	27.10	8 ha
வன வளர்ப்பு மற்றும் பராமரிப்பு	10.19	5.38	56.5	14 ha(49500 கன்றுகள்)

செயற்திட்டம்	நிதி முன்னேற்றம் (மில். ரூபா)		பௌதிக முன்னேற்றம்	
	மதிப்பீட்டுத் தொகை	உண்மையான செலவு	மதிப்பீடப்பட்டவை	உண்மையான செலவு
ஏனைய பயிர்கள் மற்றும் சேதன உரம்	74.88	17.99	110.80	(1173 தொன் சேதன உரம், 3.5 ஹெக்டயர் மிளகு, 8440 கோப்பிச் செடிகள்)
தேயிலை தொழிற்சாலையை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள்	64.22	8.02		ஹோப், லெவலன் மற்றும் லுல்கந்துர தேயிலை தொழிற்சாலைகள்
1. தேயிலை நாற்றுமேடைகள்	27.61	17.46	1350000 கன்றுகள்	509309 கன்றுகள்
2. வாகனங்கள்	46.77	0.11		
3. விவசாய உபகரணங்கள்	5.44	0.32		
4. ஏனையவை	43.94	-		
மொத்தம்	**599.27**	**132.65**		

முன்னேற்றம் மீளாய்வு – 2021, 2021 நவம்பர் மாதம் வரை (முகாமைத்துவ கணக்கறிக்கைக்கு அமைவாக)

விபரம்	2021 ஆண்டு	2020 ஆண்டு	அதிகரிப்பு/ குறைவு பெறுமதி	சதவீதம் (%)
தேயிலை உற்பத்தி பச்சை இலைக் கொழுந்து – (தோட்டங்கள்)	6,902,149.00	5,934,207.74	867,941.26	16.31 %
தொழிலாளர்களுக்கு குத்தைக்கு வழங்கி பெற்றுக் கொண்ட தேயிலை இலைகள்	136,374.00	69,311.00	67,063.00	96.76 %
மொத்தம்	7,038,523.00	6,003,518.74	1,035,004.26	17.24 %
தேயிலை உற்பத்தி (உற்பத்தி செய்த தேயிலை)				
தேயிலை உற்பத்தி (உற்பத்தி செய்த தேயிலை) – (தோட்டங்கள்)	1,507,993.90	1,237,655.00	270,338.90	21.84 %
தொழிலாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கி பெற்றுக் கொண்ட உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை	29,329.00	15,363.00	13,966.00	90.91 %
மொத்தம்	1,537,322.90	1,253,018.00	284,304.90	22.69 %
தேயிலை அறுவடை பெற்றுக்கொள்ளும் நிலப்பரப்பு (ஹெக்.)	2,808.32	2,778.49		
ஹெக்டயர் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட அறுவடை	537	445	91.	20.55 %
ஒரு கிலோவின் விற்பனை விலை	429.55	425.96	3.60	0.84 %
ஒரு கிலோவிற்கான உற்பத்திச் செலவு	664.01	692.78	(28.77)	(4.15) %
இறப்பர் உற்பத்தி – கிலோ கிராம்	370,665	410,890	(40,225.00)	(9.79) %
ஒரு ஹெக்டயரில் இருந்து கிடைக்கும் அறுவடை – கிலோ கிராம்	727	767	(40)	(5.31) %

விபரம்	2021 ஆண்டு	2020 ஆண்டு	அதிகரிப்பு/ குறைவு பெறுமதி	சதவீதம் (%)
ஒரு கிலோவுக்கான உற்பத்தி செலவு	425.17	264.74	160.43	60.60 %
இறப்பர் உற்பத்தி -கிலோ கிராம்	322.75	277.06	45.70	16.49 %
மொத்த வருமானம்	**1,403,707,937.00**	**1,068,485,051.12**	**335,222,886.08**	**31.37 %**
தோட்டத் தேயிலை	660,362,399.71	533,732,545.19	126,629,794.52	23.73 %
இறப்பர்	157,594,900.08	108,779,883.97	48,815,016.11	44.88 %
வாடிக்கையாளர் சேவை	331,756,098.87	295,949,367.00	35,806,731.87	12.10 %
தலைமை அலுவலகம்	108,848,163.11	66,187,453.26	42,660,709.85	64.45 %
ஏனைய வருமானங்கள்	145,146,435.43	638,35,801.70	81,310,633.73	127.37 %
மொத்த செலவு	1,614,267,899.45	1,407,132,682.55	207,135,216.90	14.72 %
தோட்டத் தேயிலை	1,020,804,955.06	868,065,503.15	152,739,451.91	17.60 %
இறப்பர்	119,633,595.62	113,840,336.12	5,793,259.50	5.09 %
வாடிக்கையாளர் சேவை	272,992,801.99	240,530,521.85	32,462,280.14	13.50 %
தலைமை அலுவலகம்	200,836,546.78	184,696,321.43	16,140,225.35	8.74 %
ஏனைய வருமானங்கள்	-			
நிகர இலாபம் / நட்டம் ரூபா.				
தோட்டத் தேயிலை	**(360,442,615.36)**	**(334,332,957.96)**	**(26,109,657.39)**	**7.81 %**
இறப்பர்	37,961,304.46	(5,060,452.15)	43,021,756.61	(850.16) %
வாடிக்கையாளர் சேவை	58,763,296.88	55,418,845.15	3,344,451.73	6.03 %
தலைமை அலுவலகம்	(91,988,383.67)	(118,505,868.17)	26,520,484.50	(22.37) %
ஏனைய வருமானங்கள்	145,146,435.43	63,835,801.70	81,310,633.73	127.37 %
மொத்தம் (மில். ரூபா)	**(210,559,962.25)**	**(338,647,631.43)**	**128,087,669.18**	**(37.82) %**

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருட நட்டம் 128.08 மில்லியன் ரூபாவால் (37.82% சதவீதத்தால்) குறைந்துள்ளது.

இலங்கை பொஸ்பேட் கம்பனி (LPC)

நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் சட்ட ரீதிச் சட்டகம்

1987ஆம் வருடத்தின் 33 இலக்கம் பொதுக் கூட்டுத்தாபன அல்லது அரசுக்கு சொந்தமான வியாபராங்களை பொறுப்பேற்கும் பொது கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் பிரகாரம் 1982ஆம் வருட இலக்கம் 17 கொண்ட கம்பனிகள் சட்டத்தின் கீழ் வ/பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனம் 1992 ஆம் வருடம் ஜூலை மாதம் 10 ஆந் திகதி ஒரு மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாக நிறுவப்பட்டது. அதற்கமைய இது அரச அகழ்வு மற்றும் கனிப்பொருள் அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தை பொறுப்பேற்றுக் கொண்டது. எனினும் 2007ஆம் வருட 07 இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட கம்பனி மீள்-பதிவு செய்யப்பட்டது.

இறுதியான தாய் நிறுவனம்

இலங்கை அரசு சார்பாக திறைசேரியின் செயலாளருக்கு நிறுவனம் வழங்கிய முழுமையான பங்குகளின் உரிமை பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

தொலைநோக்கு

எப்பாவல பொஸ்பேட் சேர்மானத்தை உச்ச அளவில் பயன்படுத்தி போசணைமிக்க பொஸ்பரசைக் கொண்டு எமது தாய் நாட்டு மண் வளத்தை வளப்படுத்தல்.

செயற்பணி

சூழல் நட்பு மற்றும் புதிய முறைகளின் ஊடாக பொஸ்பரஸில் தன்னிறைவடைந்து தேசிய பொஸ்பரஸ் உரத்தின் தேவையினை நிறைவு செய்தல்.

கம்பனியின் செயற்பாடுகள்

பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்படும் விதம்

நிறுவனத்தின் அடிப்படை செயற்பாடுகளாக விவசாயப் பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் பொஸ்பேட் சேர்மானங்களின் அகழ்வு, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவை காணப்படுகின்றன.

நிறுவனத்தின் பணிகள்


- கனிப் பொருட்கள் ஆய்வு
- சேர்மானப் பாறைகளை அகழ்தல் (அகழ்ந்து எடுத்தல்)
- பதப்படுத்தல், தட்டுதல் மற்றும் அரைத்தல்
- வரவுசெலவு / தரக் கட்டுப்பாடு / சந்தைப்படுத்தல் பகுப்பாய்வு
- களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள்
- போக்குவரத்து மற்றும் ஏற்றுதல்
- பராமரிப்பு நடவடிக்கைகள்
- பயிற்சிகள் வழங்கல்
- நிதி தொடர்பான கணக்கியல் நடவடிக்கைகள்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை
- உற்பத்திகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- நிறுவன ரீதியான சமூக செயல்பாடுகள்
- ஊழியர் நலனோம்பல்


1.0 இலாபமீட்டும் தன்மை


விபரம்	2020/21	2019/20	வித்தியாசம்	%
மொத்த வருமானம் - அளவு (மெ. தொன்)	64,392	44,429	19,963	44.9%
- (மில். ரூபா)	**750.37**	**510.00**	**240.37**	47.1%
உற்பத்தி - அளவு (மெ. தொன்)	61,487	46,364	15,123	32.6%
எனைய வருமானம் – (மில். ரூபா)	29.52	36.32	(6.80)	(18.7%)
மொத்த செலவு – நேரடி (மில். ரூபா)	405.00	321.28	(83.72)	(26.0%)
- மறைமுக (மில். ரூபா)	241.32	213.87	(27.45)	(12.8%)
மொத்த இலாபம்/ (நட்டம்)	**345.37**	**188.72**	**156.65**	**83%**
செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)	**120.96**	**(22.84)**	**143.80**	
வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)	**150.58**	**13.48**	**137.10**	

2.0 2021.03.31 ஆம் திகதிக்கான நிதி நிலை

விபரம்	2020/21	2019/20	வித்தியாசம்
அசையா சொத்துகள்	343.93	380.36	(37.43)
நடைமுறைச் சொத்துகள்	755.76	567.29	188.48
மொத்த சொத்துகள்	**1,099.69**	**948.65**	**151.04**
நீண்டகாலப் பொறுப்புகள்	78.22	78.30	(0.74)
நடைமுறைப் பொறுப்புகள்	77.59	38.97	38.62
மொத்த பொறுப்புகள்	**155.81**	**117.27**	**38.54**
சாம் பங்குகள்/ பங்குதாரர்களின் நிதி	**943.87**	**831.34**	**112.49**







தற்போதுள்ள செயற்திட்டங்கள்

செயற்திட்டம்	முன்னேற்றம்	பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள காலம்
புதிய அறைக்கும் இயந்திரத்தை நிறுவுதல்.	இயந்திரவியல் பணிகள் மற்றும் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.	2022 பெப்ரவரி
துகளாக்கும் இயந்திரங்களை மறுசீரமைத்தல்.	இயந்திரவியல் பணிகள் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன	2022 ஆகஸ்ட்
உரம் பொதி செய்யும் அலகை நிறுவுதல்.	இயந்திரவியல் பணிகள் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன	2022 ஏப்ரல்
எரிசக்தி விநியோகத் தொகுதி அமைப்பு மற்றும் மேலதிக மின்பிறப்பாக்கித் தொகுதி என்பவற்றை புதுப்பித்தல்	செயற்திட்ட அறிக்கைக்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறவேண்டியுள்ளது.	2022 ஆகஸ்ட்
எப்பாவலை மூலப்பொருள் களஞ்சியத்தை நிர்மாணித்தல்	பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன	2022 ஆகஸ்ட்

நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)

தொலைநோக்கு:

நெல் மற்றும் அரிசியை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான பிரதான அரச மத்தியஸ்தராக செயற்படுதல்

செயற்பணி :

உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு சாராரும் திருப்திப்படும் விதத்தில் நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தும் செயற்பாடுகளை அறிவும், திறமையும் உள்ள பதவியணி ஒன்றினூடாக சிறப்பாக மேற்கொள்ளுதல்.

நோக்கங்கள்

- சந்தையில் நெல்லுக்கான நிலையான உயர்ந்த விலையைப் பெற்றுக் கொடுத்தல்
- அரிசி இடித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்
- நியாயமான விலைக்கு அரிசி வகைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- களஞ்சியங்களின் கொள்ளளவுகளை அதிகரித்தல் மற்றும் பாதுகாப்பு இருப்பை முறையாக சேமித்து வைக்கக்கூடிய பொருத்தமான களஞ்சியங்களை உருவாக்குதல்
- விஞ்ஞான ரீதியாக நெல் களஞ்சியப்படுத்தக்கூடிய நவீன தொழிநுட்ப வசதிகளுடன்கூடிய களஞ்சியங்களை நிர்மாணித்தல்

பணிகள் -

- நெல் விவசாயிகள் சந்தைப்படுத்தும் விலையை உத்தரவாதப்படுத்துவதற்கு உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்தல்
  a. நெல் மற்றும் அரிசியின் சந்தை விலையை நிலையாகப் பேணுதல்
  b. நெல் மற்றும் அரிசி இருப்புக்களைப் பேணுதல்
  c. இலங்கையர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

நிதி முன்னேற்றம் -

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா.) (அங்கீகரிக்கப்பட்ட)	செலவு செய்த தொகை (மில். ரூபா.) (உண்மையான)
மூலதன செலவுகள்	500.0	35.5 *
மீண்டுவரும் செலவுகள்	150.0	140.6
உரிமைப் பங்களிப்பு	2,171.0	2,176.3

* இந்த அங்கீகரிக்கப்பட்ட மூலதன செலவுகளின் கீழ் செலவு செய்த மேலுள்ள ஒதுக்கீடுகளை பெற்றுத்தருமாறு திறைசேரியிடம் 2021.10.21 ஆம் திகதி கோரப்பட்ட போதிலும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இதுவரை கிடைக்கவில்லை.

விஷேட துறைகள்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1	நெல் கொள்வனவு செய்தல்	
ஒதுக்கப்பட்ட தொகை 19,755 மில். ரூபா	செலவு செய்த தொகை 2,898 மில். ரூபா	
நோக்கம்	உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் திருப்தியுறும் வண்ணம் நெல் மற்றும் அரிசி என்பவற்றை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்.	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் 1. 2020/21 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு 2. செயற்பாட்டு செலவுகளை மேற்கொள்ளல் 3. 2021 சிறு போகத்தில் நெல் கொள்வனவு 4. செயற்பாட்டு செலவுகளை மேற்கொள்ளல்	அடைய வேண்டிய இலக்குகள்\ 2020/21 பெரும் போகத்தில் நெல் 300,000 மெற்றிக் தொன் கொள்வனவு செய்தல். 2021 சிறு போகத்தில் நெல் 100,000 மெற்றிக். தொன் கொள்வனவு செய்தல்.	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம் 2020/21 பெரும் போகத்தில் நாட்டரிசி நெல். 44,249 மெற்றிக் தொன், சம்பா அரிசி நெல் 527.0 மெற்றிக் தொன் என மொத்தமாக 44,776 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. பௌதீக முன்னேற்றம் 16% 2021 சிறு போகத்தில் 7,582 மெ. தொன் நாட்டு அரிசி நெல், 136 மெ. தொன் சம்பா நெல் மற்றும் 10 மெ. தொன் கீரி சம்பா நெல் உள்ளடங்களாக மொத்தம் 7,728 மெ. தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது. பௌதீக முன்னேற்றம் 13%
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம உத்தியோகத்தர் பிரிவு)	அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி , பதுளை, கம்பஹா, மாத்தளை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி,மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில்.	
பயனடைந்தோர் என்ணிக்கை	நாடு முழுவதுமுள்ள விவசாயிகள்	
நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொண்ட கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	இல்லை 05	

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2	மூலதன செலவுகள்	
ஒதுக்கப்பட்ட தொகை 500 மில். ரூபா.	செலவு செய்த தொகை 35.5 மில். ரூபா.	
நோக்கங்கள்	நெல் கொள்வனவு செய்வதற்காக களஞ்சியங்களை திருத்தியமைத்தல்.	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் 1. 04 புதிய களஞ்சியங்களை நிர்மாணித்தல். 2. 100 களஞ்சிய வெப்பச்சலன நெல் உலர்த்தும் இயந்திரங்களை நிறுவுதல். 3. களஞ்சியங்களை திருத்தியமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பான செயற்பாட்டுச் செலவுகளை மேற்கொள்ளல் 4. 15,000 நில கொள்வனவு செய்தல். 5. பயிற்சி மற்றும் அபிவிருத்தி	அடைய வேண்டிய இலக்குகள்\ நெல் கொள்வனவுக்காக கட்டாயமாக திருத்தியமைக்கப்பட வேண்டிய 35 களஞ்சியங்கள் இராணுவத்தால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம் 30% திறைசேரியினால் மூலதன ஒதுக்கீடுகள் வழங்கப்படாததன் காரணமாக ஏனைய செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம உத்தியோகத்தர் பிரிவு)	அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், மட்டக்களப்பு , புத்தள, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில்	
பயனடைந்தோர் எண்ணிக்கை	நாடு முழுவதுமுள்ள விவசாயிகள்	
நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொண்ட கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	இல்லை. 05	
கள மேற்பார்வை தொடர்பான இரண்டு புகைப்படங்கள் – இந்தப் புகைப்படங்களின் திகதி மற்றும் மேற்பார்வை செய்யும் விபரம்/ பிரதேசம்/ பங்குபற்றிய அதிகாரிகள் ஆகிய விபரங்களைக் குறிப்பிடவும்.		

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 3	உரிமைப் பங்களிப்பு	
ஒதுக்கப்பட்ட தொகை மில். ரூபா. 2,171	செலவு செய்த தொகை மில். ரூபா. 2,176.3	
நோக்கங்கள்	2012 ஆம் ஆண்டு முதல் 2019 வரை நெல் கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட பழைய கடன்களை நடைமுறைக் கடனாக தவணை அடிப்படையில் செலுத்தல்.	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் 1. இலங்கை வங்கித் தவணைக் கட்டணம் செலுத்தல். 2. மக்கள் வங்கித் தவணைக் கட்டணம் செலுத்தல்.	அடைய வேண்டிய இலக்குகள்\ நெல் கொள்வனவுக்காக பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்களை மீளச் செலுத்தல்.	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம் 100%

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம்/ கிராம உத்தியோகத்தர் பிரிவு)	-
பயனடைந்தோர் எண்ணிக்கை	நாடு முழுவதுமுள்ள விவசாயிகள்
நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொண்ட கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	பொருந்தாது.
கள மேற்பார்வை தொடர்பான இரண்டு புகைப்படங்கள் – இந்தப் புகைப்படங்களின் திகதி மற்றும் மேற்பார்வை செய்யும் விபரம்/ பிரதேசம்/ பங்குபற்றிய அதிகாரிகள் ஆகிய விபரங்களைக் குறிப்பிடவும்.	இல்லை.

இலாப/ நட்டம் தொடர்பான விபரம்

ஆண்டு	இலாப/ நட்டம் (மில். ரூபா)
2017	*(462.11)*
2018	*(1,185.10)*
2019	*(741.66)*

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI)

தொலைநோக்கு

நிலைபேறான விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான அறிவை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் முன்னணி நிறுவனமாக திகழ்தல்.

செயற்பணி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஊடாக விவசாய மற்றும் கிராமியத் துறைகளைப் பலப்படுத்துதல்.

இலக்குகள்

- அறிவு உருவாக்கம் மற்றும் அவற்றை உடனுக்குடன் பரப்புதல் என்பவற்றின் மூலம் கொள்கை உருவாக்கும் செயல்முறையை வினைத்திறன்மிக்கதாக்குதல்
- பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் கிராமிய அபிவிருத்தியுடன் தொடர்புடைய பங்குதாரர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- செயல்பாட்டு ஆராய்ச்சிகள் மூலம் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல்
- விநியோகச் சங்கிலியில் உள்ள பங்குதாரர்களுக்கு சந்தை விலைத் தகவல்களின் பரிமாற்றத்தை விருத்தி செய்தல்.
- நிறுவனத்தின் வள முகாமைத்துவத்தை விருத்தி செய்தல்.

நோக்கங்கள்

- கொள்கை வகுப்பாளர்கள், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு சந்தைத் தகவல்களை விநியோகித்தல்
- சந்தைப்படுத்தலில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்துதல்
- நுகர்வோர் நடத்தை தொடர்பான ஆய்வுகளை நடத்துதல்
- அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்
- விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்
- விவசாயக் கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்
- முன்மொழியப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளல்
- நீர்வள முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசன விவசாயம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- நீர்ப்பாசன நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனங்கள் மற்றும் நிறுவனக் கொள்கைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- தேசிய முன்னுரிமைகளுக்கு அமைவாக பயிற்சி நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள் / கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அவற்றை நடாத்துதல்
- குறிப்பிட்ட துறைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் வெளிப்புற கேள்விகளை பூர்த்தி செய்தல்
- வெளி நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு பயிற்சி பெற்ற நிபுணர்களின் சேவைகளை வழங்குதல்
- நூலகங்கள் மற்றும் கட்புல செவிப்புல வளங்களை மேம்படுத்துதல்

- ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை பகிர்வதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
- சூழல் மற்றும் இயற்கை வள முகாமைத்துவ பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- உள்ளீடு வழங்கல் மற்றும் உதவி சேவைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதல்
- மனித வளத் திறன்களின் விருத்தி செய்தல்
- தேவைகளின் அடிப்படையில் புதிய பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

நிதி முன்னேற்றம்

அட்டவணை 01: மூலதன செலவுகள் மற்றும் மீண்டுவரும் செலவுகள் சாராம்சம்

விபரம்	ஒதுக்கீடுகள் (மில். ரூபா.)	செலவு (மில். ரூபா.)
மூலதன செலவுகள்	9.76	8.35
மீண்டுவரும் செலவுகள்	200	188

அட்டவணை 02: மூலதன செலவுகள்

விபரம்	ஒதுக்கீடுகள் (மில். ரூபா.)	செலவு (மில். ரூபா.)
ஆராய்ச்சிகள்	4.258	4.13
பயிற்சி நிகழ்ச்சிகள்	2.9	2.46
அறிவுப் பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சித் தகவல்களைப் பகிர்தல்	2.1	1.58
ஆராய்ச்சி மேற்பார்வை நடவடிக்கைகள்	0.5	0.183

ஒருங்கிணைந்த கூட்டுறவு அபிவிருத்தி செயற்திட்டத்தின் (ICDP) கீழ் நவீனமயப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ள விஷேட பொருளாதார மையங்களின் ஆரம்ப நிலைப் பகுப்பாய்வு, விவசாயிகள் நம்பிக்கை நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் 'க்ருஷி சக்தி' கடன் திட்டத்தின் மதிப்பீடு மற்றும் நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் ஆகிய ஆய்வு நடவடிக்கைகளுக்கு தேசிய வரவுசெலவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.

பௌதீக முன்னேற்றம்

அட்டவணை 03: ஆராய்ச்சி

விபரம்	இலக்கு	31.12.2021 ஆம் திகதிக்கான பௌதீக முன்னேற்றம்
ஆராய்ச்சி	75%	75% (அறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)

ஆராய்ச்சி சிபாரிசுகள்- *22 ஆராய்ச்சிகளுக்கு சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.*

2021 செயல் திட்டத்திற்கு அமைவாக, விவசாய சந்தைப்படுத்தல் தகவல் செயற்திட்டம் உட்பட 21 சமூக-பொருளாதார ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் திட்டமிட்டபடி நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டின் கமநலத் துறையின் மேம்பாட்டிற்காக குறித்த ஆராய்ச்சிகளுடன் தொடர்பான கொள்கை ரீதியான தாக்கங்களை உரிய தரப்பினருடன் பகிர்ந்துகொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, ஏனைய நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு பங்களிப்பதற்காக நடைமுறைத் தலைப்புகள் பலவற்றின் கீழ் பல அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேசிய விவசாய கொள்கை வரைவை மீளாய்வு செய்து சமர்ப்பித்தல், சேதன விவசாயத்தை நோக்கி நகர்தல் : எதிர்நோக்கும் பிரச்சனைகள், சவால்கள் மற்றும் பரிந்துரைகள்' என்ற தலைப்பில் அறிக்கையொன்றைத் தயாரித்து வழங்குதல், சேதன விவசாயத்தில் ஈடுபடுவதற்கு அரசு மேற்கொண்ட தீர்மானம் தொடர்பாக இராஜாங்க அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் விரிவான பின்னூட்டங்களை வழங்குதல், சேதன விவசாயத் துறையில் ஈடுபடுவது தொடர்பான பாதை வரைபடத்தைத் தயாரித்து வழங்குதல், உயிர்த் திணிவு இருப்புப் பட்டியலைத் தயாரித்தல், தேசிய சூழல் கொள்கையினை மீளாய்வு செய்தல், இலங்கையில் காடழிப்பு நிகழும் இடங்கள் தொடர்பான ஆரம்ப விஜயத்தை அடிப்படையாகக் கொண்ட உள்நோக்கு அறிக்கையைத் தயாரித்தல்.

02. பயிற்சியளித்தல்

பரந்த விடயப் பரப்புகள் பலவற்றை உள்ளடக்கும் வகையிலான 15 பயிற்சி நிகழ்ச்சிகளை ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு நடாத்தியுள்ளது.

அட்டவணை 05: பயிற்சித் நிகழ்ச்சிகளின் பௌதிக முன்னேற்றம்

விபரம்	*2021.12.31 ஆம் திகதிக்கான பௌதிக முன்னேற்றம்*	
	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	***பங்குபற்றியோர்***
கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பவற்றுக்கு சமூகப் பங்களிப்பு முறைகளை பயந்படுத்துவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	*03*	*198 உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகள் மாவட்ட திட்டமிடல் பிரிவின் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.*
சமூக உயிரூட்டல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி	*01*	*35 அபிவிருத்தி அதிகாரிகள் மாவட்ட மாவட்ட திட்டமிடல் பிரிவின் "சௌபாக்கிமுள்ள கிராமம்" எனும் பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*
கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பெண் விவசாய தொழில்முனைவோரைப் பலப்படுத்துவதற்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சி	*10*	*516 பெண் விவசாயத் தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*
விவசாய வியாபார எண்ணக்கருவின் பயன்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் விரிவாக்கம் தொடர்பான வதிவிட செயலமர்வு	*01*	*இலங்கை வயம்பப் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தின் விவசாய வியாபார முகாமைத்துவப் பாடநெறியைக் கற்கும் 29 இறுதியாண்டு மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*

03. அறிவுப் பகிர்வு மற்றும் ஆராய்ச்சித் தகவல்களைப் பரப்புதல்

கொவிட் 19 அச்சுறுத்தலின் காரணமாக முந்தைய ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த எனினும் தவறிய 16 ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டமை 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க அடைவாகும். மேலும், ஏனைய நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்குப் பங்களிப்புச் செலுத்தும் நோக்கில் நடப்புத் தலைப்புகளில் பல அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேசிய விவசாய கொள்கையின் வரைவை மீளாய்வு செய்து சமர்ப்பித்தல், சேதன விவசாயத்தை நோக்கி நகர்தல்: முன்னோக்கிச் செல்வதில் உள்ள சிக்கல்கள், சவால்கள் மற்றும் பரிந்துரைகள்' எனும் தலைப்பில் அறிக்கையொன்றை தயாரித்து வெளியிடல், சேதன விவசாயத்தில் ஈடுபடுவதற்கு அரசு மேற்கொண்ட தீர்மானம் தொடர்பாக இராஜாங்க அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் விரிவான பின்னூட்டங்களை வழங்குதல், சேதன விவசாயத் துறையில் ஈடுபடுவது தொடர்பான பாதை வரைபடத்தைத் தயாரித்து வழங்குதல், தேசிய விவசாயக் கொள்கை வரைவை மதிப்பாய்வு செய்து வழங்குதல், உயிர்த் திணிவு இருப்புப் பட்டியலைத் தயாரித்தல், தேசிய சூழல் கொள்கையினை மீளாய்வு செய்தல், இலங்கையில் காடழிப்பு நிகழும் இடங்கள் தொடர்பான ஆரம்ப விஜயத்தை அடிப்படையாகக் கொண்ட உள்நோக்கு அறிக்கையைத் தயாரித்தல்.

- *விவசாயிகளிடையே டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரவுகளுக்கான அணுகல் இல்லாமை.*
- *புதிய நிதி மாதிரிகளை அறிமுகஞ் செய்தல்*
- *பல்வேறு விவசாய இடுபொருட்கள் (இரசாயன உரங்கள் மற்றும் பல்வேறு பூச்சிக்கொல்லிகள், பீடைகொல்லிகள்) காரணமாக ஏற்படும் சுகாதாரப் பிரச்சனைகளைத் தவிர்த்தல்.*

தீர்வுகள்

- *விவசாயிகளுக்கான நிலைபேறான நிதிப் பொறிமுறையொன்றை செயல்படுத்துதல்*
- *விவசாய சமுதாயத்தை கடன் பிரச்சினைகளில் இருந்து விடுவித்தல்*
- *தனியார் துறையின் தலையீட்டை அதிகரித்தல்.*
- *நிலைபேறான உற்பத்தி மற்றும் நிதி நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் பெண்கள் மற்றும் இளைஞர் சமூகத்தை பலப்படுத்தல்.*

இடர்நேர்வுகளால் பாதிக்கப்படக்கூடிய விவசாய சமூகங்கள் மற்றும் சிறிய உற்பத்தி குழுக்களுக்கான நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பாக காணப்படும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள்

சவால்கள்

- *பலவீனமான நிதிக் கட்டமைப்புகள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் காணப்படுதல். (ஒரே வகையான திட்டத்திற்கு வெவ்வேறு நிறுவனங்களால் பொருள் உதவி வழங்கப்படுதல்)*
- *அரச அல்லது வெளிநாட்டு உதவியால் வழங்கப்படும் கடன் தொகைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு குறித்த கடன்களை செலுத்தாத நிலை காணப்படும் சந்தர்ப்பங்களால் அரசு கடன் சுமையை ஏற்கவேண்டிய நிலை உருவாதல்.*
- *குடும்ப பணப்புழக்கம் பலவீனமடைதல் மற்றும் குடும்ப வன்முறை ஏற்படுதல்*
- *முறைசாரா மற்றும் பதிவு செய்யப்படாத உணவு உற்பத்தியாளர்கள் அதிகளவு உருவாகின்றமை.*
- *நிலம் தொடர்பான தகராறுகள் மற்றும் தெளிவற்ற / போட்டித்தன்மை கொண்ட நில உரிமைகளின் காணப்படுதல்.*

தீர்வுகள்

- *இடர்நேர்வுகளால் பாதிக்கப்படக்கூடிய விவசாய சமூகங்களுக்கு நிதியளிப்புகளை செய்வதற்கு அரசு தலைமையிலான வழிமுறைகளை நிறுவுதல், அவற்றை முறையாக செயற்படுத்துதல் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்குதல் மற்றும் அவற்றைப் பரப்புதல்.*
- *இளைஞர் சமூகத்தின் வினைத்திறன்மிக்க பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.*
- *செயலமர்வுகள் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சிகளில் விவசாயிகளை தொடர்ச்சியாகப் பங்குபற்ற ஊக்குவித்தல்.*
- *இடர் முகாமைத்துவ மற்றும் சமூக பாதுகாப்பு முறைகளின் நம்பகத்தன்மை மற்றும் ஒழுங்குமுறையை ஏற்படுத்தல்.*
- *பொது-தனியார் கூட்டாண்மைகளை மேம்படுத்துதல்.*

அத்தியாயம் - 06 : மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள் (மேலதிக)
சிரேஷ்ட	72	60	12
மூன்றாம் நிலை	9	4	5
இரண்டாம் நிலை	1017	817	200
ஆரம்ப நிலை	126	113	13
மொத்தம்	1227		230

6.2 பற்றாக்குறையான அல்லது மேலதிகமான மனித வளங்கள் நிறுவனத்தின் செயல்திறனின் மீது தாக்கம் செலுத்தும் விதம்

இந்த அமைச்சிற்கு 1227 பணிநிலைகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றில் 230 பணிநிலைகள் வெற்றிடமாக உள்ளன. ஒட்டுமொத்தமாக அவ்வெற்றிடங்கள் இந்த அமைச்சின் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் ஏனைய விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தடையாக மாறியுள்ளன.

I. இந்த அமைச்சிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பதவியணிகளின் எண்ணிக்கை 72 ஆகும். அதில் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 60 ஆகக் காணப்படுவதுடன் அவர்களில் 06 பேர் பதில் கடமை மேற்கொள்ளும் அதிகாரிகள் ஆவர். அதன்படி, சிரேஷ்ட நிலையில் காணப்படும் வெற்றிடங்கள் 12 ஆகும். இந்த 12 வெற்றிடங்களில் 06 இலங்கை நிர்வாக சேவையின் தரம் II / III இற்குரிய வெற்றிடங்களாகும். அப்பதிகளில் நிலவும் மேற்படி வெற்றிடங்கள் நிர்வாகம் I, நிர்வாகம் II, பெறுகை மற்றும் கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீடு ஆகிய பிரிவுகளின் பணிகளுக்கு பெரும் தடையாக காணப்படுகின்றன.

II. இந்த அமைச்சுக்கு 09 மூன்றாம் நிலை பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் மூன்று முழுநேர அதிகாரிகள் மற்றும் ஒரு பதில் கடமை மேற்கொள்ளும் அதிகாரி ஆகியோர் பணி புரிகின்றனர். இதன்படி, 05 மூன்றாம் நிலை பதவிகள் வெற்றிடமாகியுள்ளதுடன், அதில் நிர்வாக உத்தியோகத்தர் பதவி மற்றும் மொழிபெயர்ப்பாளர் பதவி என்பன கடமைகள் அதிகமுள்ள பதவியாகக் காணப்படுவதுடன், அந்தப் பதவிகள் கணிசமான காலம் வெற்றிடமாகக் காணப்படுவது மிகவும் சிக்கலாக உள்ளது.

III. இந்த அமைச்சுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 200 இரண்டாம் நிலை வெற்றிடங்கள் காணப்படுவதோடு, இந்த இரண்டாம் நிலை/ விடய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையானது ஏறக்குறைய அனைத்துப் பிரிவுகளிலும் காணப்படுகின்றமை அவ்வப்பிரிவுகளால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணமாக மாறியுள்ளது.

IV. மேலும், முதன்மை நிலைப் பதவிகளில் அலுவலக ஊழியர் சேவை மற்றும் ஒருங்கிணைந்த ஓட்டுநர் சேவை ஆகியவற்றில் நிலவும் வெற்றிடங்கள் குறித்த ஒத்துழைப்பு வழங்கும் பணிகளை மேற்கொள்வதில் தொடர்ந்தும் சிக்கல் நிலைகளை தோற்றுவிக்கின்றன.

6.3 மனித வள அபிவிருத்தி - (6.3.1) உள்நாட்டு பயிற்சிகள்

தொ/இல	நிகழ்ச்சி	பயிற்றப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை	பயிற்சிநெறியின் கால எல்லை	மொத்த முதலீடு (ரூபா)
01	*பட்டதாரி பயிலுனர் பயிற்சிநெறி*	*100*	*2021.01.11 – 2021.01.22*	*330,000.00*
02	*அலுவலக சேவையாளர் சேவைக்கான பயிற்சிநெறி*	*20*	*2021.02.17 – 2021.02.18*	*32,324.00*
03	*ஓட்டுனர்களுக்கான பயிற்சிநெறி*	*25*	*2021.02.24 – 2021.02.25*	*35,000.00*
04	*சம்பள ஆவணங்களைப் பேணல்*	*02*	*2021.07.12, 2021.07.14 2021.07.16*	*10,000.00*
05	*தனிப்பட்ட கோவைகளைப் பேணல்*	*30*	*2021.08.05 – 2021.08.06*	*15,000.00*
06	*விடுமுறை மற்றும் மேலதிக நேரம் பற்றிய பயிற்சிநெறி*	*20*	*2021.10.07 – 2021.10.08*	*12,200.00*
07	*இழப்பு, நட்டங்கள் மற்றும் நி.பி 104 இன் கீழ் மேற்கொள்ளும் விசாரணைகள்*	*04*	*2021.11.02*	*20,000.00*
08	*களஞ்சிய முகாமைத்துவம், இருப்புப் பட்டியல் முகாமைத்துவம் மற்றும் சொத்து முறைகேடு பற்றிய செயலமர்வு*	*04*	*2021.11.11 – 2021.11.23*	*28,000.00*
09	*அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குமுறைகள்*	*04*	*2021.11.11 – 2021.11.12*	*40,000.00*
10	*வருடாந்த பொருள் இருப்புக் கணக்கெடுப்பு*	*04*	*2021.11.19, 2021.11.26, 2021.12.02*	*60,000.00*
11	*ஓய்வூதியம் குறித்த பயிற்சிநெறி*	*50*	*2021.11.23*	*33,700.00*
12	*அரச அதிகாரிகளின் முற்பண B கணக்குத் தயாரித்தல்*	*02*	*2021.11.24*	*7,500.00*
13	*அரச அதிகாரிகளுக்குத் தேவையான தாபன விதிக்கோவையின் விதிகள் மற்றும் கணக்கியல் அமைப்புகள் (நிதி ஒழுங்குமுறைகள் தொடர்பாக)*	*04*	*2021.11.24 மற்றும் 2021.11.30*	*8,000.00*

6.3 மனித வள அபிவிருத்தி - (6.3.2) வெளிநாட்டுப் பயிற்சிகள்

வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அதிகாரிகள் - சுருக்கம்

பதவிநிலை அதிகாரிகள்	*- 55*
அபிவிருத்தி அலுவலர்கள்	*- 35*
முகாமைத்துவ சேவை அதிகாரிகள்	*- 01*
பட்டதாரி பயிலுனர்கள்	*- 20*
கலந்துகொண்ட மொத்த அதிகாரிகள்	***- 111***

பாலினத்தின் அடிப்படையில் - பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள்

ஆண்	*- 42*
பெண்கள்	*-69*
மொத்தம்	***- 111***

அத்தியாயம் - 07 : இணைக்கப்பாட்டு அறிக்கை

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
1	**கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கை/ கணக்குகள் குறித்த தினத்தில் சமர்ப்பிக்கப்பட்திருத்தல்.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கை	இணங்குகின்றது		
1.2	அரச அதிகாரிகளின் முற்பணக் கணக்கு	இணங்குகின்றது		
1.3	வியாபார மற்றும் உற்பத்தி விற்பனை முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	இணங்குகின்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணங்குகின்றது		
1.5	விசேட முற்பணக் கணக்கு	இணங்குகின்றது		
1.6	ஏனையவை			
2.	**பதிவு புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பேணல் (நி. பி. 445)**			
2	**பதிவு புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பேணல் (நி. பி. 445)**	இணங்குகின்றது		
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி, நிலையான சொத்து பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.2	ஆள் சார் வேதன ஆவணங்கள் / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்.	இணங்குகின்றது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்குகின்றது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.7	பொருட்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.8	இருப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.9	இழப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.10	பொறுப்பு பதிவேட்டினை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் பதிவேட்டை (GAN 20) இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
3	**3. நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி. பி 135)**			
3.1	நிறுவனத்தில் நிதி அதிகாரங்கள் பகிரப்பட்டு இருத்தல்	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்தில் அறிவூட்டப்பட்டுள்ளமை	இணங்குகின்றது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை.	இணங்குகின்றது		
3.4	*2014.05.11* திகதிக்குரிய அரச கணக்கு சுற்றறிக்கை இல *171/2004* இன் படி, அரசு புதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயல்படுகின்றமை.	இணங்குகின்றது		
4	***வருடாந்த திட்டத்தை தயாரித்தல்***			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்	இணங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்குகின்றது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்	இணங்குகின்றது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதனை தேசிய வரவு செலவுத் திணைக்களத்தில் *(NBD)* உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்குகின்றது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படல்	இணங்குகின்றது		
5	***கணக்காய்வு வினாக்கள்***			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் அளிக்கப்படல்.	இணங்குகின்றது		
6	***உள்ளக கணக்காய்வு***			
6.1	நி. பி *(134) (2) DMA / 1-2019* இன் படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணங்குகின்றது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணங்குகின்றது		
6.3	*2018* ஆம் ஆண்டின் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் துணைப் பிரிவு *40(4)*	இணங்குகின்றது		

	இற்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.			
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) ஆம் நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**			
7.1	DMA/1-2019 சுற்றறிக்கையின் படி, ஆண்டுக்கு ஆகக் குறைந்தது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படல்.	இணங்குகின்றது		
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பத்தியின் படி, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி, அச்சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைக்கக் கூடிய பொருத்தமான இணைப்பு அதிகாரியை நியமித்து, அவ் அதிகாரியின் விபரங்களை கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அனுப்பியிருத்தல்.	இணங்குகின்றது		
8.3	அரச சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் பிரகாரம், பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை	இணங்குகின்றது		
8.4	வருடாந்தப் பொருட் கணக்கெடுப்பின் போது இனங் காணப்படும், உபரிகள்,	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
	குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் ஆகியவற்றை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலத்தினுள் நிறைவேற்றியுள்ளமை.			
8.5	பாவனைக்கு உதவாத பொருட்களை பயன்பாட்டில் இருந்து அகற்றுதல் நி. பி 772 இன் பிரகாரம் இடம்பெற்றுள்ளமை.	இணங்குகின்றது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை என்பவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணங்குகின்றது		
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இணங்குகின்றது		
9.5	2016.12.29. திகதிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளுக்கு அமைய வாகனங்களின் எரிபொருள் பாவனைய மீண்டும் பரிசீலித்தல்.	இணங்குகின்றது		
9.6	குத்தகை வாகனங்களில் உரித்து பதிவுப் புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படல்.	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
10	**வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னிருந்து முன்கொண்டு செல்லப்படுகின்ற செயற்படாத வங்கி கணக்குகளை தீர்த்தல்	இணங்குகின்றது		
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தப்பட்ட சரி செய்யப்பட வேண்டியிருந்த நீதி தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு அம்மீதிகளை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்தல்.	இணங்குகின்றது		
11	**ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை மீறாத வகையில் செலவு செய்தல்.	இணங்குகின்றது		
11.2	நி. பி *94(1)* பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்திய பின்னர் வருட இறுதியில் மீதமான ஒதுக்கீட்டை வரையறைகளை மீறாத வகையில் பொறுப்புகளில் காட்டுதல்.	இணங்குகின்றது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைகளுக்குள் இணங்குதல்	இணங்குகின்றது		
12.2	நிலுவையில் உள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரப் பகுப்பாய்வை மேற்கொண்டிருத்தல்	இணங்குகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலான காலத்திலிருந்து தொடரும் நிலுவையில் உள்ள கடன் மீதிகளை தீர்த்து இருத்தல்	இணங்குகின்றது		
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புகளை அகற்றுவதற்கு நி.பி *571* பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணங்குகின்றது		
13.2	பொது வைப்புகளுக்கான நிர்வாகக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
14.2	நி.பி *371* இற்கு அமைய, தற்காலிக இடைக் கட்டுநிதிகள் குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
14.3	நி.பி *371* இற்கு அமைய, அங்கீகரிக்கப்பட்ட பழைய வரையறையை மீறாத வகையில் தற்காலிக இடைக்கட்டு நிதி வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
14.4	கட்டு நிதி கணக்கின் மீதியை திறைசேரியின் புத்தகத்துடன் மாதாந்தம் கணக்கிணக்கம் செய்யப்படுகின்றமை.	இணங்குகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தியிருத்தல்.	இணங்குகின்றது		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்திருத்தல்.	இணங்குகின்றது		
15.3	நி.பி. *176* இற்கு அமைய, குறை வருமான அறிக்கை கணக்காளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகின்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எல்லையினுள் பதவியணியைப் பேணுதல்	இணங்குகின்றது		
16.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்களை எழுத்து மூலம் வழங்கியிருத்தல்.	இணங்குகின்றது		
16.3	*20.09.2017* ஆம் திகதிக்குறிய *MSD 04/2017* ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் நிருவாக சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		

17	**பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கல்**			
17.1	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் ஒரு தகவல் அதிகாரியை நியமித்து தகவல் வழங்கும் ஒரு ஆவணத்தைப் இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. அத்துடன் வலைத்தளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்கள் கருத்துகள் / குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் *8* மற்றும் *10* பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு முறைகள் அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
18	**குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் நிருவாக அமைச்சின் *05/2008* ஆம் மற்றும் *05/2018 (1)* ஆம் இலக்க சுற்றறிக்கைகளின்படி குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்திருத்தல்.	இணங்குகின்றது		
18.2	அந்த சுற்றறிக்கையின் *2.3* பத்தியின் பிரகாரம், குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தினைத் தொகுத்தல் மற்றும் செயல்படுத்தலைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் நிறுவனத்தினால் ஒரு வழிமுறையை வகுத்திருத்தல்.	இணங்குகின்றது		
19	**மனித வளத் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	*24.01.2018* திகதிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை எண் *02/2018* இன் இணைப்பு *02* இன் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருத்தல்.	இணங்குகின்றது		

இல	கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்	இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கப்பாடு இல்லை எனில் அது பற்றிய சிறிய குறிப்பு	இணக்கப்படா நிலைமையைத் தவிர்க்க எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள்/ வழிமுறைகள்
19.2	ஊழியர்களின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் *12* மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதை மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல்.	இணங்குகின்றது		
19.3	மேற் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் இணைப்பு *01* இல் காட்டப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, ஒட்டுமொத்த ஊழியர்களுக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருத்தல்.	இணங்குகின்றது		
19.4	மேற்படி சுற்றறிக்கையின் *(19.1* இல் குறிப்பிட்டுள்ள*) 6.5* பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை மேம்படுத்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்தும் பொறுப்பை மேற்கொள்ள சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமித்திருத்தல்.	இணங்குகின்றது		
20.	**கணக்காய்வுப் பத்திகளுக்கு பதிலளித்தல்**			
20.1	கடந்த ஆண்டிற்கான கணக்காளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்திருத்தல்.	இணங்குகின்றது		

செயலாற்றுகை அறிக்கை - 2021 (கமத்தொழில் அமைச்சு, செலவுத் தலைப்பு 118

வெளியீட்டு முகாமைத்துவம்

செயலாளர் *- கமத்தொழில் அமைச்சு*
திரு. டீ.எம்.எல் பண்டாரநாயக்க
பணிப்பாளர் நாயகம் – (திட்டமிடல்) திருமதி. கமணி சூரியாராச்சி

ஒருங்கிணைப்பு

திருமதி எச்.எல்.சி.என் செவ்வந்தி (பணிப்பாளர்) திட்டமிடல்)
திரு. எச்.பீ.ஈ.எம் திசேரா (பிரதிப் பணிப்பாளர்) (திட்டமிடல்)
திரு. எல்.ஏ.டப்ளியு.டீ. லியானஆரச்சி(பிரதிப் பணிப்பாளர்) (திட்டமிடல்)

தகவல் வழங்கல் மற்றும் புகைப்படங்கள்
இராஜாங்க அமைச்சுகளின் – திட்டமிடல் பிரிவு (பணிப்பாளர்) (திட்டமிடல்)

- *சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழிநுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு (செலவுத் தலைப்பு 425/426)*
- *கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு*
- *பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு*
- *மாவட்ட விவசாய பணிப்பாளர் கள்*
- *புள்ளிவிபரவியல் தொடர்பான தகவல்கள் - பணிப்பாளர் (புள்ளிவிபரம்) / புள்ளிவிபர அதிகாரிகள், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (கமத்தொழில் அமைச்சு)*
- *கமத்தொழில் அமைச்சின் பிரிவுகளின் தலைவர்கள், விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் / கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள்*

அறிக்கையைத் தயாரித்தல்
திருமதி. ஐ.எஸ்.ஏ ஹெவாபத்திரன - (அபிவிருத்தி அதிகாரி) - திட்டமிடல் பிரிவு

மொழிபெயர்ப்பு (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்)
சிங்கள/ தமிழ் - திரு. எம். எல்.ஜே.எம் ரிழ்வான் (ஐக்கிய அரபு இராச்சிய தூதரகம்)
திரு. பர்ஸான் ராசிக் (அபிவிருத்தி அதிகாரி) - தேசிய உரச் செயலகம்
சிங்களம்/ ஆங்கிலம் – திருமதி. நயோமி சத்துரிக்கா (பிதமர் அலுவலகம்)

அச்சிப்பதிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவி
பெறுகைப்பிரிவு - கமத்தொழில் அமைச்சு

அட்டைப்படம்
திரு. லஹிரு பெரேரா

கௌரவ கமத்தொழில் அமைச்சர் உட்பட அதிகாரிகளின் வெளிக்கள புகைப்படங்கள்
ஊடகச் செயலாளர் - ஊடகப் பிரிவு மற்றும் வெளிநாட்டு நிதியுதவி மூலம் செயற்படுத்தப்படும் செயற்திட்டம் என்பவற்றின் மூலம்

வெளியீடு – திட்டமிடல் பிரிவு, கமத்தொழில் அமைச்சு
மின்னஞ்சல் முகவரி – pmeagri@gmail.com
இணையத்தளம் - http://www.agrimin.gov.lk

நிலைபேறான அபிவிருத்தி மற்றும் விவசாய அபிவிருத்திகளுடன் தொடர்பான ஏனைய தகவல் ஆதாரங்கள் - Webography – (இணையத்தில் இருந்து)

ஏஆர்ஐ/ஏ/எம்ஏ/2022/26 2022 யூலை 26

பிரதான கணக்கீட்டு அலுவலர்
கமத்தொழில் அமைச்சு

கமத்தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் சுற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, கமத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் கமத்தொழில் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க

உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகரின் மற்றும் கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் முன்னளிக்கப்படும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது பிரதான கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றினை உருவாக்கிப் பேணிச் செல்லப்படுவதாகப் பிரதான கணக்கீட்டு அலுவலகர் மற்றும் கணக்கீட்டு அலுவலகர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தொகுதியின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்பட்டு

அதற்கிணங்க தொகுதியை பயனுறுதிமிக்கதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைத் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என,

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகளுக்கான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

1.6.1.1 வருமானப் பெறுவனவு.

(அ) அரசின் நெல் கொள்வனவுச் செயற்திட்டத்தில் கடந்த வருடத்தின் கணக்கின் பிரகாரம் நிலுவை ரூபா 439,123,225 என்பதுடன் நடப்பாண்டின் இறுதிக் கணக்கில் அதற்கு மேலதிகமாக ரூபா 47,019,598 ஆன தொகையொன்று நிலுவை வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நெல் கொள்வனவு செயற்திட்டத்தின் நிலுவை வருமானம் தொடர்பான நம்பகரமான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி நெல் கொள்வனவுச் செயற்திட்டத்தின் கடந்த வருடத்தின் நிலுவை வருமானத்தில் ரூபா 138,204,923 மற்றும் நடப்பாண்டில் ரூபா 209,107,022 ஆன நிலுவை வருமானம் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 347,311,945 ஆன வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம் மீதிகள் அறவிடப்படாமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது.

1.6.2 நிதி நிலைமைக் கூற்று

1.6.2.1 நிதியல்லாச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமத்தொழில் அமைச்சில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஏனைய இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான 15 வாகனங்களின் உரிமையைக் கையேற்காது அவற்றின் ரூபா 51,500,000 ஆன பெறுமதி, நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 77,500,000 பெறுமதியான அமைச்சின் பொறுப்பில் இல்லாத 14 வாகனங்கள் நிதிக்கூற்றில் நிதியல்லாச் சொத்துக்களாக வெளிக்காட்டப்பட்டிருந்தன.

(இ) அமைச்சின் பெயரில் உள்ள மற்றும் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற மொத்தம் ரூபா 8,360,000 பெறுமதியான 04 வாகனங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வேறு அமைச்சொன்றுக்க வாகனங்கள் கையளிக்கப்படும் போது கையளிக்கப்படும் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு இல்லாது கமத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 259,300,000 பெறுமதியான 39 வாகனங்கள் இந்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இராஜாங்க அமைச்சுக்களின் விடயப்பரப்பு அவ்வப்போது மாற்றப்படுவதால் இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டு மீண்டும் இந்த அமைச்சிற்கு சேர்க்கப்பட்டமையால் குறிப்பிட்ட சில வாகனங்களை அந்த இராஜாங்க அமைச்சிற்கு கையளிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டதால் அவ்வாகனங்கள் அமைச்சரவை அமைச்சுக்களாக இந்த அமைச்சின் நிதியல்லாச் சொத்துக்களாக வைக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான வருமானக் குறியீட்டு இலக்கம் 2003.07.00 ஆன அரசின் நெல் கொள்வனவுச் செயற்திட்டத்தின் கீழ் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 1.500,000,000 என்பதுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 453,206,587 ஆக இருந்தமையால் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 30 சதவீதம் ஆகும்.

2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருட ஆரம்பத்திலிருந்து பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படமையால் 03 மூலதனச் செலவு விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 278,000,000 ஆன ஒதுக்கங்கள் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் சரியான கணிப்புக்களைக் செய்வதற்குத் தவறிய காரணத்தினால் 20 மூலதன விடயங்கள் மற்றும் 16 மீண்டெழும் செலவு விடயங்களுக்கான தேறிய ஒதுக்கத்தில் நூற்றுக்கு 13 தொடக்கம் 99 வரையான வீச்சில் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. மேற்காட்டப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஒதுக்கம் ரூபா 8,395,977,000 என்பதுடன் அவற்றுள் ரூபா 4,540,336,242 அதாவது நுற்றுக்கு 54 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அமைச்சின் மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000,000 ஆன தேறிய ஒதுக்கங்கள் வருடத்தில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் சேமிப்பினை விஞ்சியதாக ரூபா 3,250,000,000 ஆன பொறுப்புக்களுக்காக உடன்பட்டிருந்தது.

(ஆ) வருடத்தில் ரூபா 283,686 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் [(குறிப்பு–(iii)] இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிர்ச் சேதங்களுக்கான இழப்பீடு வழங்குவதற்கான 118-2-3-43-2202 செலவு விடயத்தின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் முறையே ரூபா 1.514 மில்லியன் மற்றும் ரூபா 1000 மில்லியன் ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட வருடங்களில் மேற்படி மொத்த ஒதுக்கப் பெறுமதி கமத்தொழில் மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. பதிவு செய்யப்பட்ட விவசாயிகள், இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய பயிர்ச் சேதங்கள் ஏற்பட்ட விவசாயிகள் மற்றும் இழப்பீடு செலுத்தப்பட்ட விவசாயிகள் உள்ளடங்கலாக மேற்படி தொகையைப் பயன்படுத்துதல் தொடர்பாக கமத்தொழில் அமைச்சு பின் தொடரல்களை மேற்கொள்ளவில்லை

என்பதுடன் இழப்பீடு செலுத்துவதற்கான பொறுப்பொன்று உருவாகியமைக்கு எவ்வித எழுத்து மூலமான சான்றுகளும் பெறப்படாது கமத்தொழில் சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கடிதமொன்றை அடிப்படையாகக் கொண்டு ரூபா 3,250,000,000 ஆன பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டிருந்தது.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**இணங்காமை.**
	---	---
(அ)	02/2017 ஆம் இலக்க மற்றும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய திறைசேரிப் பிரதிச் செயளாளரின் சொத்துக்கள் முகாமைத்தவச் சுற்றறிக்கை.	பதிவு செய்யப்படுவதற்கான உரிமையின்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், பதிவு செய்யும் உரிமையுள்ள நிறுவனத்தின் உடன்பாட்டின் அடிப்படையில், தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்படுவதற்கோ அல்லது பதிவு செய்வதற்கான உரிமையுள்ள நிறுவனத்திற்கு முறையாகக் கையளிக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கைப் பிரகாரம் கையேற்பதற்கோ அல்லது மீண்டும் கையளிப்பதற்கோ ஆன நடவடிக்கைகளின்றி வேறு நிறுவனங்களின் உரிமையின் கீழ் உள்ள 25 வாகனங்கள் கமத்தொழில் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 1646	வாகனங்களின் பயணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்புக்களின் மூலப் பிரதி மற்றும் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை

அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் வருடத்திற்கான ஏப்ரல் தொடக்கம் திசெம்பர் வரையான 13 உத்தியோகபூர்வ வாகனங்களின் மாதாந்தப் பொழிப்புக்களும் 2021 மார்ச் தொடக்கம் திசெம்பர் வரையான 26 குழாம் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் என்பன 2022 ஏப்ரல் 07 வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

.

2.5 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு

நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் அலுவல்கள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் பெறப்பட்ட இடைக்கால உப கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் கமத்தொழில் அமைச்சின் 23 உத்தியோகத்தர்களினால் 53 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 892,540 ஆன உப கட்டு நிதி தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு 02 நாட்கள் தொடக்கம் 106 நாட்கள் வரையான காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தது.

2.6 நட்டங்கள் மற்றும் பதிவளித்தல்

அரச உத்தியோகத்தர்களின் ரூபா 44,596 ஆன 02 முற்பணக் கடன் மீதிகள் 2021 ஆம் வருடத்தில் பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் அக் கடன் மீதிகள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் [குறிப்பு – (i)] உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவப் பலவீனங்கள்

3.1.1. கமத்தொழில் அமைச்சிற்குப் பெறப்பட்ட கட்டிடத்தின் குத்தகை ஒப்பந்தத்தைப் முடிவுறுத்தல்

கமத்தொழில் அமைச்சிற்கு குத்தகைக்கு எடுக்கபட்டிருந்த கட்டிடத்தின் உரிமையாளரான தனியார் கம்பனி மற்றும் கமத்தொழில் அமைச்சிற்கு இடையிலான 2178 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்தல் மற்றும் ரூபா 63 மில்லியன் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய வைப்புப் பணத்தை விடுவித்தல் தொடர்பாக கீழ் வரும் அதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குத்தகை ஒப்பந்தக் காலப்பகுதியில் தேவைப்படுமிடத்தில் குத்தகைக்கு கொடுத்தவர் மற்றும் குத்தகைக்கு பெற்றவர் என்போருக்கு ஒப்பந்தத்தை முடிவிற்குச் கொண்டு வர முடியுமான முறை தொடர்பான நிபந்தனையொன்று குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இக்குறைபாடு காரணமாக 5 வருடத்திற்கு குத்தகைக்கு எடுக்கப்பட்ட இந்த ஆதனம் நான்காம் ஆண்டில் மீண்டும் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மிகுதியாக உள்ள குத்தகைக் காலத்திற்கு சமமான வாடகை அளவொன்றை குறைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாதிருந்ததுடன் கட்டிடம் பயன்படுத்தப்படாத காலப்பகுதிக்காக ரூபா 310,939,139 ஆன குத்தகைத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இச்செலவு பொருளாதாரமற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) குத்தகை ஒப்பந்தக் காலப்பகுதியில் குத்தகைக்கு பெற்றவர் தரப்பினரால் குத்தகை கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக அமைச்சின் பொறியியளார் பிரிவின் அதிகாரிகள் மற்றும் விலைமதிப்புத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இணைத்து 2021 மார்ச், ஏப்ரல் காலப்பகுதியில் பரிசோதனையொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் மேற்படி பரிசோதனையில் பங்குபற்றுமாறு குத்தகைக்கு கொடுத்தவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும் குத்தகைக்கு கொடுத்த கம்பனி மேற்படி பரிசோதனையில் பங்குபற்றுவதை நிராகரித்திருந்ததுது. குத்தகை ஆதனத்தை விட்டு வெளியேறும் போது இரண்டு தரப்பினரின் பங்கேற்புடன் பொருத்தமான தொழிலநுட்ப நிறுவனத்தின் மூலம் இழப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்ட வேண்டுமென்பது ஒப்பந்தத்தின்

நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத காரணத்தால் கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் ஏற்பட்டிருந்த சேதங்களாக ரூபா 12,710,236 ஆம் குத்தகைக்கு கொடுத்த கம்பனி கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் ரூபா 28,250,056 உம் ஆக மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்த காரணத்தினால் தரப்பினரிடையே சேத நட்டங்கள் தொடர்பாக சர்ச்சைக்குரிய நிலைமையொன்று தோன்றி இருந்ததுடன் கமத்தொழில் அமைச்சின் எவ்வித பங்குபற்றலுமின்றி குத்தகைக்கு கொடுத்தவரால் ஒரு தலைபட்சமாக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 15,539,820 ஆன மேலதிகப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தமை ஆபத்தொன்றாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

(இ) ஒப்பந்த நிபந்தனை இலக்கம் II இன் பிரகாரம் ஒப்பந்தம் முடிவுற்று குத்தகை ஆதனம் ஒப்படைக்கப்படும் போது ஒரு மாத காலத்திற்குள் குத்தகைக்கு கொடுத்தவரால் ரூபா 63 மில்லியன் ஆன மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குத்தகைக்கு பெற்றவருக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், குத்தகைக்கு பெற்றவர் குத்தகை ஆதனத்தை ஒப்படைத்து ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குத்தகைக்கு கொடுத்தவர் தரப்பினரால் அதற்கு எதிராக மற்றும் ஒப்பந்தத்தின் அடிப்படை நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதால் மேற்படி வைப்புத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

3.1.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் அறவிடப்படாத மீதிகள்.

(அ) 2020 கணக்கு வருடத்தில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் மீதிப் பட்டியல் மற்றும் இணக்கக் கூற்றின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 1598 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அவ்வேறுபாடு ரூபா 1610 ஆக காணப்பட்டதுடன் இத் தவறு திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 26/21015 மற்றும் 23/2020 இன் பிரகாரம் முற்பணம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 மாதங்களுக்கான கணக்காண்டில் அறவிடப்பட்டு முடிக்கப்பட வேண்டிய போதிலும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் 04 அதிகாரிகளுக்கு 2020 ஆம்

வருடத்தில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 16,000 ஆன மீதியொன்று நடப்பாண்டின் இறுதி வரையில் அறவிடப்படுதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 21/2015 இன் பிரகாரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 08 மாதங்களுக்குள் விழா முற்பணம் அறவிடப்பட்டு முடிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள 07 அதிகாரிகளுக்கு 2021 ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 70,000 ஆன விழா முற்பணத் தொகையில் கணக்காண்டிற்குள் எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்டச் செயலகங்களுக்கு இணைக்கபட்டிருந்த 07 அதிகாரிகளுக்கு 2020 ஆம் வருடத்தில் வழங்கப்பட்டிருந்த விழா மற்றும் விசேட முற்பணத் தொகையில் 2021 ஆம் வருடத்தில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 14.850 ஆன மீதியில் நடப்பாண்டில் எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) கமத்தொழில் அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள மாவட்டச் செயலகங்களில் சேவையாற்றும் 27 அதிகாரிகளிடமிருந்து தவறுதலாக மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 127,960 ஆன மீதியை அந்த அதிகாரிகளுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாக காட்டப்பட்டு கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வருகின்ற மரணித்த அதிகாரி ஒருவரின் அறவிடப்பட வேண்டிய ரூபா 2500 ஆன விழா முற்பண நிலுவை அறவிடப்படுவதற்காக தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகை பிரதான கடனாளியிடம் அல்லது பிணையாளரிடமும் , பிரதான கடனாளி மரணித்திருப்பின் அவரது வாரிசுகளிடமிருந்தும் அறவிடப்பட முடியாவிட்டால், அது தொடர்பாக விரைவில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட வேண்டியுள்ள போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) அமைச்சின் நிலையான பதவியணிக்கு உரித்தல்லாத அமைச்சர் ஒருவரின் சாரதியாகப் பணியாற்றிய தனிப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த விழா

முற்பணத் தொகையான ரூபா 5000 ஆன பெறுமதியில் எவ்வித தவணைக் கொடுப்பனவுகளுமின்றி ஊழியர் சேவையிலிருந்து விலகியிருந்தார். 3 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற நிலுவைக் கடன் மீதியைப் பொறுப்பானவரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

4. மனித வள முகாமைத்துவம்.

கமத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட நிலையில் 12 பதவிகளும், மூன்றாம் நிலையில் 5 பதவிகளும், இரண்டாம் நிலையில் 200 பதவிகளும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 13 பதவிகளும் வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன் அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கோ அல்லது சரியான நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையைத் திருத்துவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆர்.எம்.ரத்நாயக்க.
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.